
KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)


வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!

JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com www.aaxelinsurance.com
AAXEL

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP

Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE

RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST

ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*



மலர்:- 33, 14 August 2026 இதழ்:- 21

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600


## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் 12ம் 1ம் 16ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# ஜனாதிபதிக்கும் சட்டத்தரணிகள் சங்கத்திற்கும் இடையில் சந்திப்பு! அபாயத்தை எதிர்கொள்ளாமல் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது! - அநுர



மாற்றத்திற்கான பயணத்தின் போது ஏற்படும் அபாயங்கள் காரணமாக தனது பதவியை இழக்க நேர்ந்தால், பதவியிலிருந்து விலகத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் 12 ஆகஸ்ட் 2026 புதன் கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் போது ஜனாதிபதி இதனை கூறியுள்ளார்.

அபாயங்களை எதிர்கொள்ளாமல் மாற்ற த்தை ஏற்படுத்த முடியும் என்று தாம் நம்பவில்லை என்றும், எனவே அந்த அபாயத்தை ஏற்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். (4ம் பக்கம் பார்க்க)

# போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு! அநுரா வழியில் விஜய்!

போதைப் பொருள் இல்லாத தமிழக த்தை உருவாக்குவதற்கான உறுதி மொழி ஏற்கும் நிகழ்வு சென்னை மாநிலக் கல்லூரியில் மாநில முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையில் 11 ஆகஸ்ட் 2026 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய முதலமைச்சர், மாநிலத்தில் போதைப் பொருள் அச்சுறுத்தலை ஒழிக்க மக்கள், குறிப்பாக மாணவர் கள் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று உணர்ச்சிப்பூர்வமாக வேண்டுகோள் விடுத்தார். (8ம் பக்கம் பார்க்க)



## Reecha:- ஒரு கனவில் விழுந்த கல்







# என்ன செய்யப் போகின்றோம்?



நல்லது செய்யப் பிறந்த நீ தீயதையாதல் செய்யாதிரு' என்று நம்முன்னோர் கூறினர். ஆனால் தீயதையே நினைத்து, தீயதையே பேசி, தீயதையே செய்யும் சிலரும் நம்மத்தியில் இருக்கவே செய்கின்றனர். அவ்வகையான ஒருவர் மக்களின் பிரதிநிதியாக இருப்பது நம் எல்லாருக்குமே வேதனை யாகும். (5ம் பக்கம் பார்க்க)


THINKING OF
SELLING OR BUYING A HOME?
www.AgentSiva.com
Your neighborhood sales representative
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!
RE/MAX
ACE EXPERIENCE THE DIFFERENCE REALTY INC., BROKERAGE
INDEPENDENTLY OWNED & OPERATED
we are ace
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
MLS
Piravien Siva
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com
23 Years Real Estate Experience
150 Consumers Rd #109, North York, ON M2J 1P9, Canada
Bus: 416-293-4500
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Adelaide Ave E / Simcoe St
Oshawa $699,000
3+2 Beds • 2 Baths • 9 Rooms
high-demand rental area
Kingston Rd & Sheppard Ave E
Scarborough $710,000
3+2 Beds • 3 Baths • 8 Rooms
open living and dining area
Islington Ave / Steeles Ave W
Toronto $749,000
4 Beds • 2 Baths • 8 Rooms
Corner Condo Townhouse
Neilson Road & Sheppard
Scarborough $839,000
4+1 Beds • 3 Baths • 7+3 Rooms
Location, location, location!
Danforth and Dawes
Toronto $839,999
2+1 Beds • 2 Baths • 7 Rooms
Corner suite, unobstructed views
Williamson & Westney
Ajax $849,000
3 Beds • 3 Baths • 7 Rooms
Detached 2-storey home
Rogers and Dufferin St
Toronto $849,999
3 Beds • 2 Baths • 6+1 Rooms
fully renovated from top to bottom
Markham Rd & Lawrence Ave
Scarborough $999,000
3+3 Beds • 4 Baths • 6+5 Rooms
fully renovated bungalow
Harmony Road / Conlin Road
Oshawa $999,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Upgraded from top to bottom
Cameo St / Burkolder Dr
Pickering $999,900
3 Beds • 3 Baths • 7 Rooms
Newly built detached home
Hwy10 / Hwy 89
Shelburne $999,900
5 Beds • 5 Baths • 10 Rooms
Luxurious savile row model home
Markham/Steeles
Markham $999,999
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Fin.basement with sep.entrance
Markham Rd/ Lawrence Ave E
FOR LEASE
Scarborough $2,700
3 Beds • 1 Baths • 6 Rooms
Recently refreshed with new paint
Markham Rd & Sheppard Ave
FOR LEASE
Scarborough $2,250
1+1 Beds • 1 Bath • 5 Rooms
Open concept w/ natural sunlight
Simcoe St/ Windfields Farm Dr
FOR LEASE
Oshawa $1,500
1 Bed • 1 Bath • 3 Rooms
Basement with sep entrance
Markham & Denison
FOR LEASE
Markham $1,450
1 Bed • 1 Bath • 4 Rooms
Basement with sep entrance

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 - 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங் களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தை களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# இந்தியா - இலங்கை உறவுகள் குறித்து சந்தோஷ் ஜா - ரில்வின் சில்வா கலந்துரையாடல்



அண்மைய காலத்தில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் வளர்ச்சி யடைந்துள்ள இராஜதந்திர மற்றும் கலாசார உறவுகள் இந்தியாவின் தற் போதைய அரசியல் நிலைமை குறித் தும், இலங்கையின் அரசியல் கலாசார த்தில் ஏற்பட்டுள்ள நேர்மறையான மாற்ற ங்கள் குறித்தும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில் வின் சில்வா ஆகியோர் கலந்துரையாடி னர்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வா ஆகியோருக்கு இடை யிலான சந்திப்பொன்று 11 ஆகஸ்ட் 2026 செவ்வாய்க்கிழமை முற்பகல் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை காரியாலயத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போது, அண்மைய காலத்தில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் வளர்ச்சியடைந்துள்ள இராஜ தந்திர மற்றும் கலாசார உறவுகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

மேலும், இந்தியாவின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்தும், இலங்கையின் அரசியல் கலாசாரத்தில் ஏற்பட்டுள்ள நேர்மறையான மாற்றங்கள் குறித்தும் இதன் போது சிறப்பாகக் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் தொழில்நுட்பத் துறை மற்றும் சிறு, நடுத்தர அளவிலான தொழில்முனை வோருக்கான பயிற்சிகள் உள்ளிட்ட துறைகளில் இலங்கைக்கு வழங்கப்படும் ஒத்துழைப்புகள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

இச்சந்திப்பில் இந்திய உயர்ஸ்தானிக ராலயத்தின் அரசியல் பிரிவின் முதன் மைச் செயலாளர் கலாநிதி ராம்பாபு செல்லப்பா மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் வெளிநாட்டுப் பிரிவின் பொறுப்பாளர் கல்பனா மதுபாஷிணி ஆகியோரும் கலந்துகொண்டனர்

இதேவேளை இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதராக எரிக் மேயர், அமெரிக்காவின் வொஷிங்டன் டி.சி.யில் உள்ள வெளியுறவுத்துறை அலுவலகத் தில் உத்தியோகபூர்வமாக பதவியேற்றுக் கொண்டுள்ளார்.

# இலங்கை விமான பாதுகாப்புத் துறையில் புதிய வரலாறு படைத்த வசந்தி முருகேசு!

இலங்கையின் சிவில் விமானப் பாது காப்புத் துறையில் வசந்தி முருகேசு புதிய வரலாற்றைப் படைத்துள்ளார். Airport & Aviation Services (Sri Lanka) (Private) Limited நிறுவனத் தில் பாதுகாப்பு மார்ஷலாக (Secur ity Marshal) பதவியேற்றுள்ள அவர் இந்தப் பதவியை வகிக்கும் இலங்கையின் முதல் பெண் என்ற பெருமையை வசந்தி முருகேசு பெற்றுள்ளார்.

அவரது நியமனம் இலங்கையின் சிவில் விமானப் பாதுகாப்புத் துறை யில் பெண்களின் பங்களிப்புக்கான முக்கியமான மைல் கல்லாக அமை ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# ஜனாதிபதிக்கும் சட்டத்தரணிகள் சங்கத்திற்கும் இடையில் சந்திப்பு!

# அபாயத்தை எதிர்கொள்ளாமல் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது! - அநுர

மாற்றத்திற்கான பயணத்தின் போது ஏற்படும் அபாயங்கள் காரணமாக தனது பதவியை இழக்க நேர்ந்தால், பதவியிலிருந்து விலகத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் 12 ஆகஸ்ட் 2026 புதன்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் போது, ஜனாதிபதி இதனை கூறியுள்ளார்.

அபாயங்களை எதிர்கொள்ளாமல் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று தாம் நம்பவில்லை என்றும், எனவே அந்த அபாயத்தை ஏற்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தனது பாதுகாப்பு தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பொறுப்புக் கூற வேண்டியுள்ளதாகவும், எனினும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த விசாரணைகளின் ஊடாக தனக்கு உயிரச்சுறுத்தல் இருப்பதை தான் அறிந்துள்ளதாகவும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாற்றத்தினால் ஏற்படும் அபாயத்தின் காரணமாக நான் எனது பதவியை இழந்தால், அதை ஏற்றுக்கொண்டு பதவியிலிருந்து விலக நான் தயாராக இருக்கிறேன் என்று அவர் அதன்போது கூறியுள்ளார்.



நிறைவேற்று அதிகாரத்தையும் பெரும்பான்மை அதிகாரத்தையும் அரசியலமைப்புக்கு அப்பாற்பட்டு பயன்படுத்தப் போவதில்லை என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். அவ்வாறு அதிகாரத்தை அரசியலமைப்புக்கு அப்பாற்பட்டு பயன்படுத்த வேண்டிய அவசியமும் தமக்கு கிடையாது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இச்சந்திப்பு சுமார் ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக வெற்றிகரமாக நடைபெற்ற இக் கலந்துரையாடலில், நீதிபதிகளின் ஓய்வு ஊதிய வயதெல்லையை நீடிப்பது தொடர்பான 22 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதுடன், அது குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் கருத்துகளும் ஆலோசனைகளும் இங்கு முன்வைக்கப்பட்டன.

இங்கு முன் வைக்கப்பட்ட அனைத்துக் கருத்துகள் குறித்தும் கவனம் செலுத்திய ஜனாதிபதி, அது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு மற்றும் நீதிமன்றக் கட்டமைப்பின் மேம்பாட்டிற்காக அரசாங்கம் திட்டமிட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் விளக்கமளித்தார். நீதியை நிலைநாட்டும் செயற்பாடானது நீதிமன்றங்களால் மாத்திரம் இடம் பெறுவதில்லை என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அது விசாரணைகள், வழக்குத் தாக்கல், நீதிமன்றம் ஆகிய அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த செயற்பாடாகும் என்றும், அதன்படி, அந்த செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்காக சட்டமா அதிபர் திணைக்களம், இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு, இலங்கை பொலிஸ் மற்றும் அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் மனிதவளத்தை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் குறிப்பிட்டார். மேலும், இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவின் சேவைகளை மாவட்ட மட்டத்தில் பரவலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும்,மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன், பொதுமக்கள் எளிதில் அணுகும் வகையில் மேன்முறையீட்டு நீதிமன்ற நடவடிக்கைகளை மாகாண மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், மக்களுக்கு நீதிமன்றச் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்காக மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், நீதிமன்றங்களுக்குத் தேவையான பௌதிக வசதிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார். எனவே நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது எல்லையை நீடிப்பது தொடர்பான முடிவு எந்தவொரு நபரையும் அல்லது குழுவையும் இலக்காகக் கொண்டதல்ல, மாறாக நாட்டின் பொது நலனுக்காக எடுக்கப்பட்ட ஒரு தீர்மானமாகும் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இந்த சீர்திருத்தங்கள், முழுமையான கட்டமைப்புசார் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பரந்த மறுசீரமைப்புகளின் ஒன்று மாத்திரமேயாகும் எனவும், இது தனது தனிப்பட்ட கருத்து அல்லது அரசாங்கத்தின் தனிப்பட்ட கருத்து அல்ல எனவும் ஜனாதிபதி இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன் நீதிபதிகளின் ஓய்வு ஊதிய வயது எல்லையை நீடித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் கொள்கை ரீதியான எதிர்ப்புகள் எதுவும் இல்லை எனத் தெரிவித்த இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதிகள், இந்தத் தீர்மானம் தொடர்பில் மேலும் ஆராய்ந்து ஏதேனுமொரு பொதுவான இணக்கப்பாட்டுக்கு வருவது பொருத்தமானது என்றும் பரிந்துரைத்தனர்.



# இந்திய வெளியுறவுச் செயலரின் வருகை!




ஆறு கட்சிகள் சேர்ந்து உருவாக்கிய கூட்டு அல்லது அவர்களுடைய வார்த்தைகளில் சொன்னால், இடை யூடாட்டத் தளம் அல்லது மேடை தொடர்ச்சியாக சந்திப்புகளை முன்னெடு த்து வருகிறது. கடந்த வாரம் அவர்கள் முதலில் அரசுத் தலைவர் அனுரவை சந்தித்தார்கள். அதைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர். அதன்பின் அடுத்த நாள் கொழும்பில் உள்ள இந்திய தூதுவர். என்றிவ்வாறாக பல்வேறு தரப்பினர்களையும் அவர்கள் சந்தித்து வருகிறார்கள்.

மேலும் தமிழகத்திற்கும் அவர்கள் செல்ல இருப்பதாக அந்த ஆறு கட்சி தலை வர்களில் ஒருவராகிய ரவுத் ஹக்கீம் அண்மையில் தமிழகத்துக்குச் சென்ற போது திருச்சி விமான நிலைய த்தில் வைத்து ஊடகவியலாளர்களுக்கு கூறியிருக்கிறார்.

கடந்த புதன்கிழமை நாட்டுக்கு வருகை தந்த இந்திய வெளியுறவுச் செயலரையும் 6 கட்சிகளின் கூட்டாகச் சந்திப்பதற்கு அவர்கள் முயற்சித்ததாக உறுதிப்படுத்தப் படாத ஒரு தகவல் உண்டு. எனினும் இந்திய வெளியுறவுச் செயலர் எல்லாத் தமிழ்க் கட்சிகளையும் ஒன்றாகச் சந்தி த்திருக்கிறார். ஆறு கட்சிகளின் கூட்டை அவர் சந்தித்து இருந்திருந் தால் அது அந்த கூட்டு க்கு மேலும் ஓர் அங்கீகாரமாக இருந்திருக்கும்.

கடந்த வாரம் முழுவதும் அவர்கள் முன்னெடுத்த சந்திப்புகள் அவர்களு டைய அரசியல் முக்கியத்துவத்தைப் பலப்படுத்தும் நோக்கிலானவை. அது ஒரு தேர்தல் கூட்டு அல்ல என்று அவர்கள் கூறிக் கொள்கிறார்கள். தமிழ் பேசும் சமூகங்களின் பொதுவான பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதற்கான ஒரு மேடை என்றும் அதை அவர்கள் அழைக்கிறார்கள். தேர்தல் கூட்டாக அவர்கள் செயல்படுவதில் சவால்கள் உண்டு. ஏனென்றால் அரசியல் இலக்கு களைப் பொறுத்தவரை அவர்களுடைய எல்லா அரசியல் இலக்குகளும் ஒரு புள்ளியில் சந்திப்பவை அல்ல. சந்திக்கக் கூடிய அரசியல் இலக்குகளின் அடிப் படையில் அவர்கள் அந்த மேடையில் அமர்ந்து உரையாடலாம்.

இவ்வாறு ஆறு கட்சிகளின் கூட்டா னது கடந்த வாரம் முன்னெடுத்த சந்திப்புகளில் முதலாவதாக ஜனாதி பதியை சந்தித்த போது அவர்கள் தங்களுடைய மூன்று பிரதான கோரி க்கைகளை அவரிடம் முன் வைத்தி ருக்கிறார்கள். அதேசமயம் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரை சந்தித்த போது அவர்களுடைய மூன்று கோரிக்கைகளில் ஒன்று ஆகிய மாகாண சபை தேர்தல்களை வேகமாக நடத்த வேண்டும் என்ற கோரிக்கை இந்திய தூதரகத்துக்கு விருப்பத்துக்குரியதாக இருந்திருக்கலாம். கொழும்புக்கு வந்த இந்திய வெளியுறவுச் செயலரும் அதைத் தான் வலியுறுத்தியுள்ளார். மாகாண சபை தேர்தலை ஆகக்கூடிய விரைவாக நடத்துமாறு.

அதேசமயம் அந்தக் கூட்டின் முதலா வது கோரிக்கை ஆகிய ஒரு புதிய யாப்பை உருவாக்கும் விடயத்தில் இந்தியா அதிகம் கரிசனை காட்டுவ தாகத் தெரியவில்லை. ஒரு புதிய யாப்பை உருவாக்கினால் 13ஆவது திருத்தம் இல்லாமல் போய்விடும்.

13வது திருத்தம் என்பது இந்திய-இலங்கை உடன்படிக்கையின் மிஞ்சி இருக்கும் ஒரே பகுதி. இந்திய இலங்கை உடன்படிக்கை என்பது இரண்டு நாடுகளுக்கு இடையிலானது. இரண்டு நாட்டின் தலைவர்களால் எழுதிக் கொள்ளப்பட்ட அனைத்துலக அங்கீ காரம் உள்ள உடன்படிக்கை. ஆனால் அந்த உடன்படிக்கை எழுதும் போது இருந்த பிராந்திய யதார்த்தம் இப் பொழுது இல்லை. உள்நாட்டு யதார்த்த மும் இப்பொழுது இல்லை.

அந்த உடன்படிக்கை இப்பொழுது நடைமுறையில் இல்லை என்றும் சொல்லலாமா?

ஏனென்றால் அந்த உடன்படிக்கையின் இதயமான பகுதி என்று வருணிக்கத் தக்கது, இந்தியாவின் புவிசார் பாதுகாப்பு நலன்களைப் பாதுகாப்பதா கும்.

இச்சிறிய தீவை இந்தியாவின் புவிசார் பாதுகாப்பு நலன்களுக்கு விரோதமான சக்திகள் பயன்படுத்துவ தற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று இந்திய-இலங்கை உடன்படிக்கையின் போது பரிமாறிக் கொள்ளப்பட்ட கடிதங்களில் கூறப்பட்டுள்ளது. இந்தக் கடிதங்கள் உடன்படிக்கையின் பின்னி ணைப்பாகக் காணப்படுகின்றன.

ஆனால் 2009க்குப் பின்னரான கடந்த 17 ஆண்டுகளிலும் இச்சிறிய தீவினுள் சீனா கால் பதித்து விட்டது. அம்பாந் தோட்டை துறைமுகத்தில் சீனா 99 ஆண்டுகளுக்கு அசையாமல் இருக் கும். அது போல கொழும்புத் துறை முக பட்டினத்திலும் சீனாவின் ஆதிக்கம் இருக்கும்.

இப்படிப் பார்த்தால் இலங்கைத்தீவின் இரண்டு பெரிய துறைமுகங்கள் சீனா வின் செல்வாக்குக்குள் காணப்படு கின்றன. ஆனால் சீனா இலங்கையிலிரு ந்து கிட்டத்தட்ட 400 கடல் மைல் தொலைவில் உள்ள ஒரு பிராந்தியப் பேரரசு.

இந்தியா கிட்டத்தட்ட 38 கடல் மைல் தொலைவில் உள்ள ஒரு பேரரசு. இப்படிப் பார்த்தால் இது இந்தியாவின் செல்வாக்கு மண்டலம். இந்தியாவின் செல்வாக்கு மண்டலத்துக்குள் சீனா இரண்டு துறைமுகங்களை தன் செல் வாக்குக்குள் வைத்திருக்கிறது. எனவே இந்திய-இலங்கை உடன்படிக்கையின் பின்னிணைப்பாக இணைக்கப்பட்ட கடிதங்களில் கூறப் பட்டுள்ளது போல இப்பொழுது உள் நாட்டு யதார்த்தமும் இல்லை. பிராந்திய யதார்த்தமும் இல்லை.




# என்ன செய்யப் போகின்றோம்?

நல்லது செய்யப் பிறந்த நீ தீயதையாதல் செய்யாதிரு' என்று நம்முன்னோர் கூறினர். ஆனால் தீயதையே நினைத்து, தீயதையே பேசி, தீயதையே செய்யும் சிலரும் நம்மத்தியில் இருக்கவே செய்கின்றனர். அவ்வகையான ஒருவர் மக்களின் பிரதிநிதி யாக இருப்பது நம் எல்லாருக்குமே வேதனையாகும்.

08 ஆகஸ்ட் 2026 அர்ச்சுனா இராமநாதன் பாராளுமன்றத்தில் றீச்சா நிறுவனத்தின் பழங்கள் போமலின் என்ற வேதியியல் பொருட்கள் கொண்டவை எனக் குற்றஞ் சாட்டியிருந்தார். அது உண்மையானதா? அது உண்மையானது என்பதற்கான ஆதாரங்கள் அவரிடம் இருப்பின் அது தொடர்பாக தொடர்புபட்ட அதிகாரிகளுக்கு அல்லது பொறுப்பான நிறுவனத்துக்கு அதனைச் சமர்ப்பித்து நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தாரா? அவரது கோரிக்கை தொடர்பாக அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்படவில்லையா? அது தொடர்பாக வேறு ஏதாவது முறையான நடவடிக்கைகள் எடுத்தும் அவை உரியவாறு கவனிக்கப்படாமல் உதாசீனம் செய்யப்பட்டிருந்ததா? அவர் அதனது குற்றச்சாட்டில் உறுதியுடை வரெனில் குறைந்தது அதனைப் பொதுவெளியில் முன்வைத்திருந்தாரா? காய்ச்ச லுக்குக் காலை வெட்டியெடுப்பதில்லையே.

இவ்வாறு எதனையும் செய்யாது அதுபற்றிப் பாராளுமன்றத்தில் பேசுவதன் நோக்கம் ஒன்றே ஒன்றாகத்தான் இருக்க முடியும். அது வெறும் தனிமனித தாக்குதல் மட்டுமே. றீச்சா நிறுவன உரிமையாளரின் அரசியல், பொருளாதாரப் பின்புலம் மற்றும் தனிமனித இயல்புகள் எதுவாகவும் இருக்கலாம். அவர் மீதான தனிப்பட்ட கருத்துக்கள் வேறுபடலாம். ஆனால் தொழில்நிறுவனம் வேறு. இவ்வாறு செய்வ தனால் அந்நிறுவனத்துக்கும், அதனால் பயன்பெறுவோர்க்கும், எமது பிரதேசத்து க்கும் ஏற்படக்கூடிய எதிர்மறை விளைவுகள் பற்றியே நாம் சிந்திக்க வேண்டும். சில நூறு தொழிலாளரின் வாழ்க்கை, பாரிய முதலீடு, பிரதேசத்தின் தொழில் வளர்ச்சி, சுற்றுலா மற்றும் மனமகிழ்வு போன்ற பல பங்கங்கள் தொடர்புடைய வளர்ந்து வரும் ஒரு முயற்சியை ஒருவர் தனக்குரிய சிறப்புரிமையைப் பயன்படுத்தி பாழாக்குவதை எவ்வாறு நாம் அனுமதிப்பது? ஆக்குவது எவ்வளவு கடினம். அதனை அழிப்பது இலகுவானது. எமது பிரதேசத்தில் இது போன்ற ஆயிரம் தொழில்முயற்சிகள் உருவாக வேண்டும் என அங்லாய்க்கும் நாம் உருவாகியுள்ள ஒருசிலவற்றையும் இப்படியானவர்களால் இழக்க வேண்டுமா?

சாவகச்சேரி வைத்தியசாலையில் தொடங்கி இன்றுவரை அர்ச்சுனாவால் பொது வெளியில் அவையும் அநாகரிகமான முறையில் வைக்கப்பட்ட எந்தவொரு குற்றச் சாட்டுகளுக்குமான சான்றுகள் நீதிமன்றங்களிலோ அன்றி தொடர்புபட்ட அதிகாரி களிடமோ இதுவரை கையளிக்கப்படவில்லை என்ற ஒன்றே போதும் அவரின் குற்றச்சாட்டுகள் பற்றிய நோக்கத்தை அறிவதற்கு. கருத்துகளைக் கருத்துகளால் வெல்ல முடியாதவனே தனிமனித தாக்குதலில் இறங்குகின்றான்.

அவரது பதவியும் அதன் வழியிலான சிறப்புரிமையும் மக்களால் தரப்பட்டவை. அவை மக்களின் நலன்களுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும். தவறுமிடத்து அந்த மக்களே அதற்கான எதிர்வினைகளை ஆற்றவேண்டும். அவர் ஒரு பைத்தியம், அவர் அப்படித் தான், ஏதாவது கதைத்தால் எம்மை இழிவுபடுத்துவார் என நாம் ஒதுங்கியிருக்கப் போகிறோமா? அவ்வாறான அவரது எதிர்மறையான செயல்களைத் தொடர்ந்தும் அனுமதிக்கப் போகிறோமா? - அருந்தவபாலன் மாஸ்டர்

# 22வது திருத்தத்திற்கு எதிராக நீதிமன்றம் செல்லும் கூட்டு எதிர்க்கட்சி

நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது எல்லையை அதிகரிக்கும் வகையில் அரசாங்கத் தினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக உயர் நீதிமன்ற த்தை நாடுவதற்கு கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகி யுள்ளது. இதற்கமைய, 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்ட மூல வர்த்த மானி அறிவித்தலுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யக் கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

வெளியிடப்பட்டுள்ள புதிய சட்ட மூலத்தின்படி, உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது எல்லை 67 ஆகவும், மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது எல்லை 65 ஆகவும் திருத்தப்பட்டுள்ளது. எனினும் பிரதம நீதியரசர் ஓய்வு பெற வேண்டிய திகதியானது, அவருக்கு 67 வயதாகும் திகதி அல்லது அவர் பிரதம நீதியரசராகப் பதவியேற்ற நாளில் இருந்து 6 ஆண்டுகள் நிறை வடையும் திகதி ஆகிய இரண்டில் எது முதலில் வருகிறதோ அந்தத் திகதியாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் சர்வஜன வாக்கெடுப்பு இல்லாமல் இம்மாற்றங்களைச் செய்ய முடி யாது எனவும், ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின்படி நீதிபதிகள் 'அரச அதிகாரிகள்' என்பதால் தங்களது சொந்த ஓய்வு வயது விவகாரத்தில் முடிவெடுக்க அவர்களுக்கு அதிகார மில்லை எனவும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் குற்றம்சாட்டியுள்ளார். மேலும் குறிப் பிட்ட சிலரை இலக்காகக் கொண்டு தனிப்பட்ட முறையில் இச் சட்டம் உரு வாக்கப்படுவதாகவும் எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதேவேளை தமிழ் அரசியல் கைதிகள் இருவருக்கு பிணை வழங்கப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டதான செய்தி ஒன்று அண்மையில் வெளிவந்தது. ஆனால் அவர்கள் இன்னமும் சிறைக்குள் தான் இருக்கின்றார்கள் என மு.கோமகன் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் இருந்து இலங்கை திரும்புவோருக்கு குடிவரவு ஒப்புதல் அனுமதி அளிப்பதற்கு அமைச்சரை முடிவு!

யுத்தத்தின் போது, அங்கீகரிக்கப்பட்ட இறங்கு துறைகள் ஊடாகவும் மற்றும் முறையான கடவுச்சீட்டைப் பயன்படுத்தாமல், நாட்டிலிருந்து வெளியேறி, இந்தியாவில் அகதிகள் அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டுள்ளவர்கள் தமது இலங்கையர்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தியுள்ளவர்கள், சுயமாக எமது நாட்டுக்கு மீண்டும் திரும்பும் போது, அவர்களுக்கு குடிவரவு ஒப்புதல் அனுமதி வசதிகளை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் 11 ஆகஸ்ட் 2026 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு முடிவுகளை அறிவித்தபோதே அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்டவாறு தெரிவித்தார். அவரது அறிவிப்பில் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தின் போது நாட்டில் நிலவிய உறுதிப்பாடற்ற சூழ்நிலை காரணமாக, அங்கீகரிக்கப்பட்ட இறங்கு துறை முகத்தின் ஊடாக மற்றும் முறையான கடவுச்சீட்டைப் பயன்படுத்தாமல் இந்தியாவிற்கு இடம ் பெயர்ந்து சென்று, பின்னர் இந்திய அரசாங்கத்தால் அகதிகளாகப் பதிவு செய்யப்பட்டவர்கள், ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்தின் மூலம் சுயமாக எமது நாட்டுக்குத் மீண்டும் திரும்புவதற்கு எதிர்பார்க்கின்றார்கள்.

அவர்கள் எமது நாட்டுக்கு மீண்டும் வருகை தருவதற்குத் தேவையான குடிவரவு ஒப்புதல் அனுமதி வசதிகள்



தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனைக்கமைய கீழ்க்காணும் படிமுறைகளை மேற்கொண்டு, மேற்குறிப்பிட்டவாறு இந்தியாவிற்குச் சென்றுள்ள இலங்கையர்களுக்கு மீண்டும் எமது நாட்டுக்குத் திரும்பி வருவதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2006-08-01இற்கு முன்னர், அங்கீகரிக்கப்பட்ட இறங்குதுறை மற்றும் செல்லுபடியாகும் கடவுச்சீட்டைப் பயன்படுத்தாமல் நாட்டிலிருந்து வெளியேறி, இந்தியாவில் இடம்பெயர்ந்த அந்நாட்டின் இலங்கை வெளிநாட்டுத் தூதரகத்தின் மூலம் தமது இலங்கையர் எனும் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொண்டவர்கள் தொடர்பாக அரச புலனாய்வு சேவையிடமிருந்து ஒப்புதல் அனுமதி அறிக்கையைப் பெற்றுக் கொள்ளல்.

அவர்கள் கொலை, அரசுக்கு எதிரான துரோகம் மற்றும் சட்டத்தின் விசேட ஏற்பாடுகள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளவாறான அல்லது விதிக்கப்பட்டுள்ள குற்றங்களை மேற்கொள்ளாத ஆள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

குறித்த ஆட்களுக்கான தற்காலிக வெளிநாட்டுக் கடவுச் சீட்டை வழங்கி 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்திற்கமைய, எவ்வித சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் அங்கீகரிக்கப்பட்ட இறங்குதுறை ஊடாக நாட்டுக்கு வருகை தருவதற்கான வாய்ப்பை வழங்குதல். 2006-08-01 தொடக்கம் எமது நாட்டில் யுத்தம் முடிவடைந்த 2009-05-19 ஆம் திகதி வரை, அங்கீகரிக்கப்பட்ட இறங்குதுறை மற்றும் முறையான கடவுச்சீட்டைப் பயன்படுத்தாமல் நாட்டிலிருந்து வெளியேறி இந்தியாவுக்கு முறையற்ற வகையில் புலம்பெயர்ந்தவர்ளை, மேற்குறிப்பிட்டவாறு ஆள் அடையாளத்தைச் உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் அரச புலனாய்வு சேவையிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஒப்புதல் அனுமதியைப் பெற்றுக் கொண்ட இலங்கையர்களுக்கு, 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தின் மூலம் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், குறித்த சட்டத்தின் கீழ் எவ்வித சட்ட நடவடிக்கையையும் மேற்கொள்ளாமல் அங்கீகரிக்கப்பட்ட இறங்குதுறை ஊடாக நாட்டுக்கு வருகை தருவதற்கு வாய்ப்பு வழங்குதல்.

கொலை, அரசுக்கு எதிரான துரோகம் மற்றும் சட்டத்தின் விசேட ஏற்பாடுகள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளவாறான அல்லது விதிக்கப்பட்டுள்ள குற்றங்களுக்கு தவறாளர்களாக அடையாளங் காணப்பட்ட ஆட்களாக இருப்பின், அவர்களை இறங்குதுறைகளில் தடுத்து வைத்து தேவையான தொடர் சட்ட நடவடிக்கைக்கு ஏற்புடைய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படுதல் என்றார்.


## கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

### கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# ஆசனப்பட்டி அணிய மறுத்த சிறுவன்! இரத்துச் செய்யப்பட்ட விமான சேவை!



கனடாவில் சிறுவன் ஒருவன் ஆசனப் பட்டி அணிய மறுத்ததைத் தொடர்ந்து விமானப் பயணம் ஒன்று இரத்து செய்யப்பட்ட சம்பவம், விவாதத்தை கிளப்பியுள்ளது.

ஒரு சிறு குழந்தை தனது இருக்கையில் நின்று கொண்டு ஆசனப்பட்டி அணிய மறுத்ததால் முனையத்திற்கே திரும்ப வேண்டியிருந்தது என்று போர்ட்டர் எயார்லைன்ஸ் விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் கடந்த 6 ஆம் திகதி விக்டோரியாவிலிருந்து டொரண்டோ நோக்கிப் புறப்படத் தயாராக இருந்த 'போர்ட்டர் எயார்லைன்ஸ்' (Porter Airlines) விமானத்திலேயே இடம் பெற்றுள்ளது.

விமானம் புறப்படத் தயாரான போது, சிறுவன் ஒருவன் இருக்கையில் நின்று கொண்டும் ஆசனப்பட்டி அணிய மறுத்தும் அடம் பிடித்துள்ளான். சிறுவனை ஆசனப்பட்டி அணிய வைப்பதற்கு பெற்றோர் மற்றும் விமானம் ஊழியர்கள் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.

பாதுகாப்பு விதிமுறைகளின்படி இத்தகைய ஆபத்தான சூழலில் விமானத்தை செலுத்த முடியாது என்பதால் அதனை மீண்டும் முனையத்துக்கு கொண்டு சென்று அந்தச் சிறுவனையும் அவரது பெற்றோரையும் இறக்கி விட ஊழியர்கள் தீர்மானித்தனர்.

இருப்பினும், இந்த தாமதம் காரணமாக நள்ளிரவுக்குப் பிறகு ஓடுபாதை (Runway) மூடப்பட்டதால், விமானத்தை அன்றைய தினம் இயக்க முடியாமல் போனது. இதன் காரணமாக ஏனைய பயணிகள் அனைவரும் மறுநாளுக்கு வேறு விமானங்களில் மாற்றிப் பதிவு செய்யப்பட்டனர்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, இத்தகைய சூழல்களில் குழந்தைகளை எவ்வாறு நடத்த வேண்டும் மற்றும் விமான நிறுவனங்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்து இணையத்தில் காரசாரமான விவாதங்கள் எழுந்துள்ளன.

# மரண தண்டனையை ஏற்றுக் கொள்ள மறுக்கும் கொழும்பு பேராயர் மெல்கம்



கத்தோலிக்க திருச்சபையின் மறைக் கல்வித் தொகுப்பின் 2267வது பத்தியின் படி, மரண தண்டனையை ஏற்றுக் கொள்ள முடியாது என கொழும்பு பேராயர் மேல்கம் கார்டினல் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான கடமைகளைத் தவற விட்ட குற்றச் சாட்டில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை குறித்த தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும்போதே அவர் .தனைத் குறிப்பிட்டார்.

மரண தண்டனையானது மனித கண்ணியத்தை மீறுவதாகவும், திருச்சபையின் போதனைகளின்படி எந்தவொரு மரண தண்டனையையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் கார்டினல் ஆண்டகை சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், இலங்கை நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மை மீது தாம் முழு நம்பிக்கை வைத்துள்ளதாகவும், அதன் தீர்மானங்களிலோ அல்லது விவாதங்களிலோ எந்த வகையிலும் தலையிட உத்தேசிக்கவில்லை என்றும் கொழும்பு பேராயர் இல்லம் தெரிவித்துள்ளது.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக அண்மைக் காலமாக இடம் பெற்று வரும் விவாதச் சூழலில் கொழும்பு பேராயர் இல்லம் இத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுடன் முழுமையான ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகிறது. இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள முக்கிய சூத்திரதாரி அல்லது சூத்திரதாரிகள் மற்றும் அனைத்துத் தரப்பினரையும் வெளிக்கொணர்வதும், நாட்டின் சட்டத்திற்கு அமைவாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதும் கொழும்பு பேராயர் இல்லத்தின் தீவிர எதிர்பார்ப்பாகும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# சிறைச்சாலை வன்முறைகளும் சதித்திட்டக் குற்றச்சாட்டுகளும்

இலங்கையின் பல்வேறு சிறைச்சாலைகளில் தொடர்ச்சியாக அரங்கேறிவரும் வன்முறைகளும் அமைதியின்மையும் நாட்டின் சட்டம், ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு கட்டமைப்பின் மீது பெரும் கேள்விகளை எழுப்புகின்றன.

பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் கடந்த வாரம் உரையாற்றுகையில் இந்தத் தொடர் வன்முறைச் சம்பவங்கள் தனித்தனியான தற்செயல் நிகழ்வுகள் அல்ல என்றும் அரசாங்கத்தின் போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட நாசகார வேலைகளும் சதித் திட்டங்களுமே இதன் பின்னணியில் இருக்கக்கூடும் என்றும் கூறியிருக்கிறார்.

புலனாய்வுத்துறையின் அறிக்கைகளும் இத்தகைய சதி முயற்சிகளின் சாத்தியக் கூறுகளை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜீலை 5.6 நீர்கொழும்பு சிறைச்சாலையில் போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடைய இரு எதிரெதிர் பாதாள உலகக் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல் வன்முறையாக வெடித்தது. கைதிகள் சிறை அதிகாரிகளைத் தாக்கியதுடன் தப்பியோட முயன்றதில் 7 சிறை அதிகாரிகள் உட்பட 26 பேர் உயிரிழந்தனர். 70க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஆகஸ்ட் 6 இரவு கொழும்பு மெகசின் – வெலிக்கடை சிறைச்சாலையில் சிறைத் தொகுதியை உடைத்துக் கொண்டு ஏறத்தாழ 40 கைதிகள் தப்பிச் செல்ல முயன்றபோது மூண்ட மோதலில் ஒரு கைதி உயிரிழந்ததுடன் 10 பேர் காயமடைந்தனர்.

ஆகஸ்ட் 7 காலை குருவிட்ட சிறைச்சாலையில் சிறைச்சாலைக்குள் கடத்தப்பட்ட போதைப் பொருள் பொதி ஒன்று அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து வெடித்த கலவரத்தில், துப்பாக்கிச் சூடு மற்றும் மோதல்களில் இரு கைதிகள் உயிரிழந்தனர். 13 பேர் காயமடைந்தனர்.

ஆகஸ்ட் 7 பல்லன்சேன புனர்வாழ்வு நிலையத்தில் உணவுக்குப் பின் சுமார் 30 கைதிகள் சிறையின் கூரை மீதேறி தொடர் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், பொலிஸாரும் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

குறுகிய கால இடைவெளியில் வெவ்வேறு பிரதேசங்களில் உள்ள சிறைகளில் ஒரே பாணியிலான வன்முறைகளும் தப்பிச் செல்லும் முயற்சிகளும் இடம்பெற்றுள்ளமை அமைச்சரின் 'திட்டமிட்ட சதி' என்ற சந்தேகத்திற்கு வலுச் சேர்க்கிறது. பாதாள உலகக் கும்பல்களும் போதைப்பொருள் வலையமைப்புகளும் தங்களது சட்டவிரோத சாம்ராச்சியத்தை ` பாதுகாக்கவும் அரசாங்கத்தின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளைத் திசை திருப்பவும் சிறைச்சாலைகளை ஒரு போர்க்களமாகப் பயன்படுத்துகின்றனவா என்ற கோணத்தில் தீவிர விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

இருப்பினும், சதித்திட்டம் என்ற கோணத்தை மட்டும் மையமாகக் கொண்டு இந்த விவகாரத்தை அணுகுவது முழுமையான தீர்வாகாது. இலங்கையின் சிறைச்சாலைகளில் நிலவும் நெடுநாட்களாகத் தீர்க்கப்படாத கட்டமைப்புப் பிரச்சினைகளே இத்தகைய சதிகளுக்குச் சாதகமான சூழலை உருவாக்கிக் கொடுக்கின்றன என்பதை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

10,000 கைதிகளுக்கு மட்டுமே கொள்ளளவு கொண்ட தேசிய சிறைச்சாலைக் கட்டமைப்பில் தற்போது 39,000க்கும் அதிகமானோர் அடைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. கொள்ளளவை விட நான்கு மடங்கு அதிகமாகக் கைதிகள் நெரிசலுடன் வாழும் சூழல், அடிப்படை வசதிகளின்மை மற்றும் பிணை சட்டங்களில் நிலவும் தாமதங்கள் ஆகியவை கைதிகளிடையே இயல்பாகவே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்துவதற்கு காரணங்களாக உள்ளன.

எனவே, அரசாங்கம் வன்முறைகளைக் கட்டுப்படுத்த இராணுவப் பாதுகாப்பு மற்றும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வது ஒரு புறமிருக்க, சிறைச்சாலைகளுக்குள் போதைப்பொருள் ஊடுருவுவதைத் தடுக்கும் நவீன கண்காணிப்பு அமைப்புகளை நிறுவுதல், சிறை அதிகாரிகளின் ஊழல்களைக் களைதல், மற்றும் கைதிகளின் நெருக்கடியைக் குறைப்பதற்கான சட்டரீதியான சீர்திருத்தங்களை விரைவுபடுத்துதல் என்பன உடனடித் தேவைகளாகும். சதித் திட்டங்களை முறியடிப்பதுடன் நின்றுவிடாமல், சிறைச்சாலைத் துறையை முழுமையான மனித உரிமைகளுடனான மறுவாழ்வு மையங்களாக மாற்றியமைப்பதே இத்தகைய வன்முறைச் சங்கிலிக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கும்.

அதேவேளை, அரசாங்கத்துக்கு நெருக்கடியைக் கொடுப்பதற்காக சிறைச்சாலைகளுக்கள் கலவரங்களைத் தூண்டி சட்டம் ஒழுங்கு நிலைவரங்களை சீர்குலைப்பதற்கு அரசியல் சக்திகளும் பின்னணியில் நின்று செயற்படுகினறனவா என்பது குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்துவது அவசியம். பாதாள உலகக் குழுக்களுக்கும் அரசியல் வர்க்கத்தினருக்கும் இடையிலான தொடர்பு ஒன்றும் இரகசியமானது அல்லவே.

# போதைப்பொருள் குற்றங்களுக்கு மரண தண்டனை

ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் 10 ஆகஸ்ட் 2026 திங்கட்கிழமைகூடிய `நாடே ஒன்றாக' தேசிய செயற்பாட்டுக் குழுவில், போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்குவது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நச்சுப் போதைப்பொருள் அச்சுறுத்தலானது தற்போது தனிப்பட்ட உறவுகளைத் தாண்டி முழுமையான பொருளாதார மற்றும் சமூக கட்டமைப்பையே பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளதுடன், இந்நிலைமை மேலும் அதிகரித்துச் செல்வது குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

போதைப்பொருள் கடத்தல் மூலம் உழைக்கப்படும் அளவற்ற செல்வத்துடன் தொடர்புடைய குற்றவியல் சூழலானது தேசிய பொருளாதாரம், சுற்றுலாத்துறை மற்றும் சமூக தார்மீக நெறிமுறைகளுக்கு பாரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டதுடன்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் குற்றச்செயல்கள் குறித்து அஞ்சக் கூடிய ஒரு சமூகத்தை உருவாக்குவதற்காக கடுமையான சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியமும் இக்கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

# போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு! அநுரா வழியில் விஜய்!



போதைப் பொருள் இல்லாத தமிழகத்தை உருவாக்குவதற்கான உறுதிமொழி ஏற்கும் நிகழ்வு சென்னை மாநிலக் கல்லூரியில் மாநில முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையில் 11 ஆகஸ்ட் 2026 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய முதலமைச்சர், மாநிலத்தில் போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிக்க மக்கள், குறிப்பாக மாணவர்கள் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று உணர்ச்சிப்பூர்வமாக வேண்டுகோள் விடுத்தார்.

தனிப்பட்ட பொறுப்புணர்வு, குடும்பப் பாதுகாப்பு புனர்வாழ்வுக்கான ஆதரவு மற்றும் மாநிலத்தின் வளர்ச்சி ஆகியவற்றில் கவனம் செலுத்தும் வகையில், அந்த நிகழ்வில் அவர் ஒரு உறுதிமொழியை ஏற்கச் செய்தார்.

இந்த உறுதிமொழி, தனிநபர்களை போதைப்பொருள் பயன்பாட்டைத் தவிர்க்கவும், மற்றவர்களை போதைப் பழக்கத்திலிருந்து மீட்கவும், மறுவாழ்வு முயற்சிகளுக்கு ஆதரவளிக்கவும், தமிழ்நாட்டில் சட்டவிரோதப் பொருட்களை ஒழிப்பதில் அரசுக்கு தீவிரமாக உதவவும் கடமைப்படுத்துகிறது.

போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு' (Drug-Free Tamil Nadu) இணையதளம் வாயாகப் பெருமளவிலான மக்கள் மின்னணு உறுதிமொழி (e-pledge) ஏற்றதாக ஓர் அதிகாரி தெரிவித்தார்.

மாநில அரசு, மாவட்ட அளவிலான கிளைகளுடன் கூடிய விசேட போதைப்பொருள் தடுப்புப் பணிப் படை' (ANTF) பிரிவை அமைத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்கள் சுற்றுப்புறத்தில் நடைபெறும் சட்டவிரோத போதைப் பொருள் தொடர்பான நடவடிக்கைகளை அடையாளம் வெளிப்படுத்தாமல் தெரிவிக்கும் வகையில், 'போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு செயலி'யையும் அரசு அறிமுகப்படுத்தியிருந்தது.

பாடசாலை சூழலைப் பாதுகாக்கவும், உள்ளூர் அளவில் சக மாணவர்களிடையே போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை மேற்கொள்ளவும் இளைஞர் தன்னார்வலர் குழுக்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தமிழக முதல்வர் விஜய் – அரசின் சார்பில் பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளில் பறிமுதல் செய்யப்பட்ட போதை பொருள் மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலை பொருள்கள் அழிக்கப்பட்ட தன் காணொளியை பார்வையிட்டார்.

அத்துடன் போதை மற்றும் புகையிலை இல்லாத வளாகம்' தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரத்தையும் முதல்வர் விஜய் தொடங்கி வைத்தார்.

போதை பொருளை ஒழிப்பதில் சிறப்பாக கடமையாற்றிய காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு முதல்வர் பதக்கங்களை வழங்கி சிறப்பித்தார்.

போதை பொருள்களின் பாவனையை குறைத்திட விழிப்புணர்வு ஏற்படுத்தி சிறப்பாக செயல்பட்ட பாடசாலை மற்றும் கல்லூரிகளில் மூன்று பிரத்யேக தன்னார்வலர்கள் குழுக்களுக்கு பரிசு வழங்கினார்.

இந்த நிகழ்வில் 37 மாவட்டங்களில் இருந்து 2000 மாணவர்கள் நேரில் வருகை தந்தனர். அத்துடன் மாவட்ட ஆட்சியருடன் இணைந்து ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் காணொளி வாயிலாக பங்குபற்றி உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். என குறிப்பிடப்பட்டுள்ளது.

## நீதிபதிகளின் பதவிக்கால நீடிப்பு:- மகாநாயக்கர்களின் கடிதம் பரிசீலனைக்குப் பின்னரே வர்த்தகமானியில் வெளியிடப்பட்டது- நளிநத்

நீதிபதிகளின் பதவிக்காலத்தை நீடிப்பது தொடர்பில் மகாநாயக்க தேரர்கள் அனுப்பிய கடிதம் முழுமையாகப் பரிசீலிக்கப்பட்ட பின்னர், ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் மகாநாயக்க தேரர்களை நேரில் சந்தித்து விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தியதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதன் பின்னரே அரசியலமைப்பின் 22ஆவது திருத்தமும், நீதிமன்ற சட்டம் (திருத்தச்) சட்டமூலமும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அரசியலமைப்பின் 22ஆம் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமா, அல்லது சாதாரண பெரும்பான்மை போதுமா, அல்லது பாராளுமன்ற பெரும்பான்மையுடன் மக்கள் வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டுமா என்பதை உயர் நீதிமன்றமே தீர்மானிக்கும் எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.


SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

தந்தது உன்தன்னை, கொண்டது என்தன்னை, சங்கரா! யார் கொலோ சதுரர்!' என்று மாணிக்கவாசக சுவாமிகள் இறைவனிடம் கூறியதாக கதையுண்டு. 'நான் என்னை உன்னிடம் தந்தேன், நீ என்னிடம் உன்னைத் தந்தாய், இந்தக் கொடுக்கல் வாங்கலில் யாருக்கு லாபம்' என்பது இதன் பொருள்.

- - - - - - - - - - - - - - - -

தென்னிலங்கை அரசியலில் இப்போது உக்கிர தாண்டவம் இடம் பெறுகிறது. இலங்கையை முன்னர் ஆட்சி புரிந்த சகல அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் வஞ்சகம் இல்லைாமல் ஏதோ ஒரு நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

சிலர் தடுப்புக் காவலில் வைக்கப்படுவதும், சிலர் பிணையில் வெளிவர அனுமதிக்கப்படுவதும், சிலருக்கு பயணத்தடை விதிக்கப்படுவதுமாக சட்டத்தின் சகல அலகுகளும் செயற்படுகின்றன. அடுத்ததாக கைதாகப்படுபவர் யாராக இருக்கலாமென்ற அச்சமும் அங்கலாய்ப்பும் ஏற்றத்தாழ்வின்றி சகலரையும் வாட்டிக் கொண்டிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளராகவிருந்தவரும் சட்டத்தரணியும் முன்னாள் அமைச்சருமான அகிலவிராஜ் காரியவாசத்தின் கைது பலரையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக விருந்தபோது அவரின் ஆலோசகர்களில் ஒருவராக அகிலவிராஜ் கடமையாற்றிய வேளையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பாக இவர் கைதானதால், இதன் தொடர்ச்சியாக ரணிலும் விசாரணைக் குட்படுத்தப்படும் சாத்தியம் இருப்பதாக பெரும்புள்ளிகள் கருதுகின்றனர்.

அண்மையில் முதன்முதலாக சஜித் பிரேமதாசவின் அலுவலகம் சென்ற ரணில் அங்கு நாமல் ராஜபக்ச உட்பட பல கட்சிக்காரர்களையும் சந்தித்து நடத்திய கூட்டத்தின் தொடராக குற்றஞ்சாட்டி வருகின்றன. சிறைச்சாலைகளில் பல அடுக்குப் பாதுகாப்புகள் ஏற்பாடாகியிருப்பினும் தாக்குதல்கள் இடம்மாறி இடம் தொடர்கிறது. அநுர அரசை ஆட்டங் காணச் செய்வதற்கே இந்த அசம்பாவிதங்கள் இடம் பெறுவதாகச் சொன்னாலும் அதனை ஏற்றுக்கொள்ள ஆட்சி பீடம் மறுத்து வருகிறது. சிறைச்சாலைக் கலவரங்கள் அநுர அரசின் நிர்வாகத் தோல்வியென்று தேர்தலில் தோற்றுப்போன மகிந்தவின் பொதுஜன பெரமுன அறிக்கைகள் வாயிலாக தெரிவித்து வருகிறது.

கூட்டு என்ன நிலைப்பாடு எடுக்கும் என்பது பற்றியும் உயர்மட்டத்தில் ஆராயப்படுகிறது. இப்போதைக்கு இவ்விடயத்தில் அலட்டிக் கொள்ள விரும்பாத ஆறு தமிழ்க் கட்சிகளின் கூட்டு தனது செயற்திட்டத்தை அங்குமிங்கும் அலைபாய விடாது தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஆறு கட்சிகளின் பிரதிநிதிகளையும் மிகக்குறுகிய கால அவகாசத்தில் ஜனாதிபதி அநுர குமர திஸ்ஸநாயக்க சந்தித்து உரையாடினார். ஏற்கனவே தமிழரசு கட்சியினருடன் தனியாக களை உரையாடல் மூலம் தீர்ப்பதில் அரசாங்கம் உறுதிப்பாட்டுடன் இருப்பதாக ஜனாதிபதி அநுர குமர வலியுறுத்தினார் என்றும், பரந்த தேசிய நலன்களுக்கு பயனளிக்கும் தீர்வுகளை முன்னெடுக்குமாறு அரசியல் பிரதிநிதிகளை அவர் ஊக்குவித்தாரென்றும் அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கை சுட்டியுள்ளது.

முன்னைய காலங்கள் போல வாய்மொழி வார்த்தைகள் வழியாக இணக்கம் காணப்பட்டது போன்றும் உறுதிமொழிகள் வழங்கப்பட்டது போன்றும் தோற்றம் காட்டப்பட்டி

கட்டுரையாளர்:-
பனங்காட்டான்

ருப்பினும் இச்சந்திப்பில் திட்டவட்டமான எந்த ஒரு முடிவும் எட்டப்படவில்லை. மாகாணசபை தேர்தல் எப்போது என்பது தெரியாது. புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுமா என்பதும் தெரியாது. பொதுமக்கள் காணிகள் அவர்களிடம் எப்போது மீளளிக்கப்படுமென்பதும் தெரியாது. அந்தவகையில் இந்தச் சந்திப்பு அநுர குமரவை பொறுத்தளவில் வெற்றிகரமான ஒன்று.

இச்சந்திப்பு இடம் பெற்ற அதே காலப் பகுதியில் இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி கொழும்புக்கு மேற்கொண்ட பயணம் எதிர்பாராததா அல்லது முற்கூட்டியே திட்டமிடப்பட்டதா என்பது சரியாக தெரியவில்லை. ஆனாலும், ஆறு தமிழ் கட்சிகளின் பிரமுகர்களோடு இவரது சந்திப்பு விரைந்து இடம் பெற்றது. தங்கள் அரசியல் மனக்குறைகளை இச்சந்திப்பில் இந்திய வெளியுறவு செயலாளரிடம் இவர்கள் கொட்டித் தீர்த்தனர் என்றே கூறலாம்.





1971சேகுவேரா புரட்சியின் போதும், 1987-89 கால இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் போதும் முறையே சிறிமாவோ பண்டாரநாயக்கவினாலும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினாலும் அழிக்க முடியாது போன ஜே.வி.பியின் நிகழ்கால வடிவமான தேசிய மக்கள் சக்தி, சிறைச்சாலை சம்பவங்களால் கலக்கமடையாது என்ற பாணியில் அநுர குமர தலைமையிலான ஆட்சி தனது செயற்பாட்டை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

1983 தமிழின அழிப்பின் பின்னணியில் செயற்பட்டவைகள் என்று கூறி ஜே.வி.பி நவசமாஜ கட்சி, கம்யுனிஸ்ட் கட்சி ஆகிய மூன்றையும் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். தடை செய்த

நடத்திய சந்திப்புகளின் போது முன் வைக்கப்பட்ட மூன்று அம்சங்களே இச்சந்திப்பிலும் முன்வைக்கப்பட்டதால், அவற்றை உள்வாங்கி இலகுவாக தட்டி வீழ்த்துவது அவருக்கு சுலபமாகி விட்டது.

மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பாக விபரிக்கும் போது இது தொடர்பான விடயங்களை ஆராய்வதற்காக நாடாளுமன்ற தேர்தல் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அக்குழுவில் எழுப்பப்படும் விடயங்கள் குறித்து அவர்களுடன் கலந்துரையாட எதிர் பார்த்திருப்பதாகவும் தெரிவித்து முதலாவது பந்தை இலகுவாக ஓரந் தள்ளி விட்டார்.

அடுத்து புதிய அரசியலமைப்பு பற்றி

# உள்ளகத்தில் உத்தரவாதமில்லை! அயலகத்தில் நம்பகத் தன்மையில்லை! சங்கரா! யார் கொலோ சதுரர்!

அகிலவிராஜ் மீதான நடவடிக்கை இடம் பெற்றிருக்கலாமெனவும் கருத்து நிலவுகிறது. சகல எதிரணிகளையும் இணைத்து அதற்கு ரணில் தலைமை தாங்கவிருப்பதாகவும், விரைவில் இவர்கள் மகாநாயக்கர்களை சந்தித்து அநுர அரசின் செயற்பாடுகள் பற்றி எடுத்துக் கூறவிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்த காலத்தில் அகிலவிராஜ் கைது இடம்பெற்றிருக்கிறது.

அரசியலில் கிழட்டு நரியென வர்ணிக்கப்படும் ஜே.ஆரின் அரசியல்வாரிசான ரணில், குள்ளநரியென சமகாலத்தில் அடையாளம் காணப்படுபவர். இவரது ஐக்கிய தேசிய கட்சி தொடர்ந்து தேர்தல்களில் படுதோல்வியை சந்தித்த போதிலும் அதன் தலைமைப் பதவியை விட்டு விலகாதவர் இவர் என்பதைப் புரிந்து கொண்டால் இவரது வழித்தடம் எதனை நோக்கியது என்பதை விரிவுபடுத்தத் தேவையில்லை.

தெற்கிலுள்ள சிறைச்சாலைகளில் தொடர்ந்து இடம் பெற்று வரும் அசம்பாவிதங்கள், தாக்குதல்கள், கொலைகள் பற்றிய உண்மையான தகவல்கள் இன்னமும் முழுமையாக வெளிவரவில்லையென எதிர்க்கட்சிகள் துடன் அவற்றின் சில தலைவர்களையும் தடுப்புக் காவலில் வைத்தார். சிறைச்சாலை அனர்த்தங்களை காரணம் காட்டி அநுர குமர அரசு அதே நடைமுறையை பின்பற்றி சில அரசியற் கட்சிகளுக்கும் அதன் முக்கிய பிரதானிகளுக்கும் தடை விதிக்கலாமென்ற அச்சமும் தெற்கில் பரவலாக காணப்படுகிறது.

சிங்களதேச அரசியல் குடும்பங்கள் என்று அழைக்கப்படுபவர்களில் பலர் - இளையோர் மூத்தோர் என்று வித்தியாசமின்றி அரசின் சட்ட நடவடிக்கைகளுக்குள் தள்ளப்படலாமென்ற எதிர்பார்ப்பும் சில பிரதான அணிகளிடம் காணப்படுகிறது. முன்னாள் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச (இவர் மகிந்த ராஜபக்சக்களின் குடும்பத்தைச் சார்ந்தவர் அல்ல) அண்மையில் தமது மகன் கைதான பின்னர் எவ்வாறு அமைதிப்படுத்தப்பட்டுள்ளார்- அதாவது, அவரது குரல் எவ்வாறு முடக்கப்பட்டதென்பதை சிலர் இவ்விடயத்தில் முன்னுதாரணம் காட்டி வருகின்றனர். .

அநுர அரசுக்கு எதிராக தெற்கின் அரசியல் அணிகள் ஒன்றாகி செயற்படும் நிலைமை ஏற்படக்கூடுமானால், அண்மையில் உருவாக்கப்பட்ட ஆறு தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின்

ஆராயப்பட்டது. ஜனாதிபதி முறையை ஒழிப்பது உள்ளிட்ட அரசியலமைப்பு சீர்திருத்தத்துக்கான தமது அரசின் உறுதிப்பாட்டை நம்பும் வகையில் வலியுறுத்திய அநுர குமர, அவசரமாக வரைபு செய்யப்பட்ட அரசியலமைப்பு திருத்தத்தை தொடர்வதை விட, பரந்த தேசிய ஒரு. மித்த கருத்தை உருவாக்குவதற்கு உடனடி முன்னுரிமை வழங்க வேண்டியதே முக்கியமெனக் கூறி இரண்டாவது பந்தையும் இன்னொரு பக்கம் தள்ளி விட்டார். (இவ்வேளையில் புதிய அரசியலமைப்புச் சட்டம் குறிப்பிட்ட ஓர் அரசியல் கட்சியால் தன்னிச்சையாக அறிமுகப்படுத்தப் படாமல் அனைவரையும் உள்ளடக்கிய தேசிய உரையாடல் மூலம் உருவாக்கப்பட வேண்டுமென தமிழரசுக் கட்சி சார்பில் சுமந்திரன் எடுத்துக் கூறியது அரசியல் சர்ச்சையை உருவாக்கியுள்ளது).

காணிப் பிரச்சனை பற்றி வடக்கு கிழக்கு மலையகம் என்ற வகையில் விரிவாக ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டாலும் அந்தந்த பிரதேசங்களின் சமூகங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து தமிழ்ப் பிரதிநிதிகளால் கவலைகள் எழுப்பப்பட்டது. கூட்டத்தின் முடிவில் நீண்டகால பிரச்சனை

மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி தம்மை சந்தித்த தமிழர் பிரதிநிதிகளிடம் விக்ரம் மிஸ்ரி வினவியபோது, இவ்விடயத்தில் தற்போதைய அரசாங்கத்துக்கோ ஜனாதிபதிக்கோ விருப்பம் காணப்படவில்லையென்பதை அவர்கள் நேரடியாகவே அவரிடம் தெரிவித்தனர். 13ம் திருத்தத்தின் கீழ் மாகாண சபை தேர்தல் இடம்பெற வேண்டியதை வலியுறுத்திய இவர்கள் இவ்விடயத்தில் இந்தியா தனது பங்களிப்பை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்தபோது, இத்தேர்தலை விரைவில் நடத்த இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தும் என உறுதியளித்தார்.

இதன் தொடர்ச்சியாக ஜனாதிபதி அநுர குமரவை சந்தித்த போது மாகாண சபை தேர்தலை விரைவில் நடத்த வேண்டுமென ,ந்திய வெளியுறவு செயலாளர் கூறியதாகவும், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் புதிய அரசியலமைப்பு ஏற்பாடுகளை முழுமையாக அமல்படுத்த வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது. (12ம்பக்கம் பார்க்க)

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

08 ஆகஸ்ட் 2026 முதல் 14 ஆகஸ்ட் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

### மேலதிக விபரங்களுக்கு:-

### ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி சரோஜினிதேவி லோகநாதபிள்ளை

நாரந்தனை ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 15 யூன் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சரோஜினிதேவி லோகநாதபிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6ம் மாத நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி கந்தசாமி

அனலைதீவு 5ம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களது 6ம்மாத நினைவு நாள் 12 ஆகஸ்ட் 2026 புதன்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31வது நாள் நினைவஞ்சலி



### திருமதி ஆறுமுகம் சின்னம்மா

யாழ்.சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி ஆறுமுகம் சின்னம்மா அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 24 யூலை 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 25 யூலை 2026 சனிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி ஆறுமுகம் சின்னம்மா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பிராசா காசிலிங்கம்

யாழ்.ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராசா காசிலிங்கம் அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 03 ஆகஸ்ட் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தம்பிராசா காசிலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 25வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி விநாசித்தம்பி தங்கம்மா

புங்குடுதீவு 10ம்வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது 25வது ஆண்டு நினைவு நாள் 28 யூலை 2026 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர் களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னத்துரை கந்தையா

மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை கந்தையா அவர்களது 12வது ஆண்டு நினைவு நாள் 11 ஆகஸ்ட் 2026 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னத்துரை கந்தையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




18 யூலை 2026 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாஸ்கரன் தர்மினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் நிஜேசன் பாஸ்கரனின் 21வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் நிஜேசன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




19 யூலை 2026 ஞாயிற்றுக்கிழமை யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவாஜினி பற்குணமாணிக்கம் அவர்களது 30வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 யூலை 2026 புதன்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு துரைராஜா குமாரசாமி அவர்களது 35வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




25 யூலை 2026 சனிக்கிழமை கனடா வாழ் துன்னாலை கரவை மக்கள் மன்றத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்.




24 யூலை 2026 வெள்ளிக்கிழமை சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி ஆறுமுகம் சின்னம்மா அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் 25 யூலை சனிக்கிழமை அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறபடபு உணவு வழங்கினார்கள்




26 யூலை 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ரஜீதன் பிரசாந்தி இணையர்களின் செல்வப்புதல்வி சக்தி ரஜீதனின் முதலாவது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சக்தி ரஜீதன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




28 யூலை 2026 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி தங்கம்மா விநாசித்தம்பி அவர்களது 25வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




02 ஆகஸ்ட் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி சுதர்சினி கோணேஸ்வரன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




03 ஆகஸ்ட் 2026 திங்கட்கிழமை ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா காசிலிங்கம் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




07 ஆகஸ்ட் 2026 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சோமநாத் தர்க்கா தம்பதிகளின் செல்வப்புதல்வி ஜெசியா சோமநாத்தின் 9வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வி ஜெசியா தனது பெற்றோர்கள் சகோதரனுடன் இணைந்து 08 ஆகஸ்ட் 2026 சனிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




24 யூலை 2026 ஞாயிற்றுக்கிழமை 2026 கனடாவில் வசிக்கும் திரு திருமதி சோமநாத் தர்க்கா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஜேரியான் சோமநாத்தின் 12வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வன் ஜேரியான் தனது பெற்றோர்கள் சகோதரியுடன் இணைந்து 09 ஆகஸ்ட் 2026 ஞாயிற்றுக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




11 ஆகஸ்ட் 2026 செவ்வாய்க்கிழமை மாசீன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை கந்தையா அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




11 ஆகஸ்ட் 2026 செவ்வாய்க்கிழமை ஆடிஅமாவாசை விரத உபயமாக ஊரெழ கிழக்கைச் சேர்ந்த திரு சின்னப்பு நல்லையா அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




12 ஆகஸ்ட் 2026 புதன்கிழமை அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களது ஆறாம் மாத நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




14 ஆகஸ்ட் 2026 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சுதா மகேந்திரராஜா, அஸ்வின் ஸ்ரீதரன், ஷர்மி விக்னேஸ்வரி ஆகியோர் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.

# "மாஸ்" திரை நிழலில் கரையும் கண்ணியமான அரசியல்! தமிழ்நாட்டை அச்சுறுத்தும் ஆபாசப் பண்பாடு!






தமிழ்ப் படங்களின் தாக்கம் திரையரங்குகளுடன் நின்று விடுவதில்லை. திரையில் தோன்றும் காட்சிகள் அரங்குகளின் சுவர்களைத் தாண்டிச் சென்று சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கையிலும், சிந்தனையிலும் நேரடியாக பிரதிபலிக்கின்றன.

கடந்த வாரம் தமிழ்நாட்டை உலுக்கிய ஓர் அரசியல் விவகாரம் இதற்கு சிறந்த உதாரணம்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கக்கூடிய 'காவேரி நதி நீர் பங்கீடு' பற்றிய அரசியல் போராட்ட மேடையில் பெண்களை இழிவுபடுத்தும் வகையிலான ஓர் ஆபாசமான இரட்டை அர்த்த வாசகம் உச்சரிக்கப்படுகிறது.

வாசகம் வைரல் ஆகிறது. உச்சரித்தவர் கைது செய்யப்படுகிறார். தொண்டர்கள் பஸ்களை மறித்து செருப்புக்களை எறிந்து தாக்கும் மட்டத்திற்கு போராட்டம் வெடிக்கிறது. இறுதியில் நீதிமன்றம் தலையிட்டு பிணை வழங்குகிறது.

தமிழகத்தில் ஆயிரம் பிரச்சினைகள். விவசாயிகளின் வாழ்வாதாரப் பிரச்சனை முக்கியமானது. அதைப் பற்றி ஆழமாக பேச வேண்டியதொரு தருணத்தில், ஒரு பெண்ணின் பெயரையும் உடலையும் மையமாகக் கொண்டு பேசப்பட்ட கீழ்த்தரமான நகைச்சுவை, முக்கியமான பிரச்சினையை குழிதோண்டி புதைத்து விடுகிறது.

ஒரு மாநிலத்தின் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் ஒருவர், பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் ஒரு முன்னனி நடிகையின் பெயரை வைத்து இப்படி அநாகரிகமாகப் பேசுவதையும், அதை அங்கிருந்த கூட்டத்தினர் உரக்கச் சிரித்துக் கொண்டாடுவதையும் ஒரு தனிப்பட்ட சம்பவமாக கடந்து போய்விட முடியாது. இது சமகால தமிழக அரசியல் பண்பாட்டின் அவலநிலையைக் காட்டும் முகம்.

இந்தச் சம்பவம் சமூகத்தில் இத்தனை பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதற்கு மற்றொரு முக்கியக் காரணம், சம்பந்தப்பட்டிருக்கும் நபர்கள் தான். மூன்று பிரதான கதாபாத்திரங்கள் இருக்கின்றன.

திரையுலகில் தனக்குக் கிடைத்த பிரம்மாண்டமான புகழை மூலதனமாகக் கொண்டு, அரசியல் கட்சி தொடங்கி இன்று முதலமைச்சராக உயர்ந்திருக்கும் ஒரு திரை நட்சத்திரம் (விஜய்).

எந்தவித முன் முடிவும் இன்றி, தன் தொழிலைச் செய்து கொண்டிருக்கும் வேளையில் திடீரென அரசியல் சேற்றுக்குள் இழுத்து வரப்பட்ட ஒரு முன்னணி நடிகை (த்ரிஷா).

சினிமா பின்னணி கொண்ட பாரம்பரிய அரசியல் குடும்பத்தில் தோன்றி, தானும் நடிகராகவும் தயாரிப்பாளராகவும் வலம் வந்து, இன்று மாநிலத்தின் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் மனிதர் (உதயநிதி ஸ்டாலின்).

இந்த மூவருமே சினிமாவுக்கும் அரசியலுக்கும் இடையிலான எல்லைக்கோடுகள் மங்கலாகியிருக்கும் சூழலின் பிரதிநிதிகள். இன்று திரையில் எந்தச் சொல் பேசப்படுகிறதோ, அது எந்தத் தொனியில் உச்சரிக்கப்படுகிறதோ, அதே தொனி தான் அரசியல் மேடையின் ஒலிவாங்கிக்கும் இயல்பாக வந்து சேர்கிறது.

சினிமா மூலம் கட்டியெழுப்பப்பட்ட பிம்பங்கள், ஒரு பெண்ணின் பெயரை மிகச் சாதாரணமாக ஓர் அரசியல் ஆயுதமாக மாற்றிக் கொள்ளும் அளவுக்குத் துணிச்சலைக் கொடுத்திருக்கின்றன.

தமிழ் சினிமாவில் இந்தச் சீரழிவு ஒரே நாளில் நடந்துவிடவில்லை.

ஒரு காலத்தில் சி.என்.அண்ணாதுரை, எம்.கருணாநிதி போன்ற தலைவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் சிந்தனைகளையும், சாதியக் கட்டமைப்புக்கு எதிரான விமர்சனங்களையும், பெண்ணுரிமையையும் மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்கத் திரைப்பட வசனங்களைப் பயன்படுத்தினார்கள். அன்று திரையரங்கு ஒரு சமூக வகுப்பறையாக இருந்தது.

ஆனால், அடுத்தடுத்த தசாப்தங்களில் சுழன்ற காலச்சக்கரம் அந்த நோக்கத்தை அப்படியே தலைகீழாக மாற்றியது.

திரைமொழியில் 'மாஸ் என்ட்ரி', 'பஞ்ச் டயலொக்' என்று சொல்லப்படும் போக்குகள். இவை சமூகக் கருத்துகளைச் சுமந்து செல்லும் கருவிகளாக திரைப்படங்கள் இருந்த நிலையை மாற்றி, கதாநாயகர்களின் 'ஈகோ'வைத் தாங்கிப் பிடிப்பவையாக மாறச் செய்தன.

பெண்கள் வெறும் சதைப்பிண்டங்களாகவும், ஆண்களின் இச்சைகளைத் தீர்க்கும் வடிகால்களாகவும் சித்தரிக்கப்பட்டார்கள். பெண்களைக் கேலி செய்யும் 'ஈவ் டீசிங்' (Eve-teasing) காதலின் தொடக்கப் புள்ளியாக நியாயப்படுத்தப்பட்டது. பெண்ணுடலை இரட்டை அர்த்த வசனங்கள் மூலம் இழிவுபடுத்துவதும், ஆணாதிக்க மனோபாவத்துடன் கீழத்தரமான முறையில் காட்சிப்படுத்திக் காட்டுவதும் வழமையாகிப் போனது.

நகைச்சுவைக் காட்சிகள், பாடல்கள், நடன அசைவுகள் போன்ற சகல வழிமுறைகள் மூலமாகவும் கதாநாயகர்கள் ஆபாசத்தின் எல்லைகளைத் தொட்ட போது, கதாநாயகிகளாகவும், கவர்ச்சிப் பாவைகளாகவும் திரையில் தோன்றிய நடிகைகள் எதுவித வெட்கமும் இன்றி ஒத்துழைத்தார்கள்.

ஊடகவியலில் Cultivation Effect என்றொரு கோட்பாடு உண்டு. ஒரு தவறான நடத்தையை அல்லது அநாகரிகத்தை ஆண்டாண்டு காலமாகத் திரையில் தொடர்ந்து காட்டும்போது, அந்தச் சமூகம் அந்த அநாகரிகத்தையே தனது இயல்பான வாழ்க்கை நெறியாகப் புரிந்துகொள்ளத் தொடங்கும்.

இதனுடன் Para-social Relationship என்ற கோட்பாடு இணையும் போது நிலைமை இன்னும் மோசமாகிறது. திரையில் தோன்றும் நாயகனுடன் ரசிகன் ஒருதலைப்பட்சமான பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டு, அவன் திரையில் எதைச் செய்தாலும் நியாயமானது என்று நம்பத் தொடங்குகிறான்.

அந்தச் சிந்தனைப் போக்கு அரசியல் மேடைக்கு நகரும் போது தான், தலைவன் உதிர்க்கும் ஓர் ஆபாசமான இரட்டை அர்த்தச் சொல்லைக் கூட வெறும் 'நகைச்சுவை' என ஏற்றுக் கொண்டு ஆரவாரம் செய்யும் ஒரு தொண்டர் கூட்டம் உருவாகிறது.

இது ஓர் அரசியல்வாதி சொன்ன கீழ்த்தரமான நகைச்சுவைத் துணுக்கு மாத்திரம் அல்ல. ஒரு சமூகத்தின் சீரழிவைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகும்.

ஓர் இலக்கை அடையவோ அல்லது வெற்றியைப் பெறவோ பெண்களுக்கு எதிரான அநாகரிகத்தைப் பயன்படுத்துவதில் தவறில்லை என்ற மனநிலையை இளம் ஆண்களுக்குக் கற்றுக் கொடுத்த ஒரு சமூகம், பொது இடங்களில் இப்படிப் பேசும் அரசியல்வாதிகளைத் தான் உருவாக்கும். அரசியல் கணக்குகளுக்காகக் காட்டப்படும் போலியான கோபங்களோ, கைது நடவடிக்கைகளோ, பிணை உத்தரவு களோ இங்கு எதையும் மாற்றிவிடப் போவதில்லை.

திரைப்பட நாயகர்கள் மீது கட்டியெழுப்பப்பட்டிருக்கும் தவறான பிம்பங்களை ஆதர்சமாகக் கொண்டு வாழும் இந்தச் சமூகப் போக்கை மாற்றியமைக்காத வரையில், தமிழ்நாட்டையோ அல்லது திரைப்படங்களின் தாக்கத்திற்கு உட்பட்ட பரந்த தமிழ் சமூகத்தையோ இத்தகைய ஆபாச அரசியல் கலாசாரத்தில் இருந்து காப்பாற்ற முடியாது

## உள்ளகத்தில் உத்தரவாதமில்லை!

(9ம் பக்கத் தொடர்ச்சி) கடந்த பல ஆண்டுகளாக இதனையே இந்தியா கூறி வருகிறது. ஆனால் இலங்கை அரசு இதனையிட்டு பெரிதும் ஆர்வம் காட்டுவதாகவோ அல்லது இந்தியாவை பகைக்காது அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதாகவோ எதுவுமே காணப்படவில்லை. சில மாதங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கு பயணம் மேற் கொண்ட ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவுடன் இந்திய பிரதமர் நெருக்கமான பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். அவ்வேளையிலும் கூட பிரதமர் மோடி மாகாண சபை தேர்தல் பற்றியோ தமிழர் பிரச்சனை தீர்வு பற்றியோ தம்மிடம் எதுவும் கூறவில்லையென ரில்வின் சில்வா பகிரங்கமாக ஊடகங்களுக்கு அறியக் கொடுத்திருந்தார்.

சகல தமிழ் கட்சிகளின் பிரமுகர்களையும் இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் கொழும்பில் சில மாதங்களுக்கு முன்னர் சந்தித்து உரையாடிய போது மாகாண சபை தேர்தல்கள் பற்றியும் 13ம் திருத்தம் பற்றியும் அலசப்பட்டது. அப்போது அமைச்சர் ஜெய்சங்கர் பதிலளிக்கையில், நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் செய்யப்பட்ட ஒப்பந்தம் பற்றி பேசிக் கொண்டிருக்கிறீர்கள். அதன் பின்னர் எத்தனையோ மாற்றங்கள் வந்து விட்டன என்று அவர் கூறியதன் அர்த்தத்தை தமிழர் பிரதிநிதிகள் நிச்சயம் புரிந்திருப்பார்கள்.

இப்போதுள்ள நிலைமை என்ன? உள்ளகத்தில் எதற்கும் உத்தரவாத மில்லை. அயலகத்தில் நம்பகத்தன்மை இல்லை. எவருடன் மனம் விட்டுப் பேசியும் எதனையும் பெற முடியாத நிலை. யார் கொலோ சதுரர்?

# மாகாணசபைத் தேர்தலை இனியும் இழுத்தடிக்க முடியுமா?

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி கொழும்புக்கு மேற் கொண்ட அரை நாள் பயணத்தின் போது பல முக்கியமான விடயங்கள் குறித்து ஜனாதிபதி அநுரவுடன் பேச்சு க்களை நடத்தியிருக்கிறார். அதில் ஒன்று, மாகாண சபைகளுக்கான தேர் தலை நடத்துவது பற்றியதாகும்.

இந்தப் பயணத்தின் பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சினால் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையின் எட்டாவது குறிப்பில், மாகாண சபைத் தேர்தல் களை விரைவில் நடத்துவதற்கான உறுதிமொழியைச் செயற்படுத்து மாறும், தமிழ் மக்களின் அபிலாஷை களை நிறைவேற்றும் வகையில் இலங்கையின் அரசியலமைப்பு விதி களை முழுமையாகச் செயற்படுத்து மாறும் இலங்கைத் தலைமையை வெளியுறவுச் செயலாளர் கேட்டுக் கொண்டார் எனக் கூறப்பட்டிருக்கி றது.

அதேவேளை, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன், இந்திய வெளிவிவ காரச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி நடத் திய பேச்சுக்கள் தொடர்பாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில், மாகாண சபை தேர்தல்கள் தொடர்பாகவோ, தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறை வேற்றும் வகையிலான அரசியலமைப்பு விதிகளை முழுமையாக செயற்படுத்து வது தொடர்பாகவோ, இந்திய வெளி விவகாரச் செயலாளர் ஏதேனும் குறிப் பிட்டதாக கூறப்பட்டிருக்கவில்லை. மாகாண சபைகளுக்கு கடைசியாக தேர்தல்கள் நடத்தப்பட்டு 12 ஆண்டு களாகி விட்டது.

மாகாண சபைகளுக்குத் தேர்தலை நடத்துமாறு அழுத்தம் கொடுக்க வேண்டும் என, இந்தியாவிடம் தொடர்ச்சியாக தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்தியாவும் சந்தர்ப்பம் கிடைக்கின்ற போதெல்லாம், இதற்கான அழுத்தங் களைக் கொடுத்துக் கொண்டே வந் தது. ஆனால், இதுவரை ஆட்சியில் இருந்த எந்த ஓர் அரசாங்கமும் அதற்கான நடவடிக்கைகளை எடுத் திருக்கவில்லை.

மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்த ப்படும் என்ற வாக்குறுதி கொடுக்கப் பட்டாலும், அதனை நிறைவேற்ற வேண்டும் என்ற அர்ப்பணிப்பு எந்த அரசாங்கத்திடமும் இருந்திருக்க வில்லை. அதனால் தான் இன்றுவரை இது இழுபறிக்குள்ளான விடயமாக நீடிக்கிறது. அண்மைக்காலத்தில் மாகாண சபை தேர்தல் தொடர்பா கவோ 13 ஆவது திருத்தச் சட்ட த்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவோ, இந்திய தரப்பினால் இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பது சற்று குறைந்திருந்தது.

2024ஆம் ஆண்டு அநுரகுமார திசா நாயக்க புதுடெல்லிக்குச் சென்ற போது இதுபற்றி பேசப்பட்டிருந் தாலும், கூட்டறிக்கையில் அந்த விட யம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

இது மாகாண சபை தேர்தல்களை வலியுறுத்த இந்தியா தவறி விட்டது என்ற விமர்சனங்களுக்கு வழிவகுத்தி ருந்தது.ஆனால் கடந்த டிசம்பரில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய் சங்கரின் கொழும்புப் பயணத்தின் போதும், இப்போது இந்திய வெளியுற வுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரியின் பய ணத்தின் போதும், மாகாண சபைகளு க்கு விரைவாக தேர்தலை நடத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டிரு க்கிறது. ஆனால் இந்த விடயம் பற்றி பேசப்பட்டதையோ, இந்தியா அழுத்தம் கொடுத்ததையோ, ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கை வெளிப்படுத்த வில்லை. இது ஒரு முக்கியமான விடயம்.

இந்தியா இதனை முக்கியமாக பார்க்கி ன்ற அதேவேளை, இலங்கை இதனை முக்கியமான விடயமாக எடுத்துக் கொள்ளவில்லை. அப்படித் தான் இதனை கருதி கொள்ள வேண்டியிரு க்கிறது.

இரண்டு தரப்புக்களும் ஒரு விடயம் பற்றி பேசும் போது, ஒரே குரலில் கூறினால், இணக்கப்பாடு இருக்கிறது என்று அர்த்தம்.

பொதுவாக இது தரப்பு உயர்மட்ட பிரதிநிதிகளின் பயணங்களில் போது, இவ்வாறு இணக்கப்பாடு ஏற்பட்ட விடயங்கள் குறித்து, கூட்டு ஊடக சந்திப்பு நடத்தப்படும் அல்லது கூட்டு ஊடக அறிக்கை ஒன்று வெளியிடப் படும்.

அது, இரண்டு தரப்புக்களும்





இணங்கிக் கொண்ட விடயங்களை, ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்துவ தாக இருக்கும்.

ஆனால் பேசப்பட்ட விடயங்கள் சில, இரண்டு தரப்புக்களுக்கும் உடன்பாடு இல்லாமல் இருந்தால் அல்லது ஒன்று க்கொன்று விருப்பமின்றி அந்த பேச்சு க்கள் நிறைவடைந்திருந்தால், அவ் வாறான கூட்டறிக்கைகள் வெளியி டப்படுவதில்லை. நாகரீகமாக அது தவிர்க்கப்படும்.

இந்திய வெளிவிவகார செயலாளரின் அண்மைய பயணத்தின் முடிவில் அவ்வாறான கூட்டறிக்கை வெளியிட ப்படவில்லை.

மாகாண சபை தேர்தல் தொடர்பாக இந்தியாவின் கருத்தை இலங்கை கவனத்தில் எடுத்துக் கொண்டது அல்லது எடுத்துக் கொள்ளவில்லை என்ற எந்த விடயமும், ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இடம்பெறவில்லை.

இது இந்த விடயத்தை இலங்கை சாதகமானதாக எடுத்துக் கொள்ள வில்லை என்பதை காட்டுகிறது.

அடுத்து, தமிழ் மக்களின் அபிலா ஷைகளை நிறைவேற்றும் வகையில் இலங்கையின் அரசியலமைப்பு விதி களை முழுமையாகச் செயற்படுத்து மாறும் இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தியிருக்கிறார் இந்திய வெளி யுறவுச் செயலாளர் என்று இந் திய வெளியுறவு அமைச்சின் அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது 13ஆவது திருத்தச் சட்டம் என்ற விடயத்தை உள்ளடக்காமல், மறைமுகமாக அதனை பற்றி பேசுவ தாக உள்ளது.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையிலான, ஓர் அர சியலமைப்பு திருத்தம் என்றே 13 ஆவது திருத்தச் சட்டத்தை இந்தியா குறிப்பிட்டு வந்திருக்கிறது.

இந்தியாவின் அழுத்தத்தின் பேரில், இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக, அந்த திருத்தம் கொண்டு வரப்பட்டது.

அதன் மூலமாகவே, மாகாண சபைகள் உருவாக்கப்பட்டிருந்தன. ஆனால், ஆரம்பத்தில் இந்த திருத்தச் சட் டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த அதி காரங்கள் கொஞ்சம் கொஞ்சமாக மத் திய அரசாங்கத்தினால் பறிக்கப்பட்டு இப்போது ஓட்டை பாத்திரம் என்று கூறக்கூடிய நிலையிலேயே அது இருக்கிறது.

13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் மாகாண சபை தேர்தல் தொடர்பாக, இந்தியத் தரப்பு முன்னர் வெளிப்ப டையாக தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தது.

கொழும்பிலும் புதுடெல்லியிலும் இடம் பெற்ற பேச்சுக்களில் மாத்திர மன்றி, ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வுகளின் போதும், இந் திய பிரதிநிதிகளால் பலமுறை இது பற்றி வலியுறுத்தப்பட்டது. 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படு த்துவது தொடர்பாக இந்தியா தொட ர்ச்சியாக வலியுறுத்தி வந்தாலும், அதனை இலங்கையின் ஆட்சியாளர் கள் எவருமே கவனத்தில் கொண்ட தில்லை.

இப்போது இந்தியா தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் அர சியலமைப்பு விதிகளை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு, கேட்டுக் கொண்டிருக்கிறது. இந்த விவகார த்தில், இந்தியா இப்போது சற்றுத் தீவிரமான நிலைப்பாட்டை எடுத்திரு ப்பதாக தெரிகிறது. இந்த தீர்மானத்தி ற்கான காரணங்கள் வெளிப்படா விட வில்லை. தமிழ் மக்களின் அபிலா ஷைகளை நிறைவேற்றும் அரசியல மைப்பு விதிகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதானால், 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள காணி, பொலிஸ் அதிகார ங்கள் உள்ளிட்ட அனைத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கு ஸ்ரீலங்காவின் எந்தவொரு ஆட்சியாளரும் இணங்குவார்களா என்று தெரியவில்லை.

தற்போதைய அரசாங்கத்திற்கு இது ஒரு கடினமான சூழலாக உருவெடு க்கும் எனத் தெரிகிறது. பல்வேறு விடயங்களில் இலங்கைக்கு, இந்தியா அழுத்தம் கொடுக்க முனைகிறது.

இந்தியாவின் பிடியில் இருந்து தப்பி க்கவே அநுரகுமார திசாநாயக்கவின் தலைமையிலான இலங்கை அரசாங்கம் முற்பட்டது.

தித்வா புயலை அடுத்த இந்தியா அறி- வித்த 450 மில்லியன் டொலர் உதவித் தொகுப்பில் இருந்து, 350 மில்லியன் டொலர் கடன்களை பெற்றுக் கொள் வதை தட்டிக் கழிக்கவே பார்த்தது.

பல்வேறு திட்டங்களை செயற்படுத்து வதில் இழுபறிகளை ஏற்படுத்தியது. ஆனால், இந்தியா இப்போது தனது கடுமையான பிடிக்குள் இலங்கையை கொண்டு வந்திருக்கிறது. இலங்கை அரசாங்கம் இதற்கு எப்படி பதிலளிக் கப் போகிறது என்று தெரிய வில்லை.

மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற இந்தியாவின் வலியுறுத்தலை இலங்கை அரசாங்கம் நீண்டகாலத்து க்கு புறக்கணிக்க முடியாது. தமிழ் கட்சிகளும் இதனைத் தொட ர்ச்சியாக இந்தியாவிடம் வலியுறுத்தி வந்திருக் கின்றன. தேர்தலை விரைந்து நடத்து மாறு அழுத்தம் கொடுக்க வேண்டும் என அவை குறிப்பிட்டு வந்தன.

மாகாண சபைத் தேர்தலை நடத்து மாறு இலங்கை அரசுக்கு தொடர்ந்து அழுத்தங்களை கொடுப்போம் என தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பின் போது இந்திய வெளியுறவுச் செயலா ளர் உறுதியளித்திருக்கிறார்.

மாகாண சபைளுக்கான தேர்தலை நீண்ட காலத்திற்கு தள்ளிப்போடுகின்ற அரசாங்கத்தின் முயற்சிக்கு இது ஒரு சிக்கலான சூழலை ஏற்படுத்தும் என தெரிகிறது. இதில் இருந்து தப்பிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கையை எடுக்கப் போகிறது என்பதை பொறு த்திருந்தே பார்க்க வேண்டும்.

# எல்லாவற்றையும் கேள்விக்கு உள்ளாக்கும் அரசியல் தலைமுறை ஒன்றின் தேவை!

செல்வநாயகத்தை பிழை சொல்ல முடியாது. அதெப்படி? மூத்த தலைமுறையைச் சேர்ந்த ஒருவர் என்னிடம் இப்படிக் கேட்டார். பிரபாகரனை எவ்வாறு விமர்சிக்க முடியும்? அவர் மீது விசுவாசம் கொண்டிருப்பவர்களின் கேள்வி. செல்வநாயகமும் பிரபாகரனும், இரண்டு வேறுபட்ட அரசியல் தலைமுறையை பிரதிநிதித்துவம் செய்தவர்கள். இதே போன்று தான் அமிர்தலிங்கத்தை எவ்வாறு விமர்சிக்க முடியும்? சம்பந்தனை எவ்வாறு விமர்சிக்க முடியும்? அரசியல் தொடர்பில் நாம் உரையாட முற்படுகின்ற போது, இவ்வாறான கேள்விகள் நம்மை நிழல் போல் தொடர்கிறது.

எனது கேள்வி ஒன்றேயொன்று தான். நமது அரசியல் முன்னோர்கள் அனைவரும் சரி என்றால் நாம் ஏன் இப்போது இப்படியிருக்கின்றோம். அவர்கள் மேற்கொண்ட தீர்மானங்கள், அவர்கள் முன்னெடுத்த செயற்பாடுகள் அனைத்தும் சரியானது என்றால், நாம் இப்போது சகல அதிகாரங்களையும் பெற்று, பொற்காலமொன்றின் சொந்தக்காரர்களாக அல்லவா இருந்திருக்க வேண்டும். ஆனால் நாம் அப்படி இல்லையே! நாம் அப்படியில்லை என்கின்ற போது இதற்கான காரணங்களை தேட முற்பட்டால் நாம் யார் மீது கேள்வியெழுப்ப வேண்டும்? எவரது தீர்மானங்கள் எவரது செயற்பாடுகள் தொடர்பில் நமக்கு மீள்பார்வை தேவை?

செல்வநாயகம் சரி, பிரபாகரன் சரி, அமிர்தலிங்கம் சரி, சம்பந்தன் சரி அப்படியென்றால் ஏன் நம்மால் அரசியலில் உச்சங்களை தொட முடியாமல் போனது? இன்றைய சூழலில் நீங்கள் அரசியல் தொடர்பில் உரையாட விரும்புகின்றீர்களா அப்படியென்றால் இந்தக் கேள்வியை உங்களால் தாண்டிச் செல்ல முடியாது. யுத்தம் முடிவுற்று பதினேழு ஆண்டுகள். இந்தக் காலத்தில் நாம் எண்ணியவாறு நாம் பேசியவாறு நாம் கற்பனை செய்தவாறு, ஏன் நம்மால் முன்னோக்கி பயணிக்க முடியவில்லை? நாம் எப்படியெல்லாம் பேசியிருக்கின்றோம் நமக்குள் ஒருவரையொருவர் வெறுக்கவும் விலக்கவும் என்னவெல்லாம் பேசியிருக்கின்றோம்? மனச்சாட்சியுடன் ஒரு முறை எண்ணிப் பாருங்கள். ஆனால் நம்மால் ஒன்றுபட்டும் எதனையும் செய்ய முடியவில்லை தனித்தும் ஒன்றையும் செய்ய முடியவில்லையே ஏன்?

அரசியலில், நாம் எந்தப் பக்கம் திரும்பினாலும், நம்மால் முடியவில்லை என்னும் தோல்வியின் நெடில் தானே, நம்மை நிழலாய் தொடர்கிறது. எனது நல்ல நண்பரும், ஈரோஸ் இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவருமான, காலம் சென்ற கி.பி. அரவிந்தன் அண்ணனின், ஒரு வரி அடிக்கடி எனது நினைவுகளில் வந்து செல்வதுண்டு. மிச்சமென்ன சொல்லுங்கப்பா? இந்தக் கேள்விக்கு விடை தேட முற்படும் ஒரு வரலாற்று மாணவன், தனது அரசியல் முன்னோர்களை புனிதவான்களாக வழிபடுவதா அல்லது அவர்களின் சரி பிழைகளை ஆராய முற்படுவதா எதனைச் செய்ய வேண்டும்?

புகழ்பெற்ற விஞ்ஞானி ஐசக் நியுட்டனின் கூற்று ஒன்றுண்டு. நான் யாம்பவான்களின் தோள்களில் ஏறி நின்றதால் தான், மற்றவர்களை விடவும் அதிக தூரம் பார்க்க முடிந்திருக்கிறது. இதனைத்தான் பேராசிரியர் சிவத்தம்பி இவ்வாறு கூறியிருந்தார், நான் எனது ஆசிரியர்களின் தோள்களில் நின்று பார்த்தேன், அவர்களுக்குத் தெரியாத பல விடயங்கள் எனக்குத் தெரிந்தன, நாளை எனது மாணவன், எனது தோள்களில் நின்று பார்ப்பான், அப்போது எனக்குத் தெரியாத பல விடயங்கள் அவனுக்குத் தெரியும். அறிவியக்கம் என்பது இப்படித் தான் நகர முடியும். இது அனைத்து அறிவுத் துறைகளுக்குமானது.




அரசியல் என்பதும் ஒரு அறிவுத் துறை தான். சொல்லப் போனால், அனைத்தையுமே தீர்மானிக்கும் அறிவுத்துறை. தேர்தல்களில் மக்கள் ஆற்றலுள்ள தூரநோக்குள்ள, நேர்மையுள்ள தலைவர்களை தெரிவு செய்தால் தான், அரசியல் செழுமையடையும் நாடு வளரும். அங்குதான் அனைத்து அறிவுத் துறைகளும் வளரும்.

எனவே அனைத்தையுமே தீர்மானிப்பது அரசியல்தான் என்னும் போது நாம் எந்தளவிற்கு அரசியல் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். அரசியலில் விழிப்பு என்பது கடந்து வந்தவைகள் தொடர்பில் காய்த்தல் உவத்தலற்ற விமர்சனங்களை முன்வைப்பது தான் கழிக்க வேண்டியவற்றை கழித்துவிட்டு எடுத்துக் கொள்ள வேண்டியவற்றுடன் செல்வது தான். எடுத்துக் கொள்ளக் கூடாதவற்றை, எடுத்துக் கொண்டு செல்ல முற்படுவோமானால், தேவையற்ற சுமையால் அவதியுற்று, ஒரு கட்டத்தில் வீழ்ந்து விடுவோம். நம்மால் கொண்டு செல்ல முடியாதவற்றை, போலித்தனத்திற்காக சுமக்க முற்படுவோமானால், இறுதியில் செய்யக் கூடியதையும், நம்மால் செய்ய முடியாமலேயே போகும்.

வரலாறு முழுவதும் ஏராளமான உதாரணங்கள் உண்டு. இதில் நியாய அனியாய வாதம் என்று ஒன்றுமில்லை. ஏனெனில் உயிர்களின் டிசைனே பலத்தை அடிப்படையாகக் கொண்டது தான். அதனால் தான் ஒன்றுக்கு ஒன்று இரையாகின்றது. பெரியது சிறியதை ஒடுக்கத்தான் முயற்சிக்கும் தனது கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டுமென்று தான் நிர்ப்பந்திக்கும் – என்ன தான் மனித உரிமைகள் பற்றியும், ஜனநாயகம் பற்றியும் வகுப்பெடுக்கப்பட்டாலும், வலிமைக்கு அடங்க வேண்டும் என்பது தான், எழுதப்படாத உலக சட்டமாக இருக்கின்றது. இந்த யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறே நாம் நிர்பந்திக்கப்படுகின்றோம்.

எனவே மற்றவற்றிற்கு இரையாகாமல் இருக்க வேண்டுமாயின், அதற்கு வலிமையும் புத்திசாலித்தனமும் மட்டும் போதாது, சூழ்நிலையை புரிந்து கொண்டு செயலாற்றும் திறனே அவசியம். அந்தத் திறன்தான், இறுதியில் ஒன்றை பாதுகாக்கின்றது — இன்னொன்றை இல்லாமலாக்கின்றது. மிகவும் சிறிய நாடான, மொங்கோலியா உலகின் பெரும் பகுதியை வெற்றி கொண்ட வரலாறும் இருக்கின்றது அதே போன்று, உலகையே அச்சுறுத்திய, பெரும் சாம்ராஜ்யங்கள் தோற்கடிக்கப்பட்டு, அதன் சுவடுகளே இல்லாமல் போன வரலாறும் உண்டு. இந்த இடைவிடாத அதிகாரத்திற்கான ஆட்டத்தில் வலிமையுள்ளவரும் தோற்ப்பார், அதிக புத்திசாலித்தனம் உள்ளவர்களும் தோற்பார். ஆனால் சூழ்நிலைக்கு ஏற்றவாறு, தன்னை தற்காத்துக் கொள்ளும் திறன் அறிந்த இனம் நிலைக்கும். இதனால் தான், சார்ள்ஸ் டார்வின் இப்படிக் கூறினார் எந்தவொரு உயிரினமும் வலிமையாக இருப்பதாலோ அல்லது அதிக புத்திசாலித்தனமாக இருப்பதாலோ தப்பிப் பிழைப்பதில்லை, கால மாற்றத்திற்கு ஏற்ப, எந்த உயரினம் தன்னை தகவமைத்துக் கொள்கின்றதோ, அதுவே நிலைக்கின்றது.

இந்த அடிப்படையில் சிந்திப்போமானால், இங்கு சரி பிழை என்பது எல்லாம் காலத்தால் நிறுக்கப்படுவது தான். நமது ஒரு தலைமுறையானது, அதன் ஆற்றலுக்கும், அறிவுக்கும் உட்பட்டு சிந்தித்தது, செயற்பட்டது உண்மை ஆனால் அதனை அப்படியே, இன்னொரு தலைமுறை காவிக் கொண்டு, தன் ஆற்றலையும் வாழ்வையும் தொலைக்க வேண்டியதில்லை. இன்றுள்ள சூழலுக்கு எது உகந்ததோ, எதனை முன்னெடுத்தால், ஒரு இனம் தப்பிப் பிழைக்க முடியுமோ, அதனை முன்னெடுப்பதும், அதனடிப்படையில் சமூகத்தை அரசியல் ரீதியில் ஒன்றாக்குவதும் தான் இன்றைய தலைமுறைக்கு முன்னாலுள்ள வரலாற்றுக் கடமையாகும்.

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –



இந்த வரலாற்றுக் கடமையை முன்னெடுப்பதற்கு எதுவெல்லாம் தடைகளாக இருக்குமோ, அவற்றையெல்லாம் தயவு தாட்சன்யம் இல்லாமல் தூக்கியெறியும் துனிவுள்ள, ஒரு தலைமுறை தான் இன்றைய தேவை. அவ்வாறானதொரு தலைமுறையால் தான புதியதொரு தமிழர் அரசியல் கலாசாரத்தை உருவாக்க முடியும்.

யுத்தத்திற்கு பின்னரான ஈழத் தமிழர் அரசியலானது, எவ்வித புதிய உரையாடலுமின்றியே தொடர்கிறது. அரசியல் என்றால் வெறும் கோமாளிக் கூத்து என்பதாகவே மக்கள் புரிந்து கொள்ளும் நிலைமை காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களே இதற்கு சிறந்த உதாரணம். இதனை எவ்வாறு சீர் செய்வது? யார் சீர் செய்வது?

வெறும் துரோகி தியாகி என்னும் தேவையற்ற சொற்களை காவிக் கொண்டிருக்கும் பழைய அரசியல் தலைமுறையால், மேலும் சமூகம் சிதைவையே எதிர்கொள்ளும்.

இதனை மாற்றியமைக்க வேண்டுமாயின் ஒரு புதிய அரசியல் தலைமுறை வெளியில் வர வேண்டும். அது இப்போதிருக்கும் அனைத்து கட்சி அடையாளங்களையும் புறக்கணித்து, ஒரு புதிய அரசியல் அடையாளத்தை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.

தமிழ்த் தேசியம் என்னும் ஒற்றைச் சொல்லில் திருப்தியடையும் தலைமுறையாக இல்லாமல், எல்லாவற்றையும் அளவோடு கையாளும் ஒரு உக்தியை அது கைக்கொள்ள வேண்டும். எவ்வாறு உணவுக்கு உப்பு, புளி, காரம் சேர்க்கப்படுமோ, அப்படி. அப்படியானதொரு அரசியல் தலைமுறை வெளியில் வரும் வரையில், ஈழத் தமிழர் அரசியலில் எந்தவொரு உருப்படியான அசைவுகளும் ஏற்படப் போவதில்லை.

# 2 மரணத் தீர்ப்புக்கள்! உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைப் பலப்படுத்துவது?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



கடந்த வாரம் வழங்கப்பட்ட இரண்டு மரணத் தீர்ப்புகள் அரசாங்கம் எதிர்பார்க்கும் இரண்டு முக்கிய விளைவுகளை ஏற்படுத்துமா? முதலாவது எதிர்க்கட்சிகளை தற்காப்பு நிலைக்குத் தள்ளுவது.



இரண்டாவது, உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை, உள்நாட்டு நீதி பரிபாலனத்துறை போன்றவற்றின் நம்பகத்தன்மையை அனைத்துலக அளவில் பலப்படுத்துவது.

முன்னாள் போலீஸ்மா அதிபர் ஒருவருக்கு மரணத் தீர்ப்பு விதிக்கப்பட்டிருப்பது இது தான் முதல் தடவை. நாட்டின் பாதுகாப்புத் துறைச் செயலர் ஒருவர் மரண தீர்ப்புக்கு உள்ளாகி இருப்பதும் இது தான் முதல் தடவை. மரணத் தீர்ப்பு விதிக்கப்பட்ட இருவருமே தாங்கள் கருவிகள் என்ற பொருள்பட கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். தமக்கு மேலே பொறுப்பில் இருந்தவர்கள் இட்ட உத்தரவுக்கு அமைய தாங்கள் செயல்பட்டதாகவும் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த இரண்டு மரணத் தீர்ப்புகளின் மூலமும் ஈஸ்டர் குண்டு வெடிப்பு தொடர்பில் யார் யார் சூத்திரதாரிகள் என்று சந்தேகிக்கப்படுகிறார்களோ அவர்கள் அனைவரையும் அரசாங்கம் தற்காப்பு நிலைக்குத் தள்ளியிருக்கிறது. அதேசமயம் உள்நாட்டு நீதியின் நம்பகத்தன்மையை இது மேலும் பலப்படுத்த உதவுமா?

இந்த வாரம் ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய பதவிக்காலத்தை மேலும் நீடிப்பதற்கு வாக்கெடுப்பு நடந்தது. இந்த வாக்கெடுப்பில் இலங்கை நடுநிலை வகித்தது. இலங்கை ஏன் அவரை ஆதரிக்கவில்லை என்ற கேள்விக்கு கூறப்படும் விடை என்னவென்றால்,

அவர் பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகித்தவர் என்பதாகும். ஆனால் அது உண்மையா? அவர் தனது இலங்கை விஜயத்தின் முடிவில் உத்தியோகபூர்வமாக தெரிவித்த கருத்துக்கள் அரசாங்கத்துக்குச் சாதகமானவை. தேசியத் தன்மை மிக்க ஒரு பொறிமுறையை பன்னாட்டு நிபுணத்துவ உதவியோடு பலப்படுத்துவது என்று தான் அவர் கூறியிருந்தார். அப்படிப் பார்த்தால் அவர் கேட்டதைத் தான் இப்பொழுது ஸ்ரீலங்கா அரசாங்கம் செய்துவருகிறது. ஆனாலும் அதை விடவும் கூடுதலாக அவர் செய்திருக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசாங்கம் கருதுகிறது என்பதனால் தான் அவருடைய பதவி காலத்தை நீடிப்பதற்கான வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லையா?

கடந்த ஆண்டு ஐநா தீர்மானத்தின் 43ஆவது பந்தியில் ஒரு விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தீவின் இன முரண்பாட்டு வரலாற்றில் பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டின் பேரில் படைத் தரப்பைச் சேர்ந்தவர் தண்டிக்கப்பட்ட ஒரே ஒரு சந்தர்ப்பமாக கிரிசாந்தி படுகொலை வழக்கைத் தான் அந்த 43ஆவது பந்தி குறிப்பிடுகிறது. அதற்குப் பின்பு நடந்த விஸ்வமடு பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் நீதிமன்றத்தால் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்ட படைத்தரப்பினர் பின்னர் மேல்முறையீடு செய்து வெளியே வந்து விட்டார்கள் என்பதையும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

அதுமட்டுமல்ல .கடந்த ஆண்டு ஐநா தீர்மானத்தின் மேற்குறிப்பிட்ட பந்தியில் கூறப்பட்டிருப்பது போல இலங்கைத்தீவின் இன முரண்பாட்டு வரலாற்றில் பாலியல் வன்முறை சார்ந்த குற்றச் செயலுக்காகத் தண்டிக்கப்பட்ட இளநிலை அதிகாரியான சோமரத்ன ராஜபக்ஷ என்பவர் அக்குற்றத்தை தான் புரியவில்லை என்றும் .தான் ஒரு கருவி மட்டுமே என்றும் பொருள் கொள்ளத்தக்க விதத்தில் கடந்த சுமார் மூன்று தசாப்த காலங்களுக்கு மேலாக பகிரங்கமாகக் கூறி வருகிறார்.

தனக்கு உத்தரவிட்ட பலர் இப்பொழுது பத்திரமாகப் பாதுகாப்பாக இருப்பதாகவும் அவர் குற்றஞ் சாட்டி வருகிறார். மேலும் பல புதை குழிகளை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும் அவர் ஏற்கனவே கூறி விட்டார். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரும் அவர் சார்பாக அவருடைய மனைவி அவர் கூறிய விடயங்களை வெளிப்படுத்தி வருகிறார். இப்பொழுது மரணத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும் முன்னாள் போலீஸ்மா அதிபரும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஏறக்குறைய அப்படித் தான் கூறுகிறார்கள்.தாங்கள் கருவிகள் என்ற பொருள்பட

மரணத் தீர்ப்பு விதிக்கப்பட்டிருக்கும் இருவருமே நாட்டின் உயர் பொறுப்புகளை வகித்தவர்கள். அது போல இப்பொழுது தடுப்புக்காவல் விசாரணையில் இருக்கும் சுரேஷ் சலே நாட்டின் உயர் பொறுப்பில் அதாவது சக்திமிக்க படைப் புலனாய்வுக் கட்டமைப்பின் பணிப்பாளராக இருந்தவர். இவர்கள் அனைவரும் குற்றச்சங்கிலித் தொடருக்குள் கண்ணிகளாகக் காணப்படலாம் என்றால் அதை இவர்களுடைய தனிப்பட்ட குற்றங்களாக எடுத்துக் கொள்வதா? அல்லது கட்டமைப்பு சார்ந்த குற்றங்களாக எடுத்துக் கொள்வதா? இவ்வளவு உயர் பொறுப்பில் இருந்தவர்களே இவ்வாறு விசாரிக்கப்படவும் தண்டிக்கப்படவும் கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருப்பது என்பது எதைக் காட்டுகிறது?

இலங்கைத் தீவின் படைத்துறை படைப் புலனாய்வுத்துறை, பாதுகாப்புத் துறை, சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட வேண்டிய பொறுப்பில் இருந்தவர்கள் குற்றங்களைத் தடுக்கத் தவறியிருக்கிறார்கள். அல்லது தங்களுக்கு மேலிருந்து உத்தரவிட்டவர்களின் சேவகர்களாகச் செயல்பட்டிருக்கிறார்கள். எனவே இவை தனிப்பட்ட குற்றச்செயல்கள் அல்ல கட்டமைப்பு சார்ந்த குற்றச்செயல்கள் தான்.

இவர்களைப் போன்ற உயர் பொறுப்பில் இருந்தவர்கள் குற்றம் செய்யும் அளவுக்கு மேற்சொன்ன கட்டமைப்புகள் குற்றப் பண்பு மிக்கவைகளாக இருந்தன என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். இதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால், இனமுரண்பாட்டின் பின்னணியில் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எதிரான குற்றங்கள் மன்னிக்கப்படுகின்ற அல்லது நியாயப் படுத்தப்படுகின்ற அல்லது தண்டிக்கப் படாத ஒரு பாரம்பரியத்தின் பின்னணியில், இவர்கள் பொறுப்பாக இருந்த கட்டமைப்புகள் குற்றப் பண்பு மிக்கவைகளாகக் காணப்பட்டன என்பதைத் தான்.

தேசிய மக்கள் சக்தி நிலைமாறு கால நீதி அரசாங்கம் இவர்களைக் கைது செய்வதன் மூலம் இவர்களையும் இவர்களுக்கு உத்தரவிட்ட அரசியல்வாதிகளையும் குற்றவாளிகளாக்கி அவர்கள் மீது பழியை போட்டுவிட்டு தப்பிச் செல்ல முடியாது. மாறாக அவை கட்டமைப்பு சார்ந்த குற்றங்கள் என்பதனை முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அந்த அடிப்படையில் குறிப்பிட்ட கட்டமைப்புகளை மறு கட்டமைப்புச் செய்ய வேண்டும்.நிலைமாறு கால நீதியானது அதைத் தான் கோரி நிற்கின்றது.

ஆனால் இங்குள்ள தோல்வி என்னவென்றால் நிலைமாறு கால நீதிச் செய்முறைகள் முன்னெடுக்கப்பட்ட ஒரு காலகட்டத்தில் தான் ஈஸ்டர் குண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன என்பது தான். அதாவது 2015ல் ஐநாவில் நிறைவேற்றப்பட்ட நிலைமாறு கால நீதிக்கான தீர்மானத்தின் பின்னிருந்து நாட்டில் கட்டமைப்புசார் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்க வேண்டிய ஒரு பின்னணியில், ஆனால் பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொட கூறியது போல அவ்வாறான கட்டமைப்புசார் மாற்றங்கள் முன்னெடுக்கப்படாத ஒரு பின்னணியில், ஈஸ்டர் குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. அது ஒருவிதத்தில் ஐநாவின் தோல்வியையும் காட்டுகிறது. நிலை மாற்றம் நிகழாத ஒரு நாட்டில் நிலை மாறுகால நீதியை அமுல்படுத்த முயற்சித்த ஐநா மனித உரிமைகள் பேரவையின் தோல்வியை அது காட்டுகிறது.

நிலைமாறு கால நீதியானது இலங்கைத்தீவில் எதிர்மறை விளைவுகளைத் தான் ஏற்படுத்தியது. உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை ஏன் தமிழ் மக்கள் நம்பவில்லை என்பதை அது ரத்தம் சிந்தி நிரூபித்தது. ஈஸ்டர் குண்டு வெடிப்புகளின் பின்னர் ஆட்சிக்கு வந்த கோட்டாபாய நாட்டில் நீதி பரிபாலன கட்டமைப்பை நிறைவேற்று அதிகாரம் எந்த அளவுக்கு மேவிச் செல்ல முடியும் என்பதனை மீண்டும் ஒருமுறை நிரூபித்தார்.

மிருசுவில் படுகொலை வழக்கில் நீதிமன்றத்தால் மரணத் தீர்ப்பு வழங்கப்பட்ட இராணுவ சர்ஜன்ரை கோட்டாபய பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார். மிருசுவில் கொலைச் சம்பவத்தில் ராணுவ சார்ஜன்ட் சுனில் ரட்டநாயக்க 2015ல் நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்டார். அவருக்கு மரணத் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் 2021ல் ஆட்சிக்கு வந்த கோத்தபாய ராஜபக்ச அவருக்கு பொது மன்னிப்பை வழங்கி விடுதலை செய்தார்.

அவ்வாறு விடுதலை செய்யப்பட்ட சுனில் ரட்டநாயக்க தன்னுடைய நாட்டுக்கு வர முடியாது என்று கனடா அவருக்குப் பயணத் தடை விதித்தது.அ வரை பொது மன்னிப்பின் மூலம் விடுதலை செய்த கோத்தாபய ராஜபக்சக்களுக்கும் கனடா பயணத் தடை விதித்தது. உள்நாட்டில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை பிரயோகித்து மன்னிப்பு அளிக்கப்பட்ட ஒருவருக்கு ஒரு வெளிநாடு அவ்வாறு தண்டனை விதித்தமை என்பது மிகஅரிதான ஒரு புறநடை. தாயகத்துக்கு வெளியே அதிகளவு தமிழர்கள் செறிந்து வாழும் கனடாவில் வாழும் தமிழர்களுக்குக் கிடைத்த முக்கிய வெற்றி

(22ம் பக்கம் பார்க்க)

# Reecha:- ஒரு கனவில் விழுந்த கல்

கிளிநொச்சியில் இருந்து

– கருணாகரன் –

றீச்சாவினால் (ReeCha Park & Resort) அட்சய பாத்திரம் என்ற தொனிப்பொருளில் மிக பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வருடாந்த உணவுத் திருவிழாவில் இந்த ஆண்டு ஒரு குழப்பம் அல்லது பிரச்சினை ஏற்பட்டுள்ளது. எதிர்பார்ப்புகளோடு சென்றவர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றம், பணத்தைச் செலவு செய்த உணவுப் பிரியர்கள் அல்லது சுவைப்பிரியர்கள் அல்லது Visitorsக்கு உரிய உணவுகள் கிடைக்கவில்லை போன்ற காரணங்கள் ReeCha வையும் அதன் நிர்வாகத்தையும் நோக்கிக் கோபமாகத் திரும்பியுள்ளது.

இந்த எரியும் பிரச்சினைக்கு எண்ணெய் வார்ப்பதில் ReeCha உரிமையாளர் IBC கந்தையா பாஸ்கரனின் அரசியல் எதிராளிகளும் உற்சாகமாகச் செயற்பட்டிருக்கிறார்கள். இதெல்லாம் இணைந்து சில நாட்களாக ஈழத் தமிழ்ச் சமூக வெளியில் ஒரு சிறிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உணவுத் திருவிழாவில் ஏற்பட்ட குழப்பத்துக்குக் காரணம், எதிர்பார்க்கப்பட்டதையும் விட கூட்டம் அதிகமாகியதே. அதாவது ReeCha நிர்வாகம் எதிர்பார்த்ததையும் விட அதிகமானோர் அங்கே திரண்டு விட்டனர். இதை முகாமைத்துவம் செய்யக் கூடிய சூழல் அல்லது உடனடி மாற்று ஏற்பாடுகள் அங்கே இருக்கவில்லை. அது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒரு குறைபாடு, தவறே தான். அதை ReeCha நிர்வாகமும் பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளது.

பணம் செலுத்தியபின் உணவு கிடைக்காதவர்களுக்கும் ஏனைய வசதிகளைப் பெறாதோருக்கும் அவர்களுடைய பணம் மீள ஒப்படைக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. அதனுடைய உரிமையாளர் கந்தையா பாஸ்கரன் இது குறித்த வீடியோப் பதிவைப் பகிர்ந்துள்ளார். ஆனால், அவர் தவறை ஏற்றுக் கொண்ட விதமும் மன்னிப்புத் தெரிவிக்கும் முறைமையும் ஏற்புடையதல்ல என்று மேலும் விவாதங்களும் விமர்சனங்களும் எழுந்துள்ளன.

இந்த மாதிரி விடயங்களுக்கும் இந்த மாதிரி ஒரு பிரபலமான இடத்தில் நடக்கும் சம்பவங்களுக்கும் விமர்சனங்களும் விவாதங்களும் முடிவற்ற நிலையிலேயே இருக்கும். அதைக் கட்டுப்படுத்தவே முடியாது. எல்லோரையும் எந்தப் பதிலினாலும் திருப்திப்படுத்தவும் இயலாது.

கடந்த ஆண்டும் (2025) இதே தபோல ReeChaவில் உணவுத்திருவிழா நடந்தது. ஆனால், அது இந்தளவுக்குக் கூட்டத்தைச் சந்திக்கவில்லை. அதனால் எந்தப் பரப்பும் பிணக்கும் .ல்லாமல் அமைதியாக — நிறைவாக நடந்து முடிந்தது. அதில் கலந்து கொண்டவர்களுக்கும் திருப்தி. ReeCha நிர்வாகத்துக்கும் நிறைவு.

இந்த ஆண்டு உணவுத் திருவிழாவை ReeCha இன்னும் பெரிதாக ஏற்பாடு செய்தது. இதற்கான விளம்பரங்கள் தொடக்கம், உள்ளரங்க நிகழ்ச்சிகள், உணவு வகைகள் வரையில் எல்லாமே அதிக கூட்டத்தை எதிர்பார்த்தே செய்யப்பட்டன. ஆனாலும் திரண்டிருந்த உணவுப் பிரியர்கள் அல்லது சுவைப்பிரியர்கள் அல்லது Visitorsஐ ReeCha நிர்வாகத்தினால் சமாளிக்க முடியாமல் போய்விட்டது. இது துரதிருஸ்டமான நிலையே.

அன்னதான நிகழ்வுகளிலேயே சரியாக உணவைப் பரிமாறவில்லை என்றால், அல்லது உணவு தீர்ந்து விட்டால் அங்கே கூடியிருப்போர் கொந்தளித்து விடுவார்கள். இதுவோ உணவுத் திருவிழாவுக்கெனத் திட்டமிட்டுப் பயணம் செய்து வந்து முறைப்படி பணம் செலுத்தி பல எதிர்பார்ப்புகளோடு நுழைவோருக்கு எதிர்மறையான நிலைமை என்றால் சும்மா விட்டு விடுவார்களா?

இந்தக் கொந்தளிப்பே சமூக வலைத்தளங்களில் வைரலாகியது. ஆனால், இதற்குப் பின்னால் உள்ள ஏனைய (பல) விடயங்களை நாம் பார்க்க வேண்டும். அது அவசியமானது.














அரசியலில் நிர்வாகத்தில், வணிகத்தில், பயணத்தில் பயண ஏற்பாடுகளில், தொண்டுப்பணிகளில் ஏன் நம்முடைய சொந்த வாழ்க்கையில், உறவில் என எல்லாவற்றிலும் குறைபாடுகளும் தவறுகளும் ஏற்படுவதுண்டு. அவற்றைக் குறித்து அக்கறையோடும் பொறுப்புணர்வோடும் குறித்த விடயத்தில் நடந்த தவறுகளை அல்லது குறைபாடுகளை இனங்கண்டு அவற்றுக்குப் பரிகாரம் காண வேண்டும். முதலில் கண்ணியமான முறையில் மன்னிப்பைக் கோர வேண்டும்.

ReeCha நிர்வாகத்தில் நடந்த முகாமைத்துவக் குறைபாடு நிச்சயமாகக் கவனிக்கப்பட வேண்டியது. அதைக் கவனித்துத் திருத்தும் போதே குறித்த நிறுவனத்தின் வளர்ச்சியும் நற்பெயரும் கெடாதிருக்கும்.

ReeChaவின் 2026 உணவுத் திருவிழாவில் நடந்ததைப் போலொரு நிகழ்வு 1955 ஜீலை 17 இல் California-வின் Anaheim நகரில் உலகப் புகழ்பெற்ற Disneyland கேளிக்கை மற்றும் கருப்பொருள் பூங்கா (Theme Park)வின் திறப்பையொட்டிய நிகழ்விலும் நடந்தது. முதல் நாள் கடுமையான செயல்பாட்டுச் சிக்கல்களை எதிர்கொண்டது. ஜீலை 17 தொடக்க நிகழ்வு (invitation only) நிகழ்வாகத் திட்டமிடப்பட்டிருந்தது. குறிப்பாக அழைப்பு உள்ளவர்களுக்கு மட்டும் (invitation-only) என்று திட்டமிட்டிருந்த போதும் போலியான அழைப்பிதழ்கள் உட்பட பல காரணங்களால் திட்டமிடப்பட்டதை விட ஆயிரக் கணக்கான அழைக்கப்படாத விருந்தினர்கள் Disneyland க்குள் நுழைந்ததாகச் சொல்லப்படுகிறது. அதன் பிறகு பல பிரச்சினைகள் ஒன்றுடன் ஒன்று இணைந்தன. நீண்ட வரிசைகள் ஏற்பட்டன. கடும் வெப்பம் நிலவியது. உணவகங்களும் refreshment stands உம் பெரும் கூட்டத்தைச் சமாளிப்பதில் சிரமங்களை எதிர் கொண்டன. உணவுக்கும் பானங்களுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டது. போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இப்படிப் பல பிரச்சினைகள். அப்போது சில கவர்ச்சிகரமான இடங்கள் (attractions) முழுமையாகத் தயாராகாத நிலையிலும் இருந்துள்ளன. இப்படி தொடக்கத்தில் எதிர்நிலை விளைவுகளைச் சந்தித்த Disneyland, இன்று உலகளாவிய அளவில் வளர்ந்து தன்னைப் பல இடங்களிலும் விரிவாக்கியிருக்கிறது. காரணம், நடந்த குறைபாடுகளையும் தவறுகளையும் அது அடுத்த வாரங்கள், மாதங்களில் சரி செய்து கொண்டது. முக்கியமாக நடந்த operational problems இனங் காணப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. முதலில் தயாராகாதிருந்த attractions பின்னர் திறக்கப்பட்டன. அடிப்படை வசதிகளும் வருகையாளர் அனுபவமும் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டன.

PublicRelations துறையிலும் முக்கியமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. Opening day பிரச்சினைகளுக்குப் பின்னர் பத்திரிகையாளர்களை மீண்டும் அழைத்து, Disneyland இயல்பான முறையில் செயல்படும் என உத்தரவாதம் அளிக்கப்பட்டது. இவ்வாறெல்லாம் செய்யப்பட்டதனால் Disneyland பல முன்னுதாரணங்களுக்கு வரலாற்றில் குறிப்பிடப்படுகிறது.

பாஸ்கரன் திட்டமிடலிலும் அவற்றைச் செயற்றிறன் ஆக்குவதிலும் குறிப்பிடத்தக்க வெற்றிகளை ஈட்டிய ஒருவர். இதற்கு அவருடைய நிறுவனங்களே சான்று சாட்சியம்.

ReeCha தொடக்கம் அவரால் நிர்வகிக்கப்படும் இலத்திரனியல் ஊடகங்கள். வரையிலும் வெற்றிகரமானவை. அதிலும் இயக்கச்சியில் அமைந்துள்ள ReeCha Park & Resort என்பது இலங்கையின் குறிப்பிடத்தக்க இயற்கை விவசாயப் பூங்காவும் கேளிக்கைத் தளமுமாகும். நான் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவன் என்ற வகையில், அந்த நிலத்தில், அத்தகைய ஒரு சூழலில் Theme Park (கருப்பொருள் பூங்கா) Amusement Park (பொழுதுபோக்கு பூங்கா) என இரண்டின் கலவையிலுமான ஒரு மையத்தை ஒருவர் உருவாக்கி, வெற்றியடையச் செய்திருப்பது பாராட்டுக்குரியதே.

புலம்பெயர் தமிழர்கள், தென்பகுதி மக்கள், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணம் செல்லும் போது தங்கிச் செல்லும் ஒரு தவிர்க்க முடியாத ‘சுற்றுலாத் தளமாக ReeCha மாறியுள்ளது.

போருக்குப் பிந்தைய வடபகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தை ஒரு முதன்மைச் சுற்றுலா மையமாக (Tourism Hub) மாற்றுவதில் ReeCha முக்கிய பங்கு வகிக்கிறது. புதிது புதிதாக பல காட்சி மையங்களும் கருப்பொருட்களும் இணைக்கப்படுகின்றன. அங்குள்ள இயற்கை (Organic) விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சூழல் சுற்றுலாத் தளம் (Eco-tourism project) எனவும் இதைப் பார்க்கலாம்.

அங்குள்ள நூற்றுக்கணக்கான பனை மரங்கள், இயற்கையான ஏனைய மரங்கள் உள்ள பசுமையான சூழலை அடிப்படையாகக் கொண்டு இயற்கை எழில் கொஞ்சும் வகையில் இந்த வளாகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது, இயற்கை வளங்களைச் சேதப்படுத்தாமல், பனை உட்பட அந்தச் சூழலில் உள்ள மரங்களைப் பாதுகாத்து, சூழலுக்கு உகந்த முறையில் ஒரு வணிகத் தளத்தை நடத்த முடியும் என்பதை இது நிரூபித்துள்ளது. இதனால் ReeCha இன்று கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்ட மக்களில் ஒரு தொகையினருக்கான வேலை வாய்ப்புக்கும் வாய்ப்பளிக்கின்ற ஒரு மையமாகவும் மாறியுள்ளது.

நீண்டகாலப் போரினால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்கள், தங்களின் குடும்பங்களுடன் அமைதியுடனும் பாதுகாப்புடனும் மகிழ்ச்சியாக நேரத்தைக் கழிக்கக் கூடிய நீச்சல்குளம், பூங்கா மற்றும் தங்குமிட வசதிகளை றீச்சா அளிக்கிறது. தொகுத்துச் சொன்னால், றீச்சா பூங்கா என்பது இயற்கை எழில், பாரம்பரியச் சுவை மற்றும் பிராந்திய அபிவிருத்தி ஆகிய மூன்றும் இணையும் ஒரு மையமாகும்.

இங்குள்ள உணவகங்கள் மற்றும் உணவுத் திருவிழாக்களுக்குத் தேவையான பால், கடல் உணவுகள், காய்கறிகள் போன்ற மூலப்பொருட்களைச் சுற்றியுள்ள கிராமத்து மக்களிடமிருந்தே றீச்சா நிறுவனம் நேரடியாகக் கொள்வனவு செய்கிறது. .தனால் உள்ளூர் உற்பத்தியாளர்களின் வருமானம் உயர்கிறது. இப்பகுதியின் முதன்மை வளங்களான பனை, தென்னை மற்றும் தும்புப் பொருட்களுக்கு இந்த வளாகத்தின் மூலம் புதிய சந்தை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அதிலும் இந்த உணவுத் திருவிழாக்கள் போன்றவை வணிக நிகழ்வாக மட்டுமில்லாமல், சமூக, பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விழாவாகவே நிகழ்த்தப்படுகிறது. நவீன உணவுகளுக்கு மத்தியில், பாரம்பரியமும் ஆரோக்கியமானதுமான உணவை இளைய தலைமுறைக்கு அறிமுகப்படுத்துவது இதில் ஒரு முக்கிய நோக்கமாகும். (18ம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி விபத்துகள்

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



கிளிநொச்சியில் கடந்த இரண்டு மாதத்தில் மட்டும் எனக்கு நெருக்கமான நான்கு பேர் வீதி விபத்தில் பலியாகியிருக்கிறார்கள். ஒருவர் ஓய்வு பெற்ற ஆசிரியர். பெருமாள் கணேசன். மாலையில் நடைப் பயிற்சியை முடித்துக் கொண்டு, கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள பாதசாரிகள் கடவையில் கடக்கும் போது வேகமாக வந்த உந்துருளியினால் மோதிச் சாவடைந்தார். சம்பவம் நடந்த இடத்தையும் முறையையும் வாசகர்கள் கவனிக்க வேண்டும். நகரின் மத்தியில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள பாதசாரிகள் கடவையிலேயே விபத்து நடந்திருக்கிறது. சம்பவ இடத்திலேயே கணேசனின் உடல் நொருங்கி விட்டது. அந்தளவுக்கு உந்துருளியின் வேகம் இருந்திருக்கிறது.

அடுத்த விபத்து, கிளிநொச்சி — உருத்திரபுரம் வீதியில் நடந்தது. இதுவும் உந்துருளி மோதியதால் ஏற்பட்டது. இதில் 32 வயதுடைய சுகந்தன் கஜிதா மரணமடைந்தார். தன்னுடைய பிள்ளையை பாடசாலையிலிருந்து அழைத்து வருவதற்காக உந்துருளியில் பயணித்த கஜிதாவை, சாகஸக் குழுவாக உந்துருளியில் பயணித்தவர்கள் மோதினார்கள். இந்தச் சாகஸக் குழுவில் எட்டுப்பேர், நான்கு உந்துருளியில் பயணித்ததாக சம்பவம் நடந்த போது வீதியில் பயணித்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சாகஸக் குழுவைச் சேர்ந்தவர் ஒருவர் சில வாரங்களுக்குப் பின்பு, ஒரு தனிப்பட்ட உரையாடலின் போது சொல்லியிருக்கிறார், அன்று நாம் ஒரு அணியாக வீதியில் உந்துருளியை ஓட்டி மகிழ்ந்தோம். அப்போது எதிர்பாராத விதமாக இந்த விபத்து நடந்தது. ஆனால், பொலிஸ் தரப்புக்கு ஒரு லட்சம் ரூபாய் பணத்தைக் கொடுத்து வழக்கின் கணக்கை முடித்துக் கொண்டோம் என்று.

அடுத்த விபத்து, இயக்கச்சிச் சந்திக்கு அண்மையில் நடந்தது. இதில் 12 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் கொல்லப்பட்டார். மிதிவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த சிறுமியை 'பட்டா' என்று அழைக்கப்படும் சிறிய ரக பாரஊர்தியே மோதியிருக்கிறது. இந்த விபத்து நடந்து இரண்டு வாரங்கள் ஆகவில்லை. அதற்கிடையில் அதே இடத்தில் 49 வயதுடைய சந்திரன் சசிகலா என்ற பெண்ணை, HIACE ரக பயணிகள் ஊர்தி ஒன்று மோதிக் கொன்றுள்ளது.

மறுநாள் அதே இடத்தில் இரண்டு படையினர் விபத்துக்குள்ளாகி காயமடைந்துள்ளனர். அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, அதே இடத்தில் மூன்று இளைஞர்கள் பயணித்த முச்சக்கர வண்டியை டிப்பர் வாகனம் மோதி மூவருமே உயிரிழந்தனர். இதைப் போல பல விபத்துகள் கிளிநொச்சியிலும் அதற்கப்பால் இலங்கையின் பல இடங்களிலும் தினமும் நடக்கின்றன.

இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும்போது புளியங்குளம் என்ற இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த டிப்பர் வாகனத்தோடு, Coolar வண்டியொன்று மோதி, அதில் பயணித்த உதவியாளர் மரணமடைந்துள்ளார்.

இப்படி 'நாளொன்றுக்கு 7 — 8 பேர் வீதி விபத்துகளில் உயிரிழக்கின்றனர். ஆண்டொன்றுக்கு 2500 — 3000பேர் வரையில் இலங்கையில் பலியாகின்றனர். 2020 முதல் 2024 வரையிலான காலப்பகுதியில் சுமார் 1,18,697 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளதுடன், 12,322 பேர் உயிரிழந்துள்ளனர்' என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. 'இலங்கையின் சனத்தொகை விகிதாசாரத்திற்கும் இலங்கையின் புவியமைப்பு மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகளுக்கும் இது அதிகப்படியானது' எனச் சர்வதேச விபத்துக் கண்காணிப்புத் தரப்பினர் கருத்துக் கூறுகிறார்கள்.

விபத்துகளில் உயிரிழப்பவர்களில் 70வீதத்துக்கும் அதிகமானோர்




மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள், பாதசாரிகள் மற்றும் முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் போன்றோரே. விபத்துகளில் அதிகம் உட்படும் வாகனங்களாக மோட்டார் சைக்கிள்கள் (சுமார் 35வீதம்), முச்சக்கர வண்டிகள், டிப்பர் எனப்படும் பார ஊர்தி, பேருந்துகள், பயணிகளை ஏற்றும் Hiace போன்றவை அவதானிக்கப்பட்டுள்ளது. இன்னொன்று, தொடருந்துக் கடவைகளில் நடக்கும் விபத்துகள்.

இந்த விபத்துகள் எல்லாமே வெறும் புள்ளி விவரங்களாக மட்டும் மாறிக் கொண்டிருக்கின்றனவா? என்ற கேள்வி எழுகிறது. யுத்தத்தின் போதும் இப்படித் தான் நடந்தது. அப்பொழுது யுத்த களத்தில் நடக்கின்ற எந்த மரணத்துக்கும் மதிப்பில்லை. எல்லாமே புள்ளிவிவரங்களாகி விட்டது. அது கூடச்சரியாக மேற்கொள்ளப்படவில்லை. இங்கே இந்த விபத்துகளும் விபத்துகளில் நடக்கின்ற மரணங்களும் இதுவரையில் புள்ளி விவரங்களாக மட்டுமே பதியப்பட்டுள்ளன. அதற்கு அப்பால், இவை பெறுமதியான மனித உயிர்களின் இழப்புகள் என்றோ, இந்த இழப்புகளால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது என்ற புரிதலோ யாருக்கும் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. என்பதால்தான் வரவர வீதி விபத்துகள் பெருகி அதிகரித்துள்ளன.

ஒவ்வொரு விபத்து நிகழும் போதும் இழக்கப்படும் மனித உயிர்கள் நாட்டின் மனித வள இழப்பாகும். மனித வளம் என்பது நாட்டின் பொருளாதார, அறிவியல் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான ஒன்று. மனித உயிர்களுக்குப் பதிலாக கால் நடைகள் உயிரிழந்தால் அதுவும் பொருளாதார இழப்பாகவே அமையும். இதைவிட விபத்தின் போது சேதமடையும் வாகனங்கள், அதன் பிறகு நீதி மன்றத்திலும் பொலிஸ் நிலையத்திலும் தடுத்து வைக்கப்படும் வாகனங்கள் என்று வாகனங்களின் இழப்பும் பெரியது. இவையெல்லாம் நாட்டின் வளர்ச்சியோடு நேரடியாகச் சம்மந்தப்பட்டவை. ஆகவே விபத்துகளைத் தடுப்பதென்பது, தனியே உயிர்களைக் காப்பாற்றுவது மட்டுமல்ல, நாட்டையே காப்பாற்றுவதாகும்.

என்பதால் தான் எந்தவொரு முன்னேறிய சமூகத்திலும் (நாட்டிலும்) இந்த மாதிரியான விபத்துகள் தொடர்வதையோ, இழப்புகள் நிகழ்வதையோ அனுமதிக்கப்படுவதில்லை. அதற்கான ஆய்வுகளைச் செய்து, உரிய நடவடிக்கைகளை எடுத்து, அவற்றைக் கட்டுப்படுத்தி விடுகிறார்கள்.

இலங்கையில் வீதி விபத்துகள் என்பது முடிவே இல்லாத தொடர்கதையாகும். இதனால் வீதியில் பயணிப்பதற்கே அச்சமாக உள்ளது. நீங்கள் நிதானமாகவும் சரியாகவும் பயணித்தாலும் தப்ப முடியாது. காரணம், எதிரே வருகின்றவர் அல்லது பின்னால் வருகின்றவர் உங்களை மோதிச் சாய்த்து விடலாம். அப்படி மோதிச் சாய்த்து விட்டுச் சட்டத்தின் பிடியிலிருந்தும் தப்பி விடலாம். இதற்குப் பலரும் பொலிஸ் தரப்பையே குற்றம் சாட்டுகின்றனர்.

காரணம், விபத்தொன்று நிகழ்ந்தால், அதற்கான வழக்கைப் பதிவு செய்வது பொலிஸ் தரப்பேயாகும். பொலிஸ் தரப்பு விபத்துகளைத் தடுக்கும் நோக்குடன் வழக்கைப் பதிவு செய்தால், விபத்துக்குக் காரணமான குற்றவாளிகள் தப்புவது கடினம். பொலிஸ் தரப்பு உரிய முறையில் வழக்குகளைத் தாக்கல் செய்யாமல், விபத்துக்குக் காரணமானோருடன் டீல் செய்வதாகவே பலரும் குற்றம் சாட்டுகிறார்கள். இதனை இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் கூறப்பட்ட, கிளிநொச்சியில் நடந்த விபத்தொன்றுக்குக் காரணமானவர்கள் ஒரு லட்சம் ரூபாயை டீல் பண்ணி, சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிய கதை நிரூபிக்கிறது.

பொலிஸ் தரப்புக்கு அடுத்து, சட்டத்தில் திருத்தம் வேண்டும். அதைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு சமூக நன்மையைக் குறித்த அக்கறையோடு சட்டவாளர்களும் செயற்பட வேண்டும். சட்டத்தில் மாற்றத்தை அல்லது திருத்தத்தைச் செய்ய வேண்டியது அரசாங்கமாகும். பொலிஸ் தரப்பின் லஞ்சத்தையும் சட்டத்தில் உள்ள ஓட்டைகளையும் சரிப்படுத்தவில்லை என்றால், விபத்துகளைக் கட்டுப்படுத்தவே முடியாது. அத்துடன், நீதித்துறையும் சட்டவாளர்களும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும். இவையெல்லாம் சரியாக நடக்கவில்லை என்றால் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் பொலிஸ் உத்தியோகத்தரும் சரி, சட்டவாளர்களும் சரி, நீதிபதியும் சரி, எவரும் ஏதோ ஒரு விபத்தில் சிக்க நேரிடலாம்.

ஏனெனில் ஏற்கனவே சொன்னதைப் போல நீங்கள் சரியான முறையில் பயணித்தாலும் எதிரே அல்லது பின்னே வருகின்றவர்கள் நிதானமிழந்தால் அல்லது பொறுப்பற்ற விதமாக வந்தால் அவ்வளவுதான். கதை முடிந்து விடும். விபத்துகளுக்குக் காரணங்கள், மது, போதை வஸ்து போன்றவற்றைப் பாவித்து விட்டு வண்டிகளை ஓட்டுவது, அதிவேகம், தேர்ச்சியில்லாத சாரதியம், பொறுப்பின்மை, தூக்கம், கவனச்சிதறல் குறிப்பாகக் கைப்பேசியில் உரையாடிக் கொண்டு வண்டியைச் செலுத்துவது, வீதி விதிகளை மீறுதல் எனப் பலவாக உள்ளன.

விபத்துகளின் பின்னர் மேற்கொள்ளப்படும் பொலிஸ் விசாரணை, மருத்துவ ஆய்வு போன்றவற்றில் இவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இதைவிட போட்டியிட்டு வண்டிகளை ஓட்டுவதும் நடப்பதுண்டு. அதனாலும் பல விபத்துகள் ஏற்படுகின்றன. என்னுடைய சொந்த அனுபவத்திலேயே இதைப் பல தடவை கண்டிருக்கிறேன். பேருந்து ஓட்டுநர்களில் அதிகமானோர் கைத்தொலைபேசியில் உரையாடிக் கொண்டே வண்டிகளைச் செலுத்துகிறார்கள். தங்களுடைய பேருந்தில் பயணிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய பாதுகாப்புக்குத் தான் பொறுப்பாளி என்ற எந்தக் கரிசனையும் பொறுப்புணர்வும் அவர்களிடம் இருப்பதில்லை. அரச பேருந்து ஓட்டுநர்கள் கூட இதில் விலக்கில்லை.

இதற்கு அவர்களைப் பணிக்குச் சேர்க்கும் போதே நிபந்தனை விதிக்கப்பட வேண்டும். வண்டியைச் செலுத்தும் போது தொலைபேசியில் உரையாடினால் பணி நீக்கம் செய்யப்படுவார் என்ற கட்டுப்பாடு இருக்க வேண்டும். அவ்வாறே இரண்டு வாகனங்களுக்கிடையில் போட்டி வந்து விடும். ஒருவரை ஒருவர் முந்திச் செல்லக் கூடாது என்ற போட்டியில் சாலை விதிகளையெல்லாம் புறந்தள்ளி விட்டு வண்டிகளை விரைவாக ஓட்டுகிறார்கள்.

ஒரு தடவை டிப்பர் வாகனமொன்றுடன் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்து போட்டியிட்டது. அந்தப் பேருந்தில் நானும் பயணித்தேன். டிப்பர் வாகனங்கள் வரிசையாகச் சென்று கொண்டிருந்தன. அவற்றை முந்திச் செல்வதற்கு பேருந்து முயற்சித்தது. அதை டிப்பர்ச் சாரதிகள் விரும்பவில்லை. எப்படியோ ஒரு டிப்பரை பேருந்துச் சாரதி முந்தி விட்டார். டிப்பர்ச் சாரதி பேருந்தை விரட்டிக் கொண்டே வந்தார். அந்த டிப்பர் சாரதிக்கும் பேருந்துக்கு முன்பாகச் சென்று கொண்டிருக்கும் டிப்பர் சாரதிக்கும் இடையில் உரையாடல் நடந்திருக்க வேண்டும்.

அதனால், முன்னே சென்ற டிப்பர் சாரதி பேருந்து முந்திச் செல்வதற்கு இடமளிக்காமல் வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் பேருந்துச் சாரதி வண்டியை வேகப்படுத்தி, சாலையின் ஓரத்துக்குச் சென்று டிப்பரை முந்தினார். அப்படி முந்தும் போது வேண்டுமென்றே பேருந்தை சரித்து, டிப்பரின் பக்கக் கண்ணாடியைப் பேருந்தினால் பிடுங்கினார். இப்படியெல்லாம் நடக்கும் போது பயணிகள் பதட்டமடைந்து சத்தமிடத் தொடங்கி விட்டனர். எனக்கு நெஞ்சு திக் திக் என்று அடித்துக் கொண்டது. அதையெல்லாம் பேருந்தின் ஓட்டுநரோ நடத்துநரோ பொருட்படுத்திக் கொள்ளவேயில்லை. அவர்களுக்கு இது வேடிக்கையும் வழமையுமாகும். இப்படியான சந்தர்ப்பங்களில் குறித்த சாரதிகளுக்கிடையில் கைகலப்புகள் நிகழ்வதும் உண்டு. அவையும் சாதாரணம் (23ம் பக்கம் பார்க்க)

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! அனுகூலமாக அனைத்து காரியங்களும் நடக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்சனைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற் கொள்வீர்கள். தொழில் வியாபாரம் சீராக நடக்கும்.




ரிஷபராசி அன்பர்களே! பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரசசனைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணத்தின் போது கவனம் தேவை. குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே திடீர் மனவருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயல்பாடுகள் மனதுக்கு திருப்தி அளிக்கும். வழக்குகளில் மெத்தனம் காணப்படும்.




மிதுனராசி அன்பர்களே! தேவையற்ற மனக்கவலை அகலும். வழக்கு விவகாரங்களில் இருந்த தாமதமான போக்கு நீங்கும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளில் கவனம் தேவை. ஆயுதங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை.




கடகராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். வேலை பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு வரலாம். விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர்.




சிம்மராசி அன்பர்களே! சிக்கல்கள் தீரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சனையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவர். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்கு காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மதிப்பு கூடும். வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும்.




கன்னிராசி அன்பர்களே! மன சஞ்சலம் நீங்கும். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். குடும்பத்தினரின் செயல்பாடுகள் மகிழ்ச்சியை கொடுக்கும். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பிள்ளைகளை அனுசரித்து செல்வதும், அவர்கள் போக்கில் விட்டு பிடிப்பதும் நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும்.




துலாம்ராசி அன்பர்களே! எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். பூமி, வீடு தொடர்பான பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். எதிர்பாராத செலவு உண்டாகலாம். குடும்பத்தினரின் பேச்சுக்கு எதிர்த்து பேசுவதை தவிர்ப்பது நன்மை தரும். கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகளிடம் அன்பாக பழகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் திடீர் சிக்கல் ஏற்பட்டு சரியாகும்




விருச்சிகராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். கணவன் மனைவிக்கிடையில் இருந்த சங்கடங்கள் தீரும். பிள்ளைகள் கல்வி பற்றிய கவலை நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பரபரப்பு நீங்கி பணிகளை கவனிப்பர்.






தனுசுராசி அன்பர்களே! திட்டமிட்டு எதையும் செய்ய வேண்டியது அவசியம். வீண்பழிவர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே வாக்குவாதம், பிள்ளைகளின் செயல்களால் மனவருத்தம் போன்றவை ஏற்படலாம். வீட்டில் உள்ள பொருட்களை கவனமாக பாதுகாப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல்கள் ஏற்படும்.




மகரராசி அன்பர்களே1 சாமர்த்தியம் அதிகரிக்கும். மனவருத்தம்நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தனாதிபதி சூரியன் சஞ்சாரத்தால் பணதேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும், குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.




கும்பராசி அன்பர்களே! வீண் செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்னைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகிவிடும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம்.




மீனராசி அன்பர்களே! சாதகமான பலன்கள் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம், பணவரவில் திருப்தி இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும். திருமணம் தொடர்பான பேச்சு நடக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# 2 மரணத் தீர்ப்புக்கள்! உள்நாட்டு

(15ம் பக்கத் தொடர்ச்சி) அது.பன்னாட்டு விசாரணைப் பொறிமுறை வேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கையைப் பலப்படுத்தும் ஒரு வெற்றியும் அது.

தமிழ்மக்கள் மட்டுமல்ல ராஜபக்ச தரப்பும்கூட பன்னாட்டு விசாரணைப் பொறிமுறை அல்லது வெளிநாட்டு விசாரணைப் பொறிமுறை நம்பகத்தன்மை மிக்கது என்று நம்புகிறது என்பதற்கு ஆகப்பிந்திய உதாரணம் உண்டு. இப்பொழுது கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் இருக்கும் சுரேஷ் சலேயின் வழக்கறிஞரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சஞ்சீவ ஜெயவர்தன அவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் குண்டு வெடிப்பு தொடர்பான அனைத்துலக விசாரணைகளின் முடிவில் தமது கட்சிக்காரர் ஆகிய சுரேஷ் சலே குற்றவாளியாகக் காணப்படவில்லை என்பததனை அவர் தனது கட்சிக்காரரை நியாயப்படுத்துவதற்கு ஓர் ஆதாரமாக முன்வைக்கின்றார். அதாவது சுரேஷ் சலேயின் தரப்பு தன்னை நியாயப்படுத்துவதற்கு அனைத்துலக விசாரணையை ஓர் ஆதாரமாகக் காட்டுகிறது.ஈஸ்டர் குண்டு வெடிப்பில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் சுரேஷ் சலே அவ்வாறு அனைத்துலக விசாரணையின் நம்பகத்தன்மையை ஓர் ஆதாரமாகப் பயன்படுத்தலாம் என்றால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அதைக் கேட்பது நியாயந் தானே?

கடந்த மாத முடிவில் செம்மணியில் யாழ் கத்தோலிக்க மறை மாவட்டத்தைச் சேர்ந்த குருவானவர்கள் ஓர் அமைதிப் பேரணியை முன்னெடுத்தார்கள். அந்தப் பேரணியின் பிரதான கோரிக்கை பன்னாட்டு விசாரணை வேண்டும் என்பது தான். ஆனால் அரசாங்கம் பன்னாட்டு விசாரணையை ஏற்றுக்கொள்ளவில்லை. கடந்த ஆண்டு இடம்பெற்ற ஐநா அமர்வுகளில் அதனை வெளிவிகார அமைச்சர் விஜித ஹேரத் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறியிருந்தார்.

பன்னாட்டு விசாரணைப் பொறிமுறையை ஏற்றுக்கொள்வதில்லை என்றால் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை, உள்நாட்டு நீதி பரிபாலனக் கட்டமைப்பு என்பவற்றின் நம்பகத்தன்மையை உள்நாட்டிலும் அனைத்துலக அளவிலும் பலப்படுத்த வேண்டும். அதை நோக்கி அரசாங்கம் தீர்மானகரமாக இயங்குகிறது. ஏற்கனவே செம்மணிப் புதைகுழி விடயத்தை அரசாங்கம் உள்நாட்டு நீதி நிர்வாகக் கட்டமைப்பின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்துகிறது.

கடந்த சுமார் 23 மாதங்களாக அரசாங்கம் முன்னெடுத்துவரும் சட்ட நடவடிக்கைகள் யாவும் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை மற்றும் நீதிபதி பாலன கட்டமைப்பின் நம்பகத்தன்மையை பலப்படுத்தும் நோக்கிலானவை தான். எதிர்க்கட்சிகளை தற்காப்பு நிலைக்குத் தள்ளும் நோக்கிலானவை தான். ஆனால் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையின் நம்பகத்தன்மையை பலப்படுத்துவதற்கு அவை போதுமா? குறிப்பாக தமிழ் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் அவை போதுமா? ஏனென்றால் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையின் நம்பகத்தன்னையை பலப்படுத்துவது என்பது தமிழ் மக்களின் நம்பிக்கைகளை வென்றெடுப்பதில் தான் தங்கியிருக்கிறது. காரணம், அந்த விசாரணைப் பொறிமுறையின் பிரதான பலியாடுகளாக இருந்தது அவர்கள் தானே?

# Reecha:- ஒரு கனவில் விழுந்த கல்

(16ம் பக்கத் தொடர்ச்சி) யாழ்ப்பாணக் கூழ், உள்ளூர் கடல் உணவு வகைகள், பாரம்பரிய தின்பண்டங்கள் என வடபகுதியின் தனித்துவமான சமையல் கலையை புதிய தலைமுறைக்குக் கடத்துவதும் அல்லது அவர்களிடம் பரப்புவதும் –நிகழ்கிறது. இதையொத்ததாக சிறிய அளவில் கிராம மட்டத்தில் எழுத்தாளரும் களப்பணியாளருமான 'காவேரிக் கலாமன்ற' இயக்குநர் சிவஞானம் யோசுவா சுவை அவை என்ற இயற்கை உணவு முறையைப் பயிற்றுவித்துப் பரவலாக்கி வருகிறார். ஆனால், அது அவரவர் தங்கள் தங்கள் வீடுகளில் செய்து உண்ணக்கூடியதான ஒரு செயற்பாடாகும்.

இன்றைய சூழலில் ReeCha போன்ற பெருநிறுவனங்கள் அறிமுகப்படுத்தும் ஒவ்வொரு விடயங்களும் பரவலான வீச்செல்லையில் மக்களிடம் சென்று சேரக் கூடிய வாய்ப்பைக் கொண்டிருக்கின்றன. இன்றைய பொதுசன உளவியல் அப்படித் தான் வடிவம் பெற்றுள்ளது, அல்லது அவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. என்தால் ReeChaவில் செய்யப்படும் பாரம்பரிய மரபு மற்றும் சூழல்சார் உணவு, கலைகள், கைவினை வெளிப்பாடுகள், உள்ளூர் உற்பத்திப் பொருட்கள், பண்ணைத் திட்டம் போன்றவை எல்லாம் இளைய தலைமுறையிடம் ஒரு ஈர்ப்பைக் கொடுக்கக் கூடியது. தாமும் அவற்றில் ஈடுபட வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தக் கூடியன.

புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் தங்களின் தாயக மண்ணிற்குத் திரும்பி, எவ்வாறு உருப்படியான மற்றும் நிலையான முதலீடுகளைச் செய்யலாம்? எப்படி வெற்றிகளைப் பெறலாம் என்பதற்கு இது ஒரு சிறந்த முன்மாதிரியாகும் (Model Project). இதைப் போல இயக்கச்சியில் இன்னொரு இயற்கைப் பூங்கா ஒன்று உருவாக்கப்படுகிறது. 'இராவணன் வனம்' என்ற பேரில் இயங்கும் அந்தப் பூங்காவிலும் ஒரு குறிப்பிட்டோருக்கான வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளன. இன்னும் ஐந்து ஆண்டுகளில் அது ஒரு நல்ல தாவரவியல் பூங்காவாக வளர்ந்திருக்கும்.

பல முதலீட்டாளர்கள் இலங்கையில் வந்து என்ன செய்வது, எப்படிச் செய்வது என்று தடுமாறுவதையும் அரசாங்கத்தோடு மல்லுக்கட்டுவதையும் கண்டிருக்கிறேன். பாஸ்கரன் இதையெல்லாம் கடந்து நிற்கிறார் என்பதை மறுக்க முடியாத உண்மை. எனவே ReeCha என்பது உணவுத்திருவிழாவில் ஏற்பட்ட சறுக்கல், அல்லது பிரச்சினை என்ற ஒரு சம்பவத்தினால் மட்டும் வைத்து மதிப்பிடக்கூடியதல்ல. அப்படி மதிப்படுவதும் சரியானதல்ல. அதற்கும் அப்பால், அது கொண்டுள்ள முக்கியத்துவம், அதனால் சமூகத்துக்கும் பிரதேசத்துக்கும் நாட்டுக்கும் கிடைக்கின்ற பயன்கள் என்ன என்பதையும் சேர்த்தே மதிப்பிடப்பட வேண்டும். அப்படி மதிப்பிடும்போது ReeCha Park & Resort (றீச்சா பூங்கா) என்பது வெறும் ஒரு பொழுதுபோக்குத் தளம் மட்டுமல்லாமல், வடமாகாணத்தின் சமூக, பொருளாதார மற்றும் விவசாய மறுமலர்ச்சியின் மிக முக்கிய அடையாளமாகவும் இருப்பதைக் காணலாம். இதுதான் ReeChaவின் பெறுமதி என எண்ணுகிறேன்.

இதேவேளை கந்தையா பாஸ்கரனுடைய அரசியல் தெரிவுகளிலும் அரசியல் குறித்து அவர் பொதுவெளியில் பகிர்ந்து கொண்டிருக்கும் கருத்துகளிலும் பலரைப்போல இந்தக் கட்டுரையாளருக்கு ஏற்பில்லை. மட்டுமல்ல, அவருடைய ஊடக அணுகுமுறைகளும் வெளிப்பாடுகளும் விவாதங்களுக்குரியவை. திருத்தம் செய்யப்பட வேண்டியவை. (23ம் பக்கம் பார்க்க)

# தமிழ் அரசியலில் தலைமைத்துவ வெற்றிடம்!

## விவாதத்திற்கான சில குறிப்புக்கள் - 02

**கட்டுரையாளர்:**
**- கருணாகரன் -**

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஒருங்கிணக்கப்பட்ட அல்லது கட்டுக் கோப்பான தலைமைத்துவம் இல்லாத ஒரு சமூகம் திசையறியாது தவிக்கும் கப்பலைப் போன்றது. அல்லது காற்றில் மிதக்கும் இலையைப் போலாகி விடும். விடுதலைக்கான அவசியத் தோடும் வேட்கையோடும் உள்ள சமூகத்துக்கு இந்த நிலை நல்லதல்ல. முறையான, அறிவும் விவேகமும் கூர்மையும் நிதானமும் அர்ப்பணிப்பும் கூடிய அரசியல் தலைமைத்துவம் இல்லாவிடில், அந்தச் சமூகம் கடுமையான ஆபத்துகளை எதிர்கொள்ள நேரிடும். தெளிவான வழிகாட்டுதல் இல்லாமல் சமூகத்திற்குள் குழுவாதமும், உட்கட்சிப் பூசல்களும் தோன்றி, மக்களின் ஒற்றுமை முழுமையாகச் சிதைந்து போகும். உள்நாட்டில் ஏராளம் பிளவுகள் ஏற்படும். பல கட்சிகளாகத் தமிழ் அரசியல் சிதைவுண்டிருப்பது இதற்குச் சான்று.

இதனால் அரசியலில் வெற்றிடம் ஏற்படும். அதாவது பல அரசியற் கட்சிகளும் தலைவர்களும் இருப்பர். அவர்களால் சமூகத்திற்கான பலமான அரசியலை உருவாக்கவோ முன்னெடுக்கவோ முடியாமலிருக்கும். இதைக் கண்டு கொண்டிருக்கிறோம். இது குறித்த சமூகத்தின் அரசியல் மீதான சர்வதேசத்தின் பார்வையை மங்கலாக்கும் அல்லது புறக்கணிப்புச் செய்யும். அதையும் பார்க்கிறோம். எல்லாவற்றிற்கும் அப்பால் இது அடக்குமுறையை மேலும் அதிகரிக்கும்

தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், பௌத்த சாசன அமைச்சு, மாவலி அபிவிருத்தித் திட்டம் என பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக அரசாங்கத்தின் மூலம் நிகழ்ந்தேறும் அரசினுடைய ஆக்கிரமிப்பு முயற்சிகள் இதற்கு ஆதாரம். இதையும் கூட இப்பொழுது நாம் நேரடியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

தெளிவும் உறுதிப்பாடும் நிதானமும் பொருத்தப்பாடுகளைக் குறித்த சிந்தனையும் கொண்ட தலைமைத்துவத்தினால் தான் உள்நாட்டு அரசியல் பிரதிநிதித்துவம், புலம்பெயர் தமிழர்களின் இராஜதந்திர நகர்வுகள், சர்வதேச நீதிமன்றங்களை நாடுதல் எனப் பல தளங்களில் சிறப்பாக வேலைசெய்ய முடியும். தற்போது துண்டுதுண்டாக இவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற போக்கு அல்லது தன்மை உண்டு. உள்நாட்டில் அரசியற்கட்சிகளாகவும் சிவில் அமைப்புகளாகவும் ஓரளவுக்கு இது நடக்கிறது. ஆனால், அது சிதைவுண்ட நிலையிலானது.

புலம்பெயர் சமூகத்தில் சாத்தியப்படக் கூடிய அளவில் மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் போன்ற விடயங்களை முன்வைத்து ராஜதந்திர முயற்சிகள் நடக்கின்றன. ஆனால், அங்கும் ஒருங்கிணைவுக்கு அப்பாலான பல அணிகள், போட்டிக் குழுக்கள், எதிர்நிலைப்பாடுடையவர்கள் என பல தரப்புகள் உள்ளன. இதனால் இவையெல்லாம் தமிழ்ச் சமூகத்தினால் எதிர்பார்க்கப்படுகின்ற தமிழ்ச் சமூகத்துக்குத் தேவைப்படுகின்ற– பெறுமானங்களைத் தர முடியாதவைகளாக உள்ளன. இதற்குக் காரணம், இவை முரண்பட்டவையாகவும் சிதறுண்ட நிலையிலும் இருப்பதேயாகும்.

இவற்றை ஒருங்கிணைப்பதன் மூலமே அரசியல் வடிமொன்றையும் அரசியல் தலைமைத்துவம் ஒன்றையும் சீரான கணிப்பிடக்கூடிய அரசியல் முன்னெடுப்பினையும் உருவாக்க முடியும். ஆகவே இவற்றுக்கிடையில் ஒருங்கிணைப்பு மிகமிக அவசியமாக உள்ளது. இதை பலரும் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர். இதைச் சாத்தியப்படுத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தலைமைத்துவம் ஒன்று தேவை. இல்லையெனில் சிதறுண்ட பலவீனமான நிலையிலேயே தமிழ்ச்சமூகத்தின் அரசியற்கட்டமைப்பும் செயற்பாடுகளும் இருக்கும்.




தகுதியான தலைவர்கள் இல்லாத இடமானது அரசியல் வெற்றிடத்தை (Political Vacuum) உருவாக்கி விடும். அதேவேளை சுயநலமிக்க சக்திகளும் எதிர்த் தரப்பினரும் அந்த வெற்றிடத்தை ஆக்கிரமித்து, சமூகத்தின் விடுதலைக் குரலையும் உணர்வையும் நசுக்கிவிடுவர். சரியான தலைமைத்துவம் இல்லாதவிடத்து, மூலோபாய வீழ்ச்சி (Strategic Failure) ஏற்பட்டு, முறையான திட்டமிடல் மற்றும் இராஜதந்திர நகர்வுகள் இல்லாமலாகி, மக்களின் போராட்டங்களும் தியாகங்களும் வீணாகி விடும். மக்களுடைய உரிமைப் பயணம் திசை மாறிப் போகும். இவ்வாறான சூழலில் உலக அரங்கில் குறித்த சமூகத்தின் தேவைகளையும், நியாயங்களையும் எடுத்துரைப்பதற்கும் உரையாடுவதற்கும் தகுதியான பிரதிநிதிகள் இல்லாத நிலை உருவாகும்.

இதனால் சர்வதேச ஆதரவும் அங்கீகாரமும் கிடைக்காமல் போகும் ஆபத்து ஏற்படும். ஆகவே ஒருமித்த குரல் இல்லாத பலவீனமான சமூகத்தை, எதிர்தரப்பினர் மிக எளிதாக அடக்கி ஆளவும், சுரண்டவும் வழிவகுத்து விடும்.தலைமைத்துவம் இல்லாத சமூகம் தன் சுயவிபரத்தை (Identity) இழந்து, அடிமைத்தனத்திலிருந்து மீள முடியாத நிலைக்குத் தள்ளப்படும்.

விடுதலையை வேண்டி நிற்கும் சமூகத்திற்கு அரசியற் தலைமைத்துவம் என்பது மூச்சுக் காற்றைப் போன்றது. அது அந்தச் சமூகத்தின் லட்சியங்களையும் ஆற்றல்களையும் ஒருமுகப்படுத்தி, இலக்குகளை வரையறுத்து, உரிமைக்கான போராட்டத்தை வழிநடத்திச் செல்ல உதவும். ஒடுக்கப்படும் மக்களின் குரலை சர்வதேச அரங்கில் ஒலிக்கச் செய்வதற்கு வாய்ப்பளிக்கும். ஒட்டுமொத்த மக்களையும் ஒன்று திரட்டிச் செல்லும் ஆற்றலை சரியான தலைமைத்துவத்தினாலேயே வழங்க முடியும். சிதறியிருக்கும் மக்களின் உணர்வுகளையும், கோரிக்கைகளையும் ஓரிடத்தில் குவித்து, தெளிவான அரசியல் இலக்குகளை (Political Goals) வடிவமைத்துத் தருகிறது.

முக்கியமாக சோர்வடையும் தருணங்களில் சமூகத்திற்கு நம்பிக்கையையும், உத்வேகத்தையும் அளித்து, ஒட்டுமொத்த மக்களையும் ஒரே இலக்கின் கீழ் (Mass Mobilization) அணி திரட்டுகிறது. ஆகவே விடுதலை வேண்டி நிற்கும் சமூகத்தின் இலக்கைத் தீர்மானிக்கவும், அதற்கான வகையில் மக்களை ஒருங்கிணைக்கவும் அரசியல் தலைமைத்துவம் அவசியமானது.

மேலும் மூலோபாய திட்டமிடலில் (Strategic Planning) முக்கியமான பங்களிப்பைச் செய்யக் கூடியதாக உள்ளது. உணர்ச்சி வசப்படாமல், ராஜதந்திர வழிகள், சர்வதேச ஆதரவு திரட்டுதல், மற்றும் சாத்தியமான நகர்வுகள் மூலம் உரிமைகளை வென்றெடுப்பதற்கான வழிமுறைகளை உருவாக்குகிறது. அதாவது சர்வதேச இராஜதந்திரம் (Global Diplomacy) க் குறித்துச் சிந்திக்கவும் அதைச் சரியான முறையில் திட்டமிட்டுக் கையாளவும் கூடியதாக இருக்கிறது.

இதன் மூலம் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்து, சமூகத்தின் நியாயமான கோரிக்கைகளுக்கு வெளியுலக ஆதரவையும், அங்கீகாரத்தையும் பெற்றுத் தருகிறது. கூடவே சமூகத்தின் உரிமைகளுக்காகப் போராடும் அதேவேளை, அடிப்படை ஜனநாயக விழுமியங்களைப் பேணி, சமூகத்தின் கட்டமைப்பு சிதையாமல் பாதுகாக்கிறது.

ஆக, தலைமைத்துவம் என்பது அதிகாரத்தை நோக்கிய பயணமாக அல்லாமல், சமூகத்தின் மொத்தத் தியாகங்களையும் உழைப்பையும் வெற்றியாக மாற்றும் பொறுப்புணர்வாக இருக்க வேண்டும். மேலும் தற்கால உலகளாவிய சமூகம் மற்றும் அரசறிவியல் கோட்பாடுகள் குறித்த தெளிவு, சிறந்த தலைமைத்துவத்திற்கு அடித்தளமாக அமைகிறது.

பலமான தலைமைத்துவம் இல்லாத போது, எதிர்த்தரப்புக்கு 'பிரித்தாளும் சூழ்ச்சி' (Divide and Rule) யைச் செய்வது மிகவும் எளிதாகி விடுகிறது. ஈழத்தமிழர் அரசியற் சூழலில் அரசியல் கட்சிகள் உடைக்கப்படுவதும் உடைவதும் மிகச் சாதாரணமாகி விட்டது.

இது மக்களுக்கு எரிச்சலை ஏற்படுத்துவதோடு, நம்பிக்கையீனத்தையும் தருகிறது. தேர்தல் காலங்களில் சுயேச்சைக் குழுக்களும் குட்டிப் பிரிவுகளும் பெருகுவதும் தற்செயலானவை அல்ல. இதற்குப் பின்னணியாக தமிழ் அரசியல் தரப்பினரின் அறிவீனத்திற் தொடங்கி, ஒடுக்கும் அரசியற் தரப்புகளின் சூழ்ச்சி வரையில் உண்டு. இது தமிழ் மக்களின் ஒருங்கிணைந்த அரசியல் நிலைப்பாட்டையும் உறுதிப்பாட்டையும் சிதைக்கிறது. கூடவே தமிழ் மக்களுடைய ஜனநாயக அரசியற் பலத்துக்கான அடையாளமாக இருக்கும் வாக்கு வங்கியையும் சிதறடித்து விடுகிறது.

அரசியல் ரீதியாக இதைச் சிதைப்பு உத்தி (Fragmentary Strategy) என்பர். இதன் மூலம் தமிழ்ச் சமூகத்தின் அரசியற் பேரம் பேசும் சக்தியை (Bargaining Power) அரசாங்கம் குறைத்து விடுகிறது. இது ஒடுக்குமுறைக்கு வாய்ப்பான இன்னொரு வலுவான உத்தியாகும். இதற்குத் தமிழ் அரசியற் கட்சிகளும் தமிழ் மக்களும் பலியாகிக் கொண்டிருக்கும் துயர நிலை நீடிக்கிறது.

ஒரு சமூகத்தின் அரசியற் சக்திகளுக்கிடையே அகமுரண்பாடுகள் வலுக்கும் போது எதிர்த்தரப்புக்கு (ஒடுக்குமுறைச் சக்திக்கு) வாய்ப்பாகி விடுகிறது. இது ஒரு வகையில் எதிர்த் தரப்பின் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதாகும்.

1970களில் ஆயுதமேந்திய விடுதலை (22ம் பக்கம் பார்க்க)

# சிறைச்சாலைகளில் தொடரும் கலவரங்கள்: பாதுகாப்புத் தோல்வியா? கட்டமைப்பு நெருக்கடியா?

சிறிலங்காவின் சிறைச்சாலைகளில் அடுத்தடுத்து இடம்பெற்றுவரும் கலவரங்களும் மோதல்களும் நாட்டின் சிறை நிர்வாகம் தொடர்பாகப் பலத்த கேள்விகளை எழுப்பியுள்ளன.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் கடந்த ஜூலை மாதம் இடம்பெற்றபெரும் மோதலின் அதிர்ச்சி அடங்குவதற்குள், மகர, மகசின், குருவிட்ட மற்றும் பல்லன் சேனை உள்ளிட்ட தடுப்பு நிலையங்களிலும் அமைதியின்மை பதிவாகியுள்ளது.

இவை தனித்தனி சம்பவங்களா? அல்லது அளவுக்கு அதிகமான கைதிகள், போதைப்பொருள் கும்பல்களின் செல்வாக்கு, நிர்வாகப் பலவீனம் மற்றும் நீண்டகால நீதிமன்றத் தாமதம் ஆகியவற்றால் உருவாகியுள்ள கட்டமைப்பு நெருக்கடியின் வெளிப்பாடுகளா?

## அளவுக்குமீறிய கைதிகள் - தடுமாறும் நிர்வாகம்

சிறிலங்காவின் சிறைச்சாலை அமைப்பு தற்போது கடுமையான பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 5 மற்றும் 6ஆம் திகதிகளில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இரண்டு கைதிக் குழுக்களுக்கு இடையே ஆரம்பமான மோதல் பெரும் கலவரமாக மாறியது. அதிகாரிகளும் கைதிகளும் உட்படகுறைந்தது 26 பேர் உயிரிழந்ததாக பின்னர் வெளியான தகவல்கள் தெரிவித்தன. நூற்றுக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர். உயிரிழப்பு எண்ணிக்கை தொடர்பாக வெவ்வேறு தரப்புகள் மாறுபட்ட புள்ளிவிவரங்களை வெளியிட்டுள்ள நிலையில், சம்பவம் குறித்து சுயாதீனமான விசாரணை நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையும் வலுப்பெற்றது.

நீர்கொழும்பு சம்பவத்தைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான கைதிகள் நாட்டின் வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டனர். மாற்றப்பட்டகைதிகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு உரிய தகவல்கள் வழங்கப்படுகின்றனவா என்பது தொடர்பாக மனித உரிமை அமைப்புகள் கவலை வெளியிட்டன.



இதற்குப் பின்னர் மகர சிறைச்சாலையிலும் கலவரம் ஏற்பட்டது. கட்டடங்கள் சேதப்படுத்தப்பட்டதுடன், நிர்வாகப் பகுதிகளில் தீவைக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். சுமார் ஆயிரம் கைதிகளை மட்டுமே தங்கவைக்கக் கூடிய மகர சிறையில் நான்காயிரத்துக்கும் அதிகமானவர்கள் வைக்கப்பட்டிருந்ததாகச் செய்திகள் சுட்டிக்காட்டின.

ஆகஸ்ட் 6 மற்றும் 7ஆம் திகதிகளில் கொழும்பு மகசின் சிறைச்சாலை மற்றும் குருவிட்ட சிறைச்சாலையில் ஏற்பட்ட தனித்தனி மோதல்களில் மூன்று கைதிகள் உயிரிழந்ததாக அரசாங்கம் அறிவித்தது. பல்லன்சேனை சீர்திருத்த நிலையத்திலும் எதிர்ப்பு நடவடிக்கை ஏற்பட்டது. இந்த மோதல்களுக்குப் போட்டிப் போதைப்பொருள் குழுக்களுக்கு இடையேயான பகை காரணமாக இருக்கலாம் என்பது அதிகாரிகளின் ஆரம்பக் கருத்தாகும். எனினும், விசாரணைகள் முடிவடையாத நிலையில் இதனை இறுதியானகாரணமாகக் கருதமுடியாது.

## நெரிசலே பிரதான காரணமா?

சிறிலங்காவின் சிறைச்சாலைகளில் ஏறத்தாழ 10 ஆயிரம் முதல் 11 ஆயிரம் பேரைத் தங்கவைக்கும் வசதிகளே உள்ளன. ஆனால் தற்போது 39 ஆயிரம் முதல் 41 ஆயிரத்துக்கும் அதிகமான கைதிகள் வைக்கப்பட்டுள்ளதாக அண்மைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதாவது, சில சிறைச்சாலைகள் அவற்றின் கொள்ளளவைவிட மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகமான கைதிகளுடன் இயங்குகின்றன.

இந்த நெரிசலான சூழலில், கைதிகளை முறையாகப் பிரித்துவைப்பது, போதைப் பொருள் மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவது, மருத்துவம், சுகாதாரம் மற்றும் குடிநீர் வசதிகளை வழங்குவது, ஒவ்வொரு பிரிவையும் போதுமான அதிகாரிகளுடன் கண்காணிப்பது என்பன பெரும் சவால்களாக மாறுகின்றன.

## சிறைக்குள் போதைப்பொருள் குழுக்களின் ஆதிக்கம்?

சிறிலங்கா மனித உரிமைகள் ஆணைக் குழுவின் விரிவான ஆய்வும் சிறைச்சாலை அமைப்பு அளவுக்கு அதிகமான கைதிகளால் நிரம்பியிருப்பதுடன், போதிய வளங்களின்றி இயங்குவதாக ஏற்கனவே கண்டறிந்திருந்தது. தண்டனை வழங்குவதை மையமாகக் கொண்ட தற்போதைய அணுகுமுறை, புனர்வாழ்வு மற்றும் சமூகத்தில் மீளிணைக்கும் நடைமுறையாக மாற்றப்படவேண்டும் என்றும் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.
சிறிலங்கா மனித உரிமைகள் ஆணைக்குழு

## விசாரணைக் கைதிகளின் எண்ணிக்கை

சிறையில் உள்ள அனைவரும் நீதிமன்றத்தால் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள் அல்லர்.வழக்கு விசாரணையை எதிர்நோக்கும் சந்தேகநபர்களும் கணிசமான எண்ணிக்கையில் தடுப்புக் காவலில் உள்ளனர்.

வழக்குகள் நீண்டகாலம் இழுபறிப்படுதல், பிணைவழங்குவதில் ஏற்படும் தாமதம், பிணை நிபந்தனைகளை நிறைவேற்ற முடியாத வறுமையான பின்னணியைக் கொண்டவர்கள் மற்றும் சிறிய குற்றச்சாட்டுகளுக்காக விளக்கமறியலில் வைக்கப்படுவோர் ஆகிய காரணங்கள் சிறைச்சாலை நெரிசலை மேலும் அதிகரிக்கின்றன.

இதனால் சிறைச்சாலைகளின் பிரச்சினையைச் சிறை நிர்வாகத்தால் மட்டும் தீர்க்கமுடியாது. காவல்துறை, சட்டமா அதிபர் திணைக்களம், நீதிமன்றங்கள், நீதி அமைச்சு மற்றும் புனர்வாழ்வு அமைப்புகள் இணைந்து செயல்படவேண்டியுள்ளது.

## சிறைக்குள் போதைப்பொருள் வலையமைப்பு

அண்மைய கலவரங்களுக்குப் போட்டிப் போதைப்பொருள் குழுக்களே காரணம் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஆனால் கைதிகள் வெளியுலகத்துடன் கட்டுப்படுத்தப்பட்ட தொடர்பையே கொண்டிருக்கும் நிலையில்,போதைப் பொருட்கள், தொலைபேசிகள் மற்றும் ஏனைய தடைசெய்யப்பட்ட பொருட்கள் சிறைகளுக்குள் எவ்வாறு செல்கின்றன என்ற கேள்விக்குப் பதில் தேவை.

சிறைக்குள் குற்றக் குழுக்கள் தொடர்ந்து செயற்படுகின்றன என்றால், அது கைதிகளின் குற்றச் செயற்பாடு மட்டுமல்ல; கண்காணிப்பு, புலனாய்வு மற்றும் நிர்வாக நடைமுறைகளில் காணப்படும் பலவீனங்களையும் வெளிப்படுத்துகிறது.





## பாதுகாப்பு மட்டும் தீர்வா?

ஒவ்வொரு கலவரத்திற்குப் பின்னரும் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் களமிறக்கப்படுகின்றனர்.பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு கைதிகள் வேறு சிறைகளுக்கு மாற்றப்படுகின்றனர்.

## விசாரணைக் குழுக்களுக்கு அப்பால் தேவைப்படும் நிரந்தரத் தீர்வு

இவை உடனடியாக நிலைமையைக் கட்டுப்படுத்த உதவலாம். ஆனால் நெரிசல், நீதிமன்றத் தாமதம், பணியாளர் பற்றாக்குறை, ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் புனர்வாழ்வு வசதியின்மை என்பன தீர்க்கப்படாவிட்டால், கைதிகளை ஒரு சிறையிலிருந்து இன்னொரு சிறைக்கு மாற்றுவது பிரச்சினையையும் இடமாற்றம் செய்வதாகவே அமையும்.

## தேவையான நடவடிக்கைகள்

நீண்டகாலத் தீர்வாக,

**பிணையில் விடுவிக்கக்கூடியவர்களின் வழக்குகளை விரைவாகப் பரிசீலித்தல்.**

**சிறிய குற்றங்களுக்கு சிறைத்தண்டனைக்கு மாற்றான சமூகத் தண்டனைகளைப் பயன்படுத்துதல்.**

**போதைப்பொருள் பயன்பாட்டுடன் தொடர்புடையவர்களுக்கு மருத்துவமும் புனர்வாழ்வும் வழங்குதல்.**

**தண்டனைக் கைதிகள், விசாரணைக் கைதிகள் மற்றும் ஆபத்தான குற்றக் குழுக்களைத் தனித்தனியாக வைத்தல்.**

**சிறைகளுக்குள் நடைபெறும் சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து சுயாதீன விசாரணை நடத்துதல்.**

**கண்காணிப்புக் கமெராக்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை மேம்படுத்துதல்.**

**கைதிகளின் குடும்பங்களுக்கு உடனுக்குடன் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குதல்.**

**காவலில் ஏற்படும் உயிரிழப்புகள் குறித்து வெளிப்படையான நீதித்துறை விசாரணைகளை நடத்துதல்.**

ஆகிய நடவடிக்கைகள் அவசியமாகின்றன.

சிறைச்சாலைகள் குற்றவாளிகளை அடைத்துவைக்கும் இடங்கள் மட்டுமல்ல. சட்டத்தின் கீழ் தண்டனை அனுபவிப்பவர்களைச் சீர்திருத்தி மீண்டும் சமூகத்துடன் இணைக்கவேண்டிய நிறுவனங்களாகவும் அவை செயல்படவேண்டும்.

நீர்கொழும்பில் ஆரம்பித்து நாட்டின் பல சிறைச்சாலைகளுக்கும் பரவியுள்ள அமைதியின்மை, தனிப்பட்ட கைதிக் குழுக்களுக்கிடையிலான மோதலாக மட்டும் பார்க்கப்பட முடியாது. அது பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் சிறைச்சாலை நெரிசல், நீதித்துறைத் தாமதம், நிர்வாகக் குறைபாடு மற்றும் புனர்வாழ்வு வசதியின்மை ஆகியவற்றின் எச்சரிக்கைமணியாகும்.

விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள் வெளியிடப்படுவதும், பொறுப்புக் கூறல் உறுதி செய்யப்படுவதும், பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதுமே அடுத்த கலவரத்தைத் தடுக்கும் உண்மையான நடவடிக்கையாக அமையும். ●

15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி
உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

ஹோர்மூஸ் நீரிணை வழியிலான கப்பல் போக்குவரத்தை நிர்வகிப்பதற்கான புதிய ஏற்பாடு குறித்த பேச்சுவார்த்தைகள் 'நேர்மறையாக' இருப்பதாகவும், முன்னேறிய கட்டத்தில் இருப்பதாகவும் இரான் மற்றும் ஓமன் ஆகிய இரு நாடுகளும் தெரிவித்துள்ளன. இது கப்பல் போக்குவரத்து மீண்டும் தொடங்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

முனைகளும்' என்று குறிப்பிடப்பட்டிருந்த நிலையில், தற்போது மற்ற நாடுகளும் தெளிவாக சேர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பரந்த பிராந்திய பாதுகாப்பு உத்தரவாதங்கள் கோரப்படுகின்றன.

3. கடற்படை முற்றுகையை முடிவுக்கு கொண்டு வந்து இரானைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து அமெரிக்க

இந்தக் கோரிக்கையும் புதிதல்ல. வெளிநாடுகளில் முடக்கப்பட்ட அல்லது முடக்கப்பட்ட இரானிய சொத்துகளை விடுவிப்பது குறித்து முன்பும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன.

இந்த ஆறு நிபந்தனைகளும் தற்போது ஹோர்மூஸ் நீரிணை மீண்டும் திறக்கப்படுவதற்கு முன் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று இரான்

# ஹோர்மூஸ் நீரிணையைத் திறக்க அமெரிக்காவிடம் இரான் முன் வைக்கும் 6 நிபந்தனைகள்!

கடந்த சில நாட்களாக ஹோர்மூஸ் நீரிணை வழியாகச் செல்லக்கூடிய சாத்தியமான புதிய பாதை குறித்த பேச்சுவார்த்தைகளில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த புதிய பாதையின் நிர்வாகப் பொறுப்பை இரானும் ஓமனும் பகிர்ந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்படலாம் என்று கூறப்படுகிறது.

ஆனால் நம்பிக்கை அதிகரித்துள்ள நிலையில், இந்த முக்கிய நீர்வழிப் பாதை மீண்டும் திறக்கப்படுவதற்கு முன்பு அமெரிக்கா நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகளை இரான் பகிரங்கமாகப் பட்டியலிட்டுள்ளது. ஜுன் 17 அன்று இரான் மற்றும் அமெரிக்காவிற்கு இடையே ஒப்புக்கொள்ளப்பட்ட அமெரிக்க - இரான் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அம்சங்களைத் தாண்டி பல நிபந்தனைகள் செல்கின்றன. மற்ற சில நிபந்தனைகள் முன்பே வலியுறுத்தப்பட்டவையாக இருந்தாலும், இப்போது அவை நீரிணையை மீண்டும் திறப்பதுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளன.

அரசு ஒளிபரப்பு நிறுவனமான ஐ.ஆர்.ஐ.பி வெளியிட்ட அறிக்கையில், இரானின் முன்னாள் உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் செயலாளரும், அதிஉயர் தலைவரின் தற்போதைய ஆலோசகருமான முகமது பாகர் சோல்கதர், அமெரிக்கா தனது நடத்தையை 'திருத்திக்கொள்ள' வேண்டும் என்றும், கோரிக்கைகளின் பட்டியலை நிறைவேற்ற வேண்டும் என்றும் எச்சரித்தார். 'நடத்தை திருத்தம்' என்பது பின்வருவனவற்றைக் குறிக்கிறது என்று அது கூறியது:

1. எந்தவொரு வகையிலும் இரானை அச்சுறுத்தக்கூடாது அல்லது இந்தத் தேசத்தின் புனிதங்களை இழிவுபடுத்தக் கூடாது.

அமெரிக்கா இந்நாட்டை அச்சுறுத்துவதை நிறுத்த வேண்டும் என்றும், இதுபோன்ற அச்சுறுத்தல்கள் மீண்டும் நிகழாது என்பதற்கான உத்தரவாதங்களை வழங்க வேண்டும் என்றும் இரான் கூறுகிறது. இது பெருமளவில் ஓர் அரசியல் மற்றும் பாதுகாப்பு கோரிக்கையாகும். போர் நிறுத்த ஒப்பந்தங்கள் இயல்பாகவே இரு தரப்பினரும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வதை முன்னிறுத்தினாலும், எதிர்கால அச்சுறுத்தல்களுக்கு எதிரான வெளிப்படையான உத்தரவாதங்களை கோருவது, இடைக்கால ஒப்பந்த விதிகளுக்குள் தெளிவாக இடம்பெறாத ஒரு விரிவான மூலோபாய நிபந்தனையாகத் தோன்றுகிறது.

2. இரான் மற்றும் அதன் கூட்டாளிகள் மீது லெபனான், பாலத்தீனம், ஏமன், இராக் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெறும் போர் மற்றும் தாக்குதல்களை நிரந்தரமாக நிறுத்த வேண்டும்.

இரானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகள் மட்டுமல்லாமல், லெபனான், பாலத்தீனம், ஏமன் மற்றும் இராக் ஆகிய நாடுகளில் உள்ள அதன் கூட்டாளிகள் மற்றும் இணை அமைப்புகளுக்கு எதிரான நடவடிக்கைகளும் முழுமையாக நிறுத்தப்பட வேண்டும் என்று இரான் வலியுறுத்துகிறது. ஜுன் மாத புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் 'லெபனான் உட்பட அனைத்து

கடல் மற்றும் விமானப் படைகளை திரும்பப் பெற வேண்டும்.

ஜுன் மாத அமெரிக்கா - இரான் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், 30 நாட்களுக்குள் அமெரிக்கா தனது முற்றுகையை முடித்திருக்க வேண்டும். ஆனால் அது ஹோர்மூஸ் நீரிணை மீண்டும் திறக்கப்படுவதுடன் நேரடியாக இணைக்கப்படவில்லை.

4. இரானுக்கு எதிராக நடத்தப்பட்ட இரண்டு போர்களால் ஏற்பட்ட முழு

கூறும் நிபந்தனைகளின் வரம்பை விரிவுபடுத்துகின்றன.

பிபிசியின் மத்திய கிழக்கு விவகார ஆய்வாளர் செபாஸ்டியன் அஷர் கூறுகையில், இது இரானின் நிலைப்பாட்டில் கடுமையான மாற்றத்தைக் காட்டுகிறது. 'இந்த நிபந்தனைகள் ஏற்கனவே புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கட்டமைப்புக்குள் இருந்து வந்தவையே. ஆனால் அவை முன்வைக்கப்படும் நேரமும் நடைமுறையும்

பொதுமக்கள் முன்னிலையில் முன்வைக்கப்படும் கருத்துகள், பேச்சுவார்த்தை மேசையில் பிரதிபலிக்க வேண்டிய அவசியமில்லை,' என்று அவர் கூறினார்.

இது ஒரு பேச்சுவார்த்தை உத்தியாகவும் இருக்கக்கூடும் என்று பார்சி கருதுகிறார். 'இந்த செயல்முறையை நீட்டிக்க முயற்சிப்பதற்கான நடவடிக்கையாக இதை எளிதாகக் கருதலாம்,' என்று அவர் தெரிவித்தார். ஜுன் மாதத்தில் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இரான் மிக விரைவாக ஏற்றுக்கொண்டது என்ற நம்பிக்கை ஆட்சியின் கடுமையான அணிகளில் பலரிடமும் இருப்பதாக அவர் கூறினார்.

அப்போது எட்டப்பட்ட ஒப்பந்தம் சில நாட்களே நீடித்தது. அது கையெழுத்தான சில நாட்களிலேயே இரு தரப்பினருக்கும் இடையிலான பரஸ்பர தாக்குதல்கள் மீண்டும் தொடங்கியதால், ஒப்பந்தம் முறிந்து போனது.

அந்த பேச்சுவார்த்தைகள் இன்னும் நீண்டகாலம் இழுத்தடிக்கப்பட்டிருந்தால், எண்ணெய் விலைகள் மேலும் உயர்ந்து உலகப் பொருளாதாரத்தின் மீது கூடுதல் அழுத்தம் ஏற்பட்டி



சேதத்திற்கும் இழப்பீடு வழங்க வேண்டும்.

இது 2025ஆம் ஆண்டில் நடைபெற்ற 12 நாள் போரும், அதற்கு அடுத்ததாக நடைபெற்ற சமீபத்திய போரும் குறித்ததாகும். ஜுன் மாத ஒப்பந்தத்திற்குப் பிறகு எட்டப்பட வேண்டிய இறுதி உடன்பாட்டின் ஒரு பகுதியாக இழப்பீட்டு நடைமுறைகள் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்போது, ஹோர்மூஸ் நீரிணையை திறப்பதற்கான முன் நிபந்தனையாக இழப்பீட்டை இரான் வெளிப்படையாக இணைத்துள்ளது.

5. இரான் மக்களின் மீது விதிக்கப்பட்டுள்ள 'கொடூரமான மற்றும் சட்ட விரோதமான' தடைகளை நீக்க வேண்டும்.

தடைகள் தளர்த்தப்படுவதற்கான கால அட்டவணை, இறுதி உடன்பாட்டை நோக்கிய பேச்சுவார்த்தைகளின் ஒரு பகுதியாக இருக்கும் என ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆகவே, இரான் இங்கே முற்றிலும் புதிய விஷயத்தை முன் வைக்கவில்லை. இதில் புதிய விஷயம் என்னவென்றால், தடைகள் நீக்கப்படுவது ஹோர்மூஸ் நீரிணையை மீண்டும் திறப்பதோடு நேரடியாக இணைக்கப்பட வேண்டும் என்ற இரானின் வலியுறுத்தலே ஆகும்.

6. இரான் மக்களின் முடக்கப்பட்ட மற்றும் 'திருடப்பட்ட' சொத்துகளை எந்த நிபந்தனையும் இன்றி விடுவிக்க வேண்டும்.

மிகவும் மாறுபட்டதாகத் தெரிகிறது,' என்று அவர் கூறினார். ஹோர்மூஸ் நீரிணை 'இன்னும் பெரும்பாலும் மூடப்பட்ட நிலையிலேயே உள்ளது' என்பதால், தங்களுக்கு வலுவான நிலைமை ஏற்பட்டுள்ளதாக இரான் கருதக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதே நேரத்தில் அமெரிக்க வெளிநாட்டு கொள்கை ஆய்வு நிறுவனமான குயின்சி இன்ஸ்டிடியூட்டின் நிர்வாக துணைத் தலைவரான ட்ரிட்டா பார்சி, பிபிசி உலக சேவையின் வீக்எண்ட் நிகழ்ச்சியில் பேசுகையில், இந்த நிலைப்பாடுகள் மிகைப்படுத்தப்பட்டவை என்பதை இரானே அறிந்திருக்கிறது என்றும், இறுதியில் அவற்றில் இருந்து பின்வாங்கக்கூடும் என்றும் தாம் நம்புவதாகக் கூறினார்.

ருக்கும் அப்படியானால் அதிபர் டிரம்ப் இரான் இலக்குகளுக்கு எதிராக தாக்குதல்களை நடத்த அவசரப்படாமல் இருந்திருக்கக் கூடும் என்று இரானில் சிலர் வாதிடுகின்றனர் என பார்சி கூறினார். மீண்டும் அதே 'தவறை' செய்ய இரான் தயாராக இல்லை.

இருப்பினும், ஹோர்மூஸ் நீரிணை தொடர்பான ஓர் ஒப்பந்தம் இன்னும் சில நாட்களுக்குள் எட்டப்படக்கூடும் என்று அவர் தொடர்ந்து கணிக்கிறார்.

கப்பல்களில் காத்திருப்பவர்களும், எண்ணெய் விலைகளை கவனித்து வருபவர்களும், அவரது கணிப்பு சரியாக இருக்க வேண்டும் என்று நிச்சயமாக நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

நன்றி:- பிபிசி



# தமிழ் அரசியலில் தலைமைத்துவ வெற்றிடம்!

(19ம் பக்கத் தொடர்ச்சி) இயக்கங்கள் உருவாகிய போது இலங்கை அரசும் சிங்கள இனவாதிகளும் அச்சமடைந்ததுண்டு. பல இயக்கங்கள் என்பதால், பல முனை எதிர்ப்பைச் சந்திக்க வேண்டும் என்ற அச்சம் அது. ஆனால், அந்த அச்சம் விரைவிலேயே அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் (1986 இல் ரெலோ மீது புலிகள் தாக்குதலைத் தொடுத்த போது) முடிவுக்கு வந்தது. சகோதரப் படுகொலையாகத் தொடங்கிய இயக்க மோதல்கள் எதிர்த் தரப்புக்குத் தாராளமாக வாய்ப்பை அளித்தன. ஒடுக்குமுறையை மேற்கொள்ளும் இலங்கை அரசாங்கத்தை எதிர்க்கும் நோக்கோடு உருவாகிய இயக்கங்கள், அதே அரசாங்கத்துக்குச் சேவகம் செய்யும் நிலை உருவாகியது. இதை விட மோசமான கேவலமான அரசியல் வேறு இருக்குமா? இங்கே உள்ள வேடிக்கை என்னவென்றால், அரசாங்கத்துடன் சேர்ந்த இயக்கங்களும் அரசாங்கத்தை நோக்கித் தள்ளிய விடுதலைப் புலிகளும் இறுதியிலும் இறுதியாக அரசாங்கத்துக்கே சேவகம் செய்துள்ளன. இறுதி விளைவு அதையே காட்டியது. நிரூபித்தது. அதையே இன்று தமிழ்ச் சமூகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. விடுதலை இயக்கங்களின் கதையும் நிலையும் இது என்றால், ஜனநாயக வழியில் பயணிக்கும் தமிழ் அரசியற் கட்சிகளின் கதையும் நிலையும் கூட இப்படித்தான் உள்ளது.

ஆகவே தமிழ் அரசியல்வாதிகள் தங்களின் குறுகிய சுயநலன்களுக்காகவும், நாடாளுமன்ற ஆசனங்களுக்காகவும் மோதிக்கொள்ளும் போது, பேரினவாதச் சக்திகள் மகிழ்ச்சியடைகின்றன. கடந்த பொதுத்தேர்தலில் NPP வடக்குக் கிழக்கில் வெற்றியீட்டியதை NPP மட்டுமல்ல, அனைத்துச் சிங்களத் தரப்பும் வரவேற்றுக் கொண்டாடியது. எதை அவர்கள் எதிர்பார்த்தார்களோ, அது சுலபமாக நிறைவேறியிருக்கிறது என்றால், கொண்டாடாமல் இருப்பார்களா? இந்த நிலை தொடருமானால், தமிழர்களின் தாயகக் கோட்பாடு, சுயநிர்ணய உரிமை மற்றும் போர்க்குற்றங்களுக்கான நீதி கோரல் போன்ற அடிப்படைக் கோரிக்கைகள் எல்லாம் மிக எளிதாகவே நீர்த்துப் போய்விடும்.

தமிழ்ச் சமூகம் இன்று எதிர்கொள்ளும் இந்தச் சிதைவில் இருந்து மீண்டு, சுயநிர்ணய உரிமைக்கான அரசியல் போராட்டத்தை அல்லது பொருத்தமான அரசியல் தீர்வை முன்னோக்கி நகர்த்த ஒரு கூட்டுத் தலைமை அல்லது வழிகாட்டும் தலைமை அவசியமானது. இதற்கான காரணங்கள் —

அ) சிதறடிக்கப்படும் மக்கள் சக்தியை ஒருங்கிணைக்க (Consolidation of Power) ஆளுமை மிக்க தலைமையும் தெளிவான நிலைப்பாடும் வேண்டும். தனித்தனியாகப் பிரிந்து கிடக்கும் போது தமிழ் மக்கள் வெறும் 'வாக்காளர்களாக' மட்டுமே சுருக்கப்படுகிறார்கள். அரசியல் சக்தியாக இல்லை. ஆகவே அப்படியான வாக்காளர்கள் திசைமாற்றப்படுவது இலகுவாகும்.

ஒரு வலுவான தலைமையினால் மட்டுமே, கருத்து வேறுபாடுகளுக்கு அப்பால், தேசம் மற்றும் உரிமை என்ற புள்ளியில் மக்களை "அரசியல் சக்தியாக" (Political Force) திரட்ட முடியும். கூட்டுப் பொறுப்பையும் அதற்கான ஒழுக்கத்தையும் (Political Discipline) உருவாக்க தற்போதைய சூழலில் கட்சிகளுக்கோ, தலைவர்களுக்கோ இயலுமை கிடையாது. அவர்களிடம் அதற்கான அரசியல் ஒழுக்கமும் கட்டுப்பாடும் முன்மாதிரித் தன்மையும் இல்லை. யார் வேண்டுமானாலும் எந்த நேரத்திலும் கட்சி மாறலாம், கொள்கையை விட்டுக் கொடுக்கலாம். இன்னொரு கட்சியைத் திடீரென ஓரிரவுக்குள் உருவாக்கிப் பிரிந்து செல்லலாம் என்ற நிலை உள்ளது. தூரநோக்குள்ள தலைமைத்துவக் கட்டமைப்பு இருக்கும் போது மட்டுமே, மக்கள் பிரதிநிதிகள் கொள்கை பிறழாமல், நடைமுறையில் தெளிவும் உறுதிப்பாடும் கொண்டுசெயல்படுவதை உறுதிப்படுத்தமுடியும்.

ஆ) சர்வதேசப் பரப்பில் நம்பகத்தன்மையையும் மதிப்பையும் நிலைப்படுத்துவதற்கு (International Credibility) ஒழுங்கான வினைத்திறன் மிக்க, அறிவுபூர்வமான தலைமைத்துவம் வேண்டும். சர்வதேச சமூகம் அல்லது உலக நாடுகள் ஒரு தேசிய இனத்தின் சிக்கலை அணுகும் போது அந்த இனத்தின் சார்பில் பேசுவதற்கு நம்பகமான, உறுதியான பிரதிநிதித்துவத்தை அல்லது கூட்டுத் தலைமையையே எதிர்பார்க்கின்றன. தமிழ்த் தரப்பு நூறு துண்டுகளாக உடைந்து கிடக்கும் போது, சர்வதேச நாடுகள் தங்களுக்குச் சாதகமான பொம்மைத் தலைமைகளை உருவாக்கி, தமிழர்களின் ஒட்டுமொத்த அரசியல் அபிலாஷைகளை மழுங்கடிக்கச் செய்துவிடும்.

இந்த இடத்தில் நாம் சர்வதேசஆதரவு அல்லது சர்வதேச அணுகுமுறை பற்றிச் சுருக்கமாகவேனும் பேசவேண்டியது அவசியமாகும்.

வல்லரசு நாடுகள் (இந்தியா,அமெரிக்கா, சீனா, ரஷ்யா போன்றவை) ஒரு சமூகத்தின் விடுதலையை விட, தங்களின் சொந்தப் பிராந்திய, பொருளாதார நலன்களுக்குச் சாதகமாகச் செயல்படும் தலைவர்களையே ஆதரிக்கின்றன. அல்லது உருவாக்க முயல்கின்றன. விடுதலை அமைப்புகளுக்குப் பணமும் ஆயுதமும் வழங்கி,தங்களின் எதிரி நாடுகளைப் பலவீனப்படுத்த வல்லரசுகள் இத்தலைமைத்துவங்களைப் பயன்படுத்துகின்றன. இதனால் உண்மையான விடுதலை இலக்கு சிதைந்து போகிறது. இதற்கு உலகெங்கும் பல உதாரணங்கள் உண்டு. இந்தியா ஈழ விடுதலை இயக்கங்களைக் கையாண்டது கூட அப்படியான ஒன்றே.

ஆகவே, சர்வதேச நாடுகளின் பூகோள அரசியல் தந்திரோபாயங்களையும் (Geopolitical strategies) அழுத்தங்களையும் விடுதலைச் சமூகத்தின் தலைமைத்துவம் திறம்பட எதிர்கொள்ள வேண்டும். இதற்குப் பலமுனை இராஜதந்திரம் (Multi-Vector Diplomacy) அவசியமானது. அதற்கான பயிற்சியும் அவசியம். முக்கியமாக எப்போதும் நாம் ஒரே நாட்டைச் சாராதிருக்க வேண்டும் என்ற புரிதல் வேண்டும். இந்திய — சீன ஆதிக்கப்போட்டியை சிங்களத் தரப்பு எப்படிச் சுலபமாகத் தந்திரோபாயமாகக் கையாண்டு வருகிறது என்பதை நாம் கவனிக்கலாம்.

அண்மையில் ஈரான் — அமெரிக்க யுத்தம் நடைபெற்றபோது அந்த நெருக்கடிச் சூழலில் இலங்கை மிகச் சாதுரியமாக ஈரான் கப்பல் விடயத்தைக் கையாண்டது இன்னொரு உதாரணம். ஆகவே ஒரு குறிப்பிட்ட வல்லரசை மட்டும் நம்பியிருக்காமல், உலகளாவிய ரீதியில் பல நாடுகளுடன் (அமெரிக்கா, சீனா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா உள்ளிட்ட பிராந்திய நாடுகள் என) சமமான உறவைப் பேண வேண்டும். ஆனால், தமிழர்கள் இந்தப் புரிதலற்று சீனா, ரஸ்யா போன்ற நாடுகளை விரோதச் சக்தியாகவே பகிரங்கமாக நோக்குகின்றனர். உலகளாவிய அரசியல், பொருளாதார அசைவியக்கத்தில் இன்று சீனாவின் வகிபாகத்தைப் புரியக் கூடியவர்கள் சீனாவைப் புறந்தள்ளும் எதிர்நிலையில் வைக்கும் முட்டாள்தனமான வேலையைச் செய்ய மாட்டார்கள்.

இவ்வளவுக்கும் சீனப் பிரதிநிதிகள் இப்பொழுது வடக்குக் கிழக்குக்கு வந்து தமிழ் மக்களின் சார்பான தரப்புகளுடன் பேச விழைகிறார்கள். எனினும் பிராந்திய சக்திகளின் அழுத்தம் கூடுதலாக இருக்கக் கூடும். குறிப்பாக இந்தியாவினுடைய அழுத்தத்தை. அதை எப்படி எதிர்கொள்வது(23ம் பக்கம் பார்க்க)



இன்று $200,000 வரை ஒரு புதிய வீட்டின் மீது மிச்சப்படுத்திடுங்கள் நாளை அது நிறைய குடும்பங்களாகவும் நிறைய வீடுகளாகவும் பெருகும்



புதிய வீட்டின் மீது $200,000 வரையிலும் எவ்வாறு மிச்சப்படுத்துவது என்பதை பின்வரும்இணையப் பக்கத்தில் அறிந்துகொள்ளுங்கள்:

ontario.ca/MoreHomesFaster

Ontario

ஒன்ராறியோ அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வெளியிடப்பட்டது.

# கிளிநொச்சி விபத்துகள்

(17ம் பக்கத் தொடர்ச்சி) என்ற மாதிரியே நடக்கின்றன. இதில் துயரம் என்னவென்றால், இவையெல்லாம் பயணிகளோ மக்களோ பெரிதாகக் கண்டு கொள்வதில்லை. விபத்து நடக்கும்போது மட்டும் வாய்க்கு வந்தபடி திட்டத் தீர்க்கிறார்கள். பிறகு அவர்களும் வழமைக்குத் திரும்பி விடுகிறார்கள். இவையெல்லாம் மனிதர்களுடைய தவறுகள்.

அடுத்தது, உள்கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளினால் ஏற்படும் விபத்துக்கள். இதற்கான காரணம், பாதுகாப்பற்ற பாதசாரி கடவைகள், போதிய வீதி விளக்குகள் இன்மை, குறுகிய மற்றும் சேதமடைந்த வீதிகள் போன்றவை காணப்படுகின்றன. அடுத்த காரணம், வண்டிகளின் பிரேக் கோளாறு, தேய்மானமடைந்த டயர்கள் மற்றும் தரமற்ற வாகனங்களின் பயன்பாடு போன்றவை உள்ளன.

இவையெல்லாம் சரியான முறையில் மதிப்பிடுவதற்கும் ஆய்வு செய்வதற்கும் பொலிஸ், நீதிமன்றம், மருத்துவமனை வட்டாரங்கள் போன்றவை உள்ளன. விபத்துப் பதிவுகளில் இருந்தே இதற்கான தகவல்களைச் சரியாகத் திரட்டிக் கொள்ள முடியும். குறிப்பாக என்ன காரணத்தினால் குறித்த விபத்து நடந்தது? எந்தப் பகுதிகளில் அதிகமான விபத்துகள் நடக்கின்றன? எவ்வாறான வண்டிகள் விபத்துக்குள்ளாகின்றன? எந்தெந்த நேரங்களில் விபத்துகள் நிகழ்கின்றன? என ஒவ்வொன்றையும் பகுப்பாய்வு செய்தால், அவற்றைத் தடுப்பதற்கான பொறிமுறைகளையும் ஏற்பாடுகளையும் மேற்கொள்ள முடியும். இதற்கான முதன்மைப்பொறுப்பு அரசுக்கே உண்டு. கூடவே சமூகத்துக்கும் உண்டு. ஆக இதொரு கூட்டுச் செயற்பாடாகும்.

இதைச் செயற்படுத்துவதற்கு ஆரம்ப கட்ட நடவடிக்கையாக அதிவேகம் மற்றும் மதுபோதையில் வாகனம் ஓட்டுபவர்களுக்கு கடுமையான அபராதங்கள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரத்தை ரத்து செய்யும் சட்டங்களை அமல்படுத்துதல். முக்கிய வீதிகளில் நவீன வேக கண்காணிப்பு கேமராக்களை (CCTV & Speed Radars) நிறுவுதல். பாதசாரிகளுக்கான பாதுகாப்பான கடவைகள், மேம்பாலங்கள் மற்றும் பிரத்தியேக நடைபாதைகளை அமைத்தல். மோட்டார் சைக்கிள் மற்றும் மிதி வண்டிகளுக்கென தனிப் பாதைகளை (Dedicated lanes) உருவாக்குதல். பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளில் தானியங்கி வாயில்கள் (Automatic Gates) மற்றும் எச்சரிக்கை சமிக்ஞைகளை நிறுவுதல். சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் செயல்முறையை சிறப்புத் தரத்தின தாக்குதல். குறிப்பாக நிபந்தனைக்குட்பட்ட முறையில். மற்றும் முறையான பயிற்சிகளை வழங்குதல்.

பள்ளிப் பருவத்திலிருந்தே வீதிப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு திட்டங்களை முன்னெடுத்தல். வீதியில் பயணிக்கும் அனைத்து பொது மற்றும் தனியார் வாகனங்களின் தொழில்நுட்பத் தகுதியை (Vehicle Fitness) சீரான இடைவெளியில் பரிசோதிப்பதை கட்டாயமாக்குதல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும். முக்கியமாக காவல்துறை வீதிக் கண்காணிப்பில் ஈடுபடுவது விபத்துகளைத் தடுப்பதற்குப் பதிலாக, வசூல் செய்வதற்கே நிற்கிறது என்ற எண்ணத்தை மக்களிடமிருந்து போக்க வேண்டும். அது முதற்பணியாகும்.

விபத்துகளைத் தடுப்பது என்பது, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான அடிப்படைகளில் ஒன்று. போரினாலும் இன ஒடுக்குமுறையினாலும் பல லட்சம் உயிர்களை இழந்த சின்னஞ்சிறிய நாடு, விபத்தினாலும் உயிர்களை இழப்பதென்பது ஏற்கவே முடியாதது.

# தமிழ் அரசியலில் தலைமைத்துவ வெற்றிடம்!

(22ம் பக்கத் தொடர்ச்சி) என்பதற்கும் அறிவுசார்ந்து சிந்திப்பது அவசியம். அரசியல் என்பது சொந்த விருப்பு வெறுப்புகளின் பாற்பட்டதோ, உணர்ச்சிகரமானதோ அல்ல. அது அறிவுபூர்வமானது. விஞ்ஞான ரீதியானது. எனவே ஒவ்வொரு நடவடிக்கையும் மக்களின் நலன் என்ற அடிப்படைச் சிந்தனையிலிருந்து மேற்கொள்ளப்படுவது அவசியமானதாக உள்ளது. என்பதால் சர்வதேச சமூகத்தோடு ஒடுக்கப்பட்ட பிற சமூகங்கள், சர்வதேச மனித உரிமை அமைப்புகள் மற்றும் உலகளாவிய சிவில் சமூகங்களுடன் (Civil Society) வலுவான தொடர்பாடலையும் உருவாக்க வேண்டும். அப்போது நமக்கான பலம் மேலும் அதிகரிக்கும்.

இதேவேளை சமூகத்திற்குள் இருக்கும் பலவீனமான அல்லது மாற்றுச் சிந்தனைக் குழுக்களுக்குச் சர்வதேச நாடுகள் தந்திரமாக ஆதரவளித்து, முதன்மைத் தலைமைத்துவத்தைப் பலவீனப்படுத்தக் கூடிய நிலை உள்ளது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். கூடவே சர்வதேச அமைப்புகளும் பிற நாடுகளும் அமைதிப் பேச்சுவார்த்தை என்ற பெயரில், அடிமட்ட மக்களின் கோரிக்கைகளுக்கு மாறான சமரசங்களை ஏற்குமாறு தலைவர்களுக்கு அரசியல் அழுத்தங்களை வழங்குகின்றன. இது உலகளாவிய நிகழ்ச்சி நிரலில் நடப்பது. சர்வதேச நாடுகளின் அமைப்புகளின்இந்தத் தலையீடுகளைக் கையாள்வதற்கு, ஒரு சமூகத்தின் தலைமைத்துவம் இராஜதந்திர முதிர்ச்சியுடனும் சுயாதீனமான பொருளாதார அரசியல் பலத்துடனும் இயங்குவது அவசியமாகும். (தொடரும்)

# Reecha:- ஒரு கனவில் விழுந்த கல்

(18ம் பக்கத் தொடர்ச்சி) ஆனால், அது வேறானது மட்டுமல்ல, அரசியல் என்பது அவருடைய தெரிவு, அந்தத் தெரிவுக்குள்ள உரிமை அவருக்குண்டு. என்றாலும் அதனால் தமிழ்ச் சமூகத்துக்கு பாதகமும் பின்னடைவும் ஏற்படுமாக இருந்தால், அதனை நாம் எதிர்த்தே ஆக வேண்டும்.

சரிகளையும் பிழைகளையும் சரியாக மதிப்படவும் அளவிடவும் வேண்டும். அதுதான் பெறுமதிகளைப் பற்றிய கரிசனையையும் பெறுமதிகளைச் சேர்க்கக் கூடிய வழிமுறைகளையும் உருவாக்கும். ReeChaவிலும் அதை நாம் கைக் கொள்ள வேண்டியது காலப் பணி. சமூகத் தேவை.


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- Vistation
- Funeral & Memorial Service
- Reception
- Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826



Christeen Seevaratnam
416-258-6759

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com




# ஜனாதிபதியின் நல்லிணக்கத்திற்கு தொல்லியல் திணைக்களம் இடைஞ்சல் - இந்துமத பீடம் விசனம்




கன்னியா வெந்நீரூற்று சிவன் ஆலய நித்திய பூஜை தடுத்து நிறுத்தப்பட்டது, ஆடி அமாவாசை தர்ப்பணத்திற்கு தொல்லியல் தினைக்களம் இடையூறு விளைவித்தமை இந்து மக்களிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது என சர்வதேச இந்துமத பீட செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமசாந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார். குறித்த சம்பவம் தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்று சிவன் கோவிலின் நித்திய பூஜைகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதோடு ஆடி அமாவாசை தினத்தன்று தொல்லியல் திணைக்களம் பிதிர் தர்ப்பணத்திற்காக சென்றவர்கள் சிவன் ஆலயத்தை தரிசிப்பதற்கு சென்றவர்கள் அவர்களால் வெளியேற்றப்பட்டு பின்னர் வெளிநாட்டு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா மூலம் அவர்களுக்கான அனுமதி வழங்கப்பட்டு பல சிரமங்களுக்கு மத்தியில் கொடுக்கப்பட்டது.

இந்த செயற்பாடு இந்துக்களின் புனித நாளான ஆடி அமாவாசையில் மட்டுமல்ல சிவனை தரிசிப்பதற்கு தொல்லியல் திணைக்களம் ஏற்படுத்தும் இடையூறுகளால் இந்து மக்களிடையே ஒரு விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க சகல மதத்திற்கும் சமத்துவம் கொடுத்து கௌரவப்படுத்த வேண்டும் என அடிக்கடி கூறி வருகிறார். ஜனாதிபதியின் மத நல்லிணக்கத்திற்கு தொல்லியல் திணைக்களம் இடைஞ்சல் ஏற்படுத்தி வருகின்றது. ஆகவே ஜனாதிபதி இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுள்ளது.

இதேவேளை மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் இரவோடு இரவாக வரலாற்றை மாற்ற தொல்பொருட் திணைக்களம் மேற்கொண்ட அத்துமீறல் முயற்சி தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் வெளிக்கொணர்ந்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் தொல்பொருட்திணைக்களம் ஆலய வளாகத்திற்குள் ஆலய நிர்வாகத்திற்கு தெரியாமல் இரவு நேரத்தில் இது தொல்பொருட்திணைக்களத்திற்குரிய இடமென்று பெயர்ப்பலகை நாட்டியுள்ளது.

அந்த பெயர்ப்பலகையில் ஆலய வளாகத்தில் ஒரு அபிவிருத்தியும் மேற்கொள்ளக்கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறு இரவு நேரத்தில் இவ்வாறு செய்ய முடியும். இந்த ஆலயம் பாடல் பெற்ற திருத்தலமாகும். ஆலயச் சூழல் தொல்பொருளுடன் தொடர்புடையது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், ஆலய நிர்வாகத்திற்கு தெரியாமல் குறித்த பெயர்ப் பலகையை நாட்டியது மட்டுமல்லாமல், அந்த பெயர்ப்பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள வாசகங்கள் கூட அந்த ஆலயத்தின் உண்மையான வரலாற்றை மாற்றியமைப்பதாக உள்ளது.

குறித்த ஆலய வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட மகாலிங்கம் தொடர்பாகவும் நந்தி தொடர்பாகவும் எதுவும் குறிப்பிடப்படாமல் முற்றிலுமாக வரலாறு மறைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் மாவட்ட அரசாங்க அதிபருக்கு தெரியுமா என கேட்க விரும்புகிறேன். ஏற்கனவே அங்கு அகழ்வாராய்ச்சிகள் நடந்த இடங்களில் சில பதாகைகள் தொல்பொருட் திணைக்களத்தால் நாட்டப்பட்டிருக்கின்றது. அதற்கு மேலதிகமாகவே இவை தற்போது யாருக்கும் அறியப்படுத்தப்படாமல் நாட்டப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

# ஈரானில் கணவனின் நண்பரின் பாலியல் தாக்குதலை தடுத்ததால் தூக்கிலிடப்பட்ட 23 வயதான இளம் பெண்!

ஈரானில் பாலியல் தாக்குதலுக்கு முயன்ற ஒருவரிடமிருந்து தற்காப்புக்காகச் செயல் பட்டதாகக் கூறிய 23 வயதான மர்ஸியே நெய்ரி தூக்கிலிடப்பட்டுள்ளார். அந்தத் தண்டனை 2026 ஆகஸ்ட் 8 அதிகாலை கஸ்வின் மத்திய சிறையில் நிறைவேற்றப்பட்டது. குடும்ப அழுத்தத்தின் காரணமாக தனது 17-வது வயதில் திருமணம் செய்து கொண்டதாகக் கூறப்படும் நெய்ரி, 2021 அக்டோபரில் தனக்கு 18 வயதாக இருந்தபோது, மதுபோதையில் இருந்த தனது கணவரின் தொழில் கூட்டாளி ஒருவர் தன்னை பாலியல் ரீதியாகத் தாக்க முயன்றதாக தெரிவித்திருந்தார்.

அப்போது தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சமையலறைக் கத்தியைப் பயன்படுத்தியதாகவும், ஏற்பட்ட மோதலில் அந்த நபரும் தனது கணவரும் உயிரிழந்ததாகவும் அவர் நீதிமன்றத்தில் கூறியிருந்தார்.

சம்பவத்துக்குப் பின்னர் சில நாட்களில் அதிகாரிகளிடம் சரணடைந்த அவர், தனது செயல் தற்காப்புக்காக மேற்கொள்ளப்பட்டது என வாதிட்ட போதும், ஈரான் நீதிமன்றங்கள் அந்த வாதத்தை ஏற்கவில்லை. இதையடுத்து, ஈரானின் 'கிசாஸ்' எனப்படும் பழிக்குப் பழி சட்ட நடைமுறையின் கீழ் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. 2026ஆம் ஆண்டில் இது வரை ஈரானில் தூக்கிலிடப்பட்ட பெண்களின் எண்ணிக்கை குறைந்தது 14 ஆக உயர்ந்துள்ளதாக மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

தன்னை பாலியல் ரீதியாகத் தாக்க முயன்ற ஒருவரைக் கொன்றதாகக் கூறப்பட்ட வழக்கில் 2014ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்ட ரெய்ஹானே ஜப்பாரியின் வழக்குடன் நெய்ரியின் வழக்கும் ஒப்பிடப்படுகிறது.

ஈரானின் இஸ்லாமிய குற்றவியல் சட்டத்தில் 'கிசாஸ்' உள்ளிட்ட நடைமுறைகள் மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் சட்டப் பாதுகாப்பு குறைபாடுகள் குறித்து மனித உரிமை அமைப்புகள் தொடர்ந்து கடுமையான



விமர்சனங்களை முன்னை வத்து வருகின்றன. இருப்பினும், நெய்ரி பாலியல் தாக்குதலுக்கு உள்ளானார் என்பது நீதிமன்றத்தால் நிரூபிக்கப்படவில்லை ஆனால் அவர் முன் வைத்தது தற்காப்பு வாதம் என்று செய்திகள் கூறுகிறது.